

07 "முகவர்கள் ஹஜ்ஜின் இறுதியில் அழுது துஆக் கேட்டு பாவங்களைக் கழுவி விடுவதால் ஹாஜிகள் முறைப்பாடு செய்வதில்லை"

எம்.எச். அப்துல் ஹலீம்
தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர்

நுஸ்ரான் பின்னூரி வைத்தியம்:



விமர்சனங்கள் பற்றிய பார்வை 10



09 மத்திய கிழக்கு புவி அரசியலும் தேசங்களின் சிதைவும்






# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 398 • 20 ஜூலை 2018 வெள்ளிக்கிழமை • துல் கஃதா 1439 • விலை 40.00









# முஸ்லிம் தனியார் சட்டம்

## இருதரப்பு முன்மொழிவுகள் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு



முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை முன்வைப்பதற்கென முன்னாள் நீதி அமைச்சர் மிலிந்த மொரகொடவினால் 2009 இல் நியமிக்கப்பட்ட நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் நீண்ட கால முயற்சிகளுக்குப் பின்னர் கடந்த ஜனவரியில் தமது அறிக்கையை நீதி அமைச்சர் தலதா அதுகோரளவிடம் கையளித்திருந்தனர். 19 பேர் கொண்ட இந்தக் குழுவினரில் நீதியரசர் ஸலீம் மர்சூப் தரப்பிலான அணியினர் வேறாகவும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி தரப்பிலான அணியினர் வேறாகவும் இரு அறிக்கைகளை முன்வைத்திருந்தனர். (பக். 02)

## இலங்கையின் அபிவிருத்திக்கு அமெரிக்கா 8000 கோடி உதவி



இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா இலங்கைக்கு ரூபா 8000 கோடி நிதி உதவி வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்க ஒத்துழைப்பு செயற்றிட்ட அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார். (பக். 14)

## எந்த இராணுவ முகாமும் அகற்றப்பட மாட்டாது



பொறுப்பான இராணுவம் என்ற வகையில் எந்த இராணுவ முகாமும் மூடப்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க அறிக்கை விடுத்துள்ளார்.

யுத்த காலங்களில் வெற்றிகரமாக முகம் கொடுத்து யுத்தத்தை வெல்வதற்கு உதவியது போல, யுத்தமில்லாத தற்போதைய சூழலில் (பக். 14)

## இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்காக குடும்பக் கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும்



நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்றால் எல்லா இனங்களுக்கும் பொதுவாக குடும்பக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டும் என சாந்தி நிலையத்தின் தலைவர் கொட்டபொல அமரகீர்த்தி ஹிமி தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஒவ்வொரு தந்தையும் 3 அல் லது 4 பிள்ளைகளுக்கு தம்மை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் தானாக உருவாகிவிடாது. அவற்றுக்கென பொதுவான கொள்கையொன்று (பக். 14)

## அயோத்தியிலிருந்து இராவணனைத் தேடி வரும் 'ராமாயணம்'



ராமாயணத்துடன் தொடர்புடைய இடங்களை இணைக்கும் வகையில் இந்திய அரசாங்கம் புகையிரத சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளது. இராமர் பிறந்த இடமான அயோத்தியிலிருந்து சீதை சிறை வைக்கப்பட்ட இலங்கை இருப்பிடங்களை நோக்கி இந்தப் புகையிரதப் பயணம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் மதத்தல யாத்திரை சுற்றுலாவை ஊக்குவித்து (பக். 14)

## பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு



தற்போது தொழில் அற்றிருக்கும் பட்டதாரிகள் பல கட்டங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பெறுவர் என தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பின் போது வெளிவாரிப் பட்டதாரிகளும் உள்வாங்கப்படுவர். (பக். 14)

## மீண்டும் வரும் கூகுள் பலூன்




பெப்ரவரி 2016 இல் தரையிறங்கி சேதமடைந்த தன் பின்னர் மீண்டும் கூகுள் பலூன் (Google Loon) திட்டத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்கு சர்வதேச தொலைத் தொடர்புகள் ஒன்றியம் தீர்மானித்திருக்கிறது. தொலைத் தொடர்புகள், டிஜிட்டல் கட்டமைப்பு அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (பக். 14)

## வடக்கிலும் சஞ்சரிக்கும் இந்தியன் அம்புலன்ஸ்




மேற்கு தென் மாகாணங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இந்திய இலவச அம்புலன்ஸ் சேவை நாளை (21) முதல் வட மாகாணத்திலும் தனது பணியை விஸ்தரிக்கவுள்ளது. இந்த சுவசரிய அம்புலன்ஸ் சேவையின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (பக். 14)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கோ இருக்கும் தாரிக் ரமழானுக்காக?

- அக்ரம் முனீர்



பிரபல ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விரிவுரையாளர் தாரிக் ரமழான் பாலியல் குற்றம் சுமத்தப்பட்டு பிரான்ஸ் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நிலையில், வீண் பழி சுமத்தாமல் இவரை விடுவிக்கக் கோரி இலங்கையிலும் ஆர்ப்பாட்டம்.

'எங்கோ இருக்கும் தாரிக் ரமழானுக்காக?' என்று எங்களை பார்த்து விழிப்பவர்கள், அதே கைகளால் 'உலகில் எங்கோ நடக்கும் அநீதியொன்றை கண்டு பொங்கி எழுந்தால் நீயும் என் நண்பனே!' என்ற சேகுவேராவின் கருத்தை பகிர்ந்து கொள்வதன் பின்னால் உள்ள முரண்நகையை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

## கண்ணியத்துடன் நுஸ்ரான் பின்னூரியின் கொள்கைக்கு ஆதரவு வழங்கும் உங்களுக்கு...!

- எம்.ஆர்.ஹஸீம் டீன்

எமது நாட்டில் காலத்திற்கு காலம் ஏதாவது ஒரு அசம்பாவித சம்பவம் இடம்பெறும். அதில் அரசியல் தான் முதலிடம். ஆனால், இஸ்லாமிய சமூகத்தின் அண்மைக் கால சம்பவம் நுஸ்ரான் பின்னூரியுடைய (6 நாள் வைத்திய பயிற்சியும், அவர் கூறும் இஸ்லாமிய மருத்துவமும்) வரவு.

இலங்கையில் அதிக உறுப்பினர்களை கொண்ட தப்லீக் ஜமாஅத்தினரின் அரவணைப்பில் தனது பேச்சாற்றலைக் கொண்டு வியாபார நோக்கத்துடன் இலங்கை முஸ்லிம்களை ஒரு பாதாளத்தை நோக்கி நகர்த்தும் பணியில் இந்த நுஸ்ரான் ஈடுபட்டுள்ளமை முழு நாடும் அறிந்த விடயமே.

எமது சமூகத்தின் எல்லா வளர்ச்சிகளுக்கும் ஹராம் என்ற ஃபத்வாவை கொடுத்து மக்களை குருடர்களாகவும், செவிடர்களாகவும், புத்தி இழந்தவர்களாகவும் முடக்கி விட்டு தனது வியாபாரத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதை இதுவரை யாரும் பகிரங்கமாக எதிர்க்கவில்லை ஏன் ?

எமது சமூகத்தின் தலைமைத்துவமாக இருக்கும் ஜம்இய்யத்துல் உலமா சபை கூட, ஒருவருடைய குறையை மறைத்தால் அல்லாஹ் உங்கள் குறைகளை மறைப்பான் என்ற ஹதீஸை அடிப்படையாக வைத்து அமைதி காத்து வருகின்றனர். ஜம்இய்யத்துல் உலமா சபையின் ஓட்டைகளையும் குப்பை விடயங்களையும் நன்கறிந்தவர் நுஸ்ரான் பின்னூரி.

அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முஃப்தி கூட கல்வியின் தேவையை ஆழமாக கூறியிருந்தார்.

அதேநேரம், நுஸ்ரானுடைய கொள்கையை ஆதரிக்க வேண்டாம் என்று சொல்லி இருந்தால் உண்மையில் அது வரவேற்கக் கூடியதாக இருந்திருக்கும். அப்படி அவர் பேசவில்லை

இதனை எதிர்த்து தனியாகவும், குழுக்களாகவும் களமிறங்கிய எமக்கு ஏகப்பட்ட ஏச்சும் பேச்சும் வீண் விமர்சனங்களும் மட்டுமே மிஞ்சியது.

# தினம் ஒரு 10 ரூபா! கெலிஓயாவில் இருந்து ஓர் முன்மாதிரி!

- ஸப்னாஸ் ஸரூக்

சுமார் 1600 இற்கு மேல் குடும்பங்கள் வாழும் கெலிஓய பிரதேசத்தில் நடைபெறும் ஓர் விடயம் உண்மையில் என்னை பல வகையில் சிந்திக்கத் தூண்டியது. அதனை உங்களிடம் இங்கு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

சில வருடங்களுக்கு முன் கெலிஓய பெரிய பள்ளிவாயலின் நிர்வாகத்தினரால் சுமார் 1000 உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒவ்வொரு வீடு வீடாக கொடுக்கப்பட்டது. இதன் போது தினமும் பத்து ரூபாய் உண்டியலில் இடுமாறு கூறப்பட்டதோடு மேலதிகமாக ஸதகாவின் மகிமையும் அவ் வீட்டில் உள்ள குடும்பத் தவருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

சுமார் ஒவ்வொரு 3 மாதத்துக்கு ஒரு முறை உண்டியல்களை மீளப்பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டு, ஊரில் உள்ள முக்கியஸ்தர் ஒருவர் இதற்கு பொறுப்பாக்கப்பட்டார். காலங்கள் ஓடின. பெரும்பாலும் அன்றாட வருமானத்தை நம்பி வாழும் குடும்பங்கள் இருக்கும் கெலிஓய மக்களின் வீடுகளில் இருந்த உண்டியல்கள் நிறையத் தொடங்கின. பின் அவர்களே நிறைந்த உண்டியல்களை குறித்த பொறுப்பாளர்களின் வீடுகளுக்குக் கொண்டு சென்று கொடுக்கத் தொடங்கினார்.

இவ்வாறு உண்டியலை கொடுக்கும் போது தாய்மார்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் கூறிய கருத்துக்கள் இவை. 'எண்ட கடைசி மகள் சல்லிய கண்டா ஓடி போய் பள்ளிக்கு சல்லி எண்டு உண்டியலில் போடுறால்' 'எனக்கு உடம்பு ஏலாம போனா 10 ரூபா போட்டு இரண்டு ரக்காத் தொழுவேன் லேசாகிடும்' 'நல்ல விடயத்துக்கு வெளிய போற எண்டா 10 ரூபா போட்டுட்டு துஆ ஓட போங்கோ எண்டு மனிசி கத்துறா' என்று தம் மகிழ்ச்சியை நிர்வாகத்திடம் கூறினர்.

குறித்த நிர்வாகத்தினரின் வீட்டிலே அனைத்து உண்டியல்களும் உடைக்கப்பட்டு எண்ணப்பட்டு கணக்கு பள்ளி நிர்வாகத்திடம் கொடுக்கப்படும்.

இப்படி 3 மாதத்துக்கு ஒரு முறை சுமார் 10 தொடக்கம் 12 இலட்சம் கிடைக்கப் பெற்றது.இவ்வாறு கிடைக்கப் பெறும் பணம் ஏழைக் குடும்பங்களின் அவசர மருத்துவ தேவை, பள்ளிவாயல் தேவைகள், ஜனாசா தேவை மற்றும் ஊர் நலன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு பயன்படுத்தப்பட்டது.

உதாரணமாக, இந்த விடயத்தினை அக்கரைப்பற்று மண்ணில் நடைமுறைப்படுத்தினால்?

அக்கரைப்பற்று மண்ணில் சுமார் 12,000 குடும்பங்கள் வாழ்கின்றனர். இதில் நாம் 6,000 குடும்பத்திற்கு மட்டும் இந்த செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதாய் எண்ணுவோம்.

மாதத்திற்கு 300/-, ஆகவே மொத்தம் 300/- * 6,000/- = 1,800,000 ரூபா (1.8 மில்லியன்) மாதாந்தம் கிடைக்கபெறும். இது உண்மையில் பெரும் தொகை. இதன் மூலம் இன்றைய அக்கரைப்பற்று மண்ணின் பின்வரும் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும்.

1. அவசர மருத்துவ தேவை (புற்று நோய்,சிறு நீரக பிரச்சினை...)
2. மலசல கூடம் மற்றும் நீர் இணைப்பு.
3. ஏழை மாணவர்களுக்கான கல்விக்கான உதவி.
4. பள்ளி மூஅத்தின்களை கவனித்தல்.
5. கவனிப்பாரற்ற முதியோர்களைக் கவனித்தல்.

இது போன்ற விடயங்களை எம்மால் இலகுவாக செய்து விட முடியும்.


தினம் பத்து ரூபா என்பது மிக மிக சிறிய பணமே. ஆனால் இதன் மூலம் பெரும் நல்ல விடயங்களை அரங்கேற்ற முடியும்.

அத்தோடு இப்பணிக்கு அக்கரைப்பற்று 6 பிரிவுகளுக்கும் 6 பேரை வேலைக்கு அமர்த்த முடியும். இவர்களுக்கு மாதம் ஒரு 10,000 ரூபா சம்பளம் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கும் ஒரு வாழ்வாதாரத்தை ஏற்படுத்த முடியும் .

எனவே இது குறித்து சமூக ஆர்வலர்கள் சிந்தித்தால் உண்மையில் சிறப்பான விடயங்களை முன்னெடுக்க முடியும்.

## CARTOON OF THE WEEK

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டால் மரண தண்டனை - செய்தி




## வாசகர் கருத்து

- ராஸிட் ரஸ்மிகான்

10 வருடத்திற்கும் மேலாக மீள்பார்வையின் வாசகனாக உள்ளேன். உண்மையில் சமூகத்தில் அதிர்வை ஏற்படுத்திய பத்திரிகை. எனது ஆக்கங்களும் வெளிவந்தன. வாசகர் வட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும், கருத்துக் கணிப்பீடு இடம்பெற வேண்டும்.



## ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மாநாடு கல்வி சமூகம் சார்ந்த பங்களிப்புக்காக 9 பேர் பாராட்டி கௌரவிப்பு

நாளை (21 ஆம் திகதி சனிக்கிழமை) கொழும்பில் நடைபெறும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 21ஆவது வருடாந்த மாநாட்டில் சமூக மேம்பாட்டுக்கும் இன நல்லிணக்கத்துக்கும் பங்களிப்புச் செய்த இரு பிரமுகர்கள் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் மற்றும் நீண்ட காலம் ஊடகத் துறையில் பணிபுரிந்த 07 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் அடங்களாக 9 பேருக்கு அவர்களின் ஊடகப் பணிக்காக விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.





பேராதனைப் பல்கலைக் கழக அரபு, இஸ்லாமிய நாகரீகத்துறை முன்னாள் முதுநிலை விரிவுரையாளரும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவரும் மார்க்க அறிஞருமான மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹிம் (எம்.ஏ) மற்றும் சிங்களத்தில் இஸ்லாமிய பணி புரிந்து வரும் தஹ்லான் மன்சூர் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இது தவிர நீண்டகாலம் ஊடகப் பணிபுரிந்த ஹம்ஸா ஹனீபா, தயா லங்காபுர, ரீ. ஞானசேகரன், எம்.இஸட். அஹமத் முனவ்வர், எம்.ஐ.எம். சம்சுடீன், மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா, திருமதி ஸகிய்யா சித்திக் பரீத் ஆகிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் ஊடகத் துறைப் பங்களிப்பை பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இம்மாநாடு கொழும்பு - 05 நாரஹேன்பிட்டி, பொல்ஹென்கொட இலக்கம் 163, கிருலபன எவன்யூவில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

போரத்தின் தலைவர் என். எம். அமீன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஷிம் பிரதம அதிதியாகவும், நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன, முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் துன்கா ஓஸ்சுஹதார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநில பொதுச் செயலாளரும் தமிழ் நாடு கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினருமான கே.எம்.ஏ. முஹம்மத் அபூபக்கர் விசேட பேச்சாளராகவும் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மாநாட்டின்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 2018/2020ஆம் ஆண்டிற்கான புதிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் போரத்தின் பொதுச் செயலாளர் ஸாதிக் ஷிஹான் தெரிவித்துள்ளார்.

இதன்போது Media Directory இன் 6ஆவது பதிப்பு வெளியிடப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

- எம்.எஸ்.எம்.ஸாகிர் -

## முஸ்லிம் தனியார்... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த இரு அறிக்கைகளும் நீதி மற்றும் சிறைச்சாலை புனரமைப்பு அமைச்சினால் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. ஜனவரியில் முன்வைக்கப்பட்ட இந்த அறிக்கைகள் வெளிவருவதன் தாமதத்துக்கு அவை தமிழில் மொழி பெயர்க்கப்படுவதில் ஏற்படும் தாமதம் காரணமாகச் சொல்லப்பட்ட போதிலும் தமிழ் மொழிபெயர்ப்பு இன்றியே இந்த அறிக்கைகள் நீதி அமைச்சின் இணையத் தளத்தில் தரவேற்றப்பட்டுள்ளன. www.moj.gov.lk என்ற இணையத் தளத்தில் இந்த அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை நீதி அமைச்சு கோரியுள்ளது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் அறிக்கையை முன்வைத்த நீதியரசர் ஸலீம் மர்சூப் தரப்பிலான அணியில் நீதியரசர் ஸலீம் மர்சூப் (தலைவர்), திருமதி தில்ஹாரா அமரசிங்க (செயலாளர்), ஜனாதிபதி சட்டத்தரணி சுகத கம்லத், ஜெஸீமா இஸ்மாயில், பேராசிரியர் சார்யா சாரங்குவேல், பழீலா பீஜுரம்பதி, ரஸ்மாரா ஆப்தீன், ஷபானா குல் பேகம், சர்மிளா ரஸூல் ஆகியோர் அடங்குவர்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி சார்பான அணியில் அஷ்.ரிஸ்வி முப்தி (தலைவர், ஜம்இய்யதுல் உலமா), அஷ். முபாரக் (செயலாளர், ஜம்இய்யதுல் உலமா), நீதிபதி ஸலாம், நீதிபதி மக்கி, ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஷிப்லி அஸீஸ், பாயிஸ் முஸ்தபா, கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, சட்டத்தரணிகளான நத்வி பஹாஉதீன், பஸ்லத் சஹாப்தீன் ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்த அறிக்கைகளில் உள்ள விடயங்கள் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைக்க விரும்புபவர்கள், நீதி அமைச்சின் செயலாளருக்கு தமது முன்மொழிவுகளை அனுப்பி வைக்க முடியும்.

Out Printing Orders

பாடசாலை, பல்கலைக்கழகங்கள், அரபு மத்ரஸாக்கள், தனிப்பட்டவர்களின் நினைவு மலர்கள், நூல்கள், கலண்டர்களை தட்டச்சு செய்தல், பக்கவடிவமைப்பு, அச்சிடுதல் சேவைகள் நியாயமான கட்டணத்தில் செய்துகொள்ள

அழையுங்கள்: 0777798096

FOCUS MEDIA (Pvt) Ltd

Focus Media (Pvt) Ltd.
No, 49 Sri Mahinda Dharma Mawatha,
Colombo - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த கட்ட நகர்வில் ட்ரோல் இராணுவம்

• பியாஸ் முஹம்மத்

அம்பாறை, திகன வன்முறைகளின் பின்னர் தீவிரவாதிகளின் வன்முறைப் பேச்சுக்களும் வெறுப்புப் பிரச்சாரங்களும் தணிந்திருக்கின்றன. இது தேர்தல்களை முன்னோக்கியிருக்கும் காலம் என்பதனால் முஸ்லிம் வாக்குகளை குறிவைத்து இது தணியச் செய்யப் பட்டிருக்கலாம். சிலவேளை புயலுக்கு முன் நிலவுகின்ற அமைதி போல ஆபத்தானதாகவும் அமையலாம். இதில் எதனையும் சாதிக்கும் வல்லமையுள்ள சமூக வலைத்தளங்கள் சாகாவரம் பெற்று உயிர்ப்புடன் இருக்கும் காலமெல்லாம் ஆபத்து வெகுதூரத்திலில்லை என்ற மனப்பாங்குடன் தான் சமூகங்கள் வாழ வேண்டியிருக்கிறது.

திகன வன்முறைகள் கருக்கட்டுவதற்கு முன்னரான சூழ்நிலைகள் சமூக ஊடகங்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தன என்பது தெளிவானது. இது தொடர்பில் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை 2018 ஏப்ரல் 21 இல் வெளியிட்ட அறிக்கையில் இப்படிக் குறிப்பிடுகிறது.

பெரும்பாலான பாவனையாளர்களின் செய்திகளுக்கும் தகவல்களுக்கும் முதன்மையான தளமாக இருந்து வரும் இணையதளத்தின் செய்தித் தொகுப்புத் தளங்கள் (Newsfeed) இனக்குரோதத்தை தொடர்ச்சியாகத் தூண்டும் தளங்களாகவே அமைந்துள்ளன. உள்நாட்டு ஊடகங்களின் இடத்தை பேஸ்புக் அபகரித்துக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான செய்தித் தளங்களில் பிரசுரிக்கப்படும் செய்திகள் எந்தவித உறுதிப்படுத்தல்களும் இல்லாமலேயே பதிவேற்றப்படுகின்றன. இந்த நிறுவனத்தின் மீது அரசாங்கம் எந்தவித கட்டுப்பாடுகளையும் கொண்டிருப்பதில்லை.

இந்தச் செய்தித் தளங்கள் ஊடாக வெறுப்பைத் தூண்டும் பிரச்சாரம், பொய்யான தகவல்கள் போன்றவற்றால் தூண்டப்படும் சில பாவனையாளர்கள் அவற்றை உண்மையான தகவல்களாக நம்பி தாக்குதல்களுக்குத் திட்டமிடுகிறார்கள். அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்கள், இணையத்தினால் தூண்டப்பட்ட சாதாரண பாவனையாளர்கள் என்போருடன் நடத்தப்பட்ட நேர்காணல்களின் அடிப்படையில், இலங்கையை வன்முறைக்குள் தள்ளிவிட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றிய பகுப்பாய்வு, வதந்திகள் தொடக்கம் கொலைகள் வரையில் ஒவ்வொரு மட்டத்திலும் பேஸ்புக்கின் செய்தித் தளங்கள் பிரதான பாத்திரத்தை வகுத்திருப்பதனை தெளிவுபடுத்துகிறது எனக் குறிப்பிடுகிறது.

முஸ்லிம்கள் மீதான இனவாதிகளின் திகன தாக்குதல்கள் இந்தப் பின்புலத்திலேயே நிகழ்த்தப்பட்டவை.




அம்பாறை காஸிம் ஹோட்டலில் மலட்டு மாத்திரை உணவில் கலக்கப்பட்டிருப்பதாக இனவாதிகள் நடத்திய கலகத்துக்கு பேஸ்புக் செய்தித் தளங்களில் பரப்பப்பட்ட பொய்யான தகவல்களை முட்டாள்தனமாக நம்பியமை தான் காரணமாக அமைந்தது. தாக்குதல் நடத்தப்படுவதற்கு முதல் நாள், அக்கரைப்பற்று பாமஸி ஒன்றிலிருந்து 23,000 மலட்டு மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றினர் என்றொரு செய்தி பேஸ்புக்கில் வைரலாகப் பரவியதை காஸிம் ஹோட்டலில் தாக்கப்பட்டவர் அறிந்திருக்கவில்லை. இப்படித் தான் துருவமயப்பட்ட சமூகங்கள் அடுத்த சமூகத்துக்குள்ளால் என்ன நடக்கிறது என்பது தெரியாமல் இணையத்தால் தூண்டப்பட்ட சக்திகளுக்கு இரையாகின்றார்கள். இதனுடைய உருப்பெருப்பிக்கப்பட்ட வடிவம் தான் திகனயில் நடந்தேறியது.

திகன வன்முறைகளுக்குப் பின்னர் அரசாங்கம் பேஸ்புக்கினை சிறிது காலம் தடை செய்திருந்தது. திகன வன்முறைகளுக்கு பேஸ்புக்கை தடை செய்தமை தொடர்பில் ஆராய்வதற்கென இலங்கைக்கு வந்த பேஸ்புக்கின் தென் ஆசியாவுக்கான பொதுக் கொள்கைகள் பணிப்பாளர் சிவனாத் துக்ரால், வெறுப்புப் பிரச்சாரத்தை தவிர்ப்பதற்கு பேஸ்புக் தவறியதை ஒப்புக் கொண்டதோடு, வெறுப்புப் பிரச்சாரங்களை இனங்கண்டு தவிர்க்கும் வகையில் தம்மிடம் சிங்களம் தெரிந்தவர்கள் இல்லை என்றும் தெரிவித்தார். இலங்கையில் பேஸ்புக் அலுவலகம் ஒன்று இல்லை என்ற வகையில் இந்தியாவில் இயங்கும் பேஸ்புக் அலுவலகத்துக்கு சிங்களம் தெரிந்தவர்கள் 10 பேரை பணிக்கமர்த்தவும் தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



செய்தித் தளம் என்ற வகையில் பேஸ்புக் சில நடவடிக்கைகளை எடுத்தாலும் டுவிட்டர் போன்ற ஏனைய செய்தித் தளங்கள் தம் பங்குக்கு வெறுப்புப் பிரச்சாரங்களை வளர்ப்பதில் துணை புரிந்து வருகின்றன. நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டது போல பேஸ்புக் இந்த விதத்தில் அடையாளப்பட்டிருந்தாலும் டுவிட்டர் அச்சந்தர்ப்பத்தில் இதிலிருந்து தப்பிக் கொண்டது.

இலங்கையின் Ground Views இணையத்தளம் நடத்திய கணிப்பீட்டில் திகன வன்முறைகளில் டுவிட்டர் பயன்படுத்தப்பட்ட விதம் குறித்து தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த 2018 மார்ச் 07 ஆம் திகதி வெளியிடப்பட்ட டுவிட்டர் ஒன்று முஸ்லிம் ஆண்களில் ஒரு கும்பல் சிங்கள மக்களைத் தாக்குவதற்காக வீதிகளில் நிற்கின்றார்கள் என்றொரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தது.




இந்த டுவிட்டர் 112 லைக்குகளைப் பெற்றுள்ளதுடன் 23 தடவை மீள் டுவீட் பண்ணப்பட்டுமுள்ளது. நாட்டில் எங்கேனும் இப்படி ஒரு சம்பவம் நடந்ததை யாருமே உறுதிப்படுத்தியிருக்கவில்லை. உண்மையில் இந்த டுவீட் ஜெர்மனியின் பிராங்பேர்ட் நகரிலிருந்தே டுவீட் செய்யப்பட்டிருந்தது என்பதனை தமது போனிலோ லப்டொப்பிலோ லைக் பண்ணியவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். நாட்டுக்குள்ளே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தொடர்பில் இலங்கைக்கு வெளியிலிருந்தே செய்தி வெளியிட முடிவதன் சாத்தியத்தை இது தெளிவு படுத்துகிறது.

இவர்களது கணிப்பீட்டின் படி அம்பாறை தாக்குதல்கள் நடந்த 2018 மார்ச் இறுதிப்பகுதியில் இருந்து சுய விபரங்களோ, புரொபைல் படமோ இல்லாத பெருந்தொகையான டுவிட்டுகளின் வருகை அவதானிக்கப்பட்டிருக்கிறது. நாளொன்றுக்கு 20-40 பொட்ஸ்கள் (Bots) வருவதாக டுவிட்டர் கணக்குகளை பேணும் சில செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த பொட்ஸ்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பெயர்களின் உச்சரிப்புடன் கூடிய பெயர்களைக் கொண்டிருந்தன. 1262 டுவிட்டர்கள் ஆய்வுக்கு உள்வாங்கப்பட்டிருந்தன. இந்த ஆய்வின்படி டுவிட்டர் பாவனையாளர்களைப் பின்தொடர்ந்த சந்தேகத்துக்குரிய கணக்குகளில் பெரும்பாலானவை பொட்ஸ் டுவிட்டர் கணக்குகள் என்பது தெளிவாகின்றது என Ground view சுட்டிக் காட்டுகின்றது.

பொட்ஸ்கள் எனப்படுபவை, இணையத்தில் செயற்படும் தானியங்கி மென்பொருள் ஆகும். இவை தனக்குக் குறிப்பிட்ட பணியை மனிதனைவிட வேகமாகப் பரப்பக் கூடியவை. யாருடைய டுவிட்டர் கணக்குகளையும் இவை தானாக இயங்கி பின்தொடர முடியும். இலங்கையின் ராஜதந்திரிகள், தூதுவர்கள், முன்னணி அரசியல்வாதிகள், கிரிக்கட் வீரர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் என பல தரப்பினரையும் பெரும் எண்ணிக்கையிலான பொட்ஸ்கள் பின்தொடர்கின்றன என இவர்களது ஆய்வு சொல்கிறது.

இதேபோல Troll கள் எனப்படுகின்ற பின்னூட்டலிடுபவர்களது எண்ணிக்கையும் பெருமளவிலானதாகக் காணப்படுகிறது. Troll கள் எனப்படுவோர் வாசிப்போரிடையே உணர்ச்சி வசமான எதிர்வினையைத் தூண்டும் வகையில் பொருத்தமில்லாத தலைப்புக்களில் விஷமத்தனமான இடுகைகளைப் பதிவேற்றி மக்களை குழப்பியடிக்கின்ற, வம்புக்கு இழுக்கின்ற விதமாகச் செயற்படுபவர்கள். இவ்வாறானவர்கள் பெரும்பாலும் இணையத்தைப் பாவிக்கின்ற 18-34 வயதுக் கிடைப்பட்டவர்களாகவே இருப்பர். இவர்களுக்கு பெருமளவிலான ஊதியமும் கொடுக்கப்படுகிறது. இஸ்ரேலில் அரசாங்கத்தை நியாயப்படுத்துவதற்கென மாணவர் பட்டாளமொன்று இந்தவகையில் நியமிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு அரசாங்கத்தின் புலமைப் பரிசில்கள் கூட வழங்கப்படுகின்றன.

இந்த பொட்ஸ்களும் ட்ரோல்களுமே இன்றைய சமூகக் களத்தை ஆட்டிப் படைக்கின்றன. பொட்ஸ்கள் இலங்கையின் டுவிட்டர் பாவனையில் முன்னணி வகித்துவரும் நிலையில் எதிர்காலங்களில் தேர்தல்கள் அண்மிக்கும் போது இவை பரிமாணத்திலும் எண்ணிக்கையிலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக Ground Veiw இன் ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் ஜனநாயக விரோத கருத்துக்களை வளர்ப்பதற்கு இந்த பொட்ஸ்கள் பயன்படுத்தப்பட முடியும் என்ற அச்சத்தையும் Ground View வெளியிட்டிருக்கிறது.

**எதிர்வரும் கிட்டிய காலத்தில் நடக்கவிருக்கின்ற தேர்தல்களில் ட்ரோல் இராணுவத்தின் செயற்பாடு மீளெழலாம். தற்போது நெருப்புக்குக் கீழால் உள்ள தணல் போல கனன்று கொண்டிருக்கின்ற முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளும் உரிய தருணம் வரும் போது வீறு கொண்டு எழலாம். திகன பேஸ்புக் வன்முறை என்றால் அடுத்து வரும் தாக்குதல் ட்ரோல் இராணுவத்தினூடாக வரலாம். இதனை எதிர்கொள்ளும் வல்லமை இலங்கை அரசாங்கத்துக்கு இல்லை. சிவில் சமூகங்கள் தான் இதனை எதிர்கொள்வதற்கான வியூகங்களை அமைக்க வேண்டிய நிலையிலேயே நாடு இருக்கிறது.**

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடைய டுவீட்டுகளை அவதானித்து வெளியிடப்பட்ட தரவுகள் இதனை உண்மைப்படுத்துகின்றன. தன்னைப் பின்தொடர்ந்த @dayanjayathila2, @RamananKpradeep,@BaskarShiron,@dhinukas, @NinaNajumudeen, @KandasamyMyu, @rajranja1782 கணக்குகளை Ground View ஆய்வு செய்தது. இதன் படி, அனைத்து டுவிட்டர் கணக்குகளும் 2015 இன் இரண்டாவது காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை அந்த வருடத்தில் இயங்கிக்கொண்டிருந்தன. பின்னர் அவை 2016 முழுவதும் செயல் இழந்துள்ளன. 2017 நடுப்பகுதியில் மீண்டும் அவை செயற்படத் தொடங்கியுள்ளன. அதன் பின்னர் அவற்றை 2017ஆம் ஆண்டின் இறுதிவரை அவதானித்தோம். அவை அனைத்தும் பின்வரும் உள்ளடக்கங்களை வெளியிட்டு வருகின்றன.

- பொதுவாக ராஜபக்ஷ குடும்பத்தின் மீதும் குறிப்பாக நாமல் ராஜபக்ஷ மீதும் ஊழல் வன்முறை மற்றும் மனித உரிமை குற்றச் சாட்டுகளை சுமத்தும் டுவிட்டர் கணக்குகளுக்கு எதிராக இவை கருத்துக்களைப் பதிவுசெய்கின்றன.
- நாமல் ராஜபக்ஷ பதிவுசெய்த அல்லது பகிர்ந்துகொண்ட டுவிட்டர் செய்தி பலரை சென்றடைவதை உறுதிசெய்யும் விதத்தில் அவை செயற்படுகின்றன.

இது தற்செயலானது இல்லை. இதில் தந்திரோபாயமும் நோக்கமும் வெளிப்படுகின்றது. இது டிரோல் இராணுவம் (Troll Army) - குறிப்பிட்ட ஒரு குழுவினர் தனிநபர் ஒருவரை பிரபலப்படுத்துவதற்காக செயற்படுகின்றனர். நிகழ்வுகளின் கருத்துப் பாங்கு மற்றும் விடயங்களை வடிவமைப்பதன் மூலம் இதனை செய்கின்றனர். ட்ரோல் படையினர் இரண்டு வழிகளில் பணியாற்றுகின்றனர். இரண்டு வழிகளும் இங்கு வெளிப்படையாகத் தெரிந்தன. முதலாவது, அது ஒடுக்கும் விதத்தில் பணியாற்றுகின்றது. மையவிவரணங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களுக்கு மாறான விளக்கங்கள், ஆதாரங்கள் மற்றும் தகவல்களை பொதுவெளியில் முன்வைக்கும் உள்ளடக்கங்களுக்குப் பதில்களை தொடர்ச்சியாக அனுப்புவதன் மூலம் இதனை செய்கின்றனர்.

இரண்டாவது, ஒரு விடயத்தை தொடர்ச்சியாக வெளியிடுவதன் மூலம், மேற்கோள் காட்டுவதன் மூலம் அல்லது அதனை தெரிவிப்பதன் மூலம் அல்லது அதனை முக்கியப்படுத்தி காண்பிப்பதன் மூலம் அந்த உள்ளடக்கத்திற்கு பரந்துபட்ட அங்கீகாரம் உள்ளது என காண்பிப்பதன் மூலம் குறிப்பிட்ட கருத்தை, எண்ணத்தை அல்லது விவரணத்தை ஊக்குவிக்க முயல்கின்றனர் என்று குறிப்பிடுகின்றது.

இதன் மூலம் எதிர்வரும் கிட்டிய காலத்தில் நடக்கவிருக்கின்ற தேர்தல்களில் ட்ரோல் இராணுவத்தின் செயற்பாடு மீளெழலாம். தற்போது நெருப்புக்குக் கீழால் உள்ள தணல் போல கனன்று கொண்டிருக்கின்ற முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளும் உரிய தருணம் வரும் போது வீறு கொண்டு எழலாம். திகன பேஸ்புக் வன்முறை என்றால் அடுத்து வரும் தாக்குதல் ட்ரோல் இராணுவத்தினூடாக வரலாம். இதனை எதிர்கொள்ளும் வல்லமை இலங்கை அரசாங்கத்துக்கு இல்லை. சிவில் சமூகங்கள் தான் இதனை எதிர்கொள்வதற்கான வியூகங்களை அமைக்க வேண்டிய நிலையிலேயே நாடு இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# தூக்குத் தண்டனை

உலகில் மிகவும் பெறுமதியானது மனிதனது உயிரும் மானமும். இதனால் தான் ஒரு மனிதனைக் கொல்வது முழு சமுதாயத்தையும் கொல்வதற்கு ஒப்பானது என்று சொல்லப் படுகிறது. மனிதனது உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில்தான் அனைத்துச் செயற்பாடுகளும் குறியாக இருக்கின்றன. தாய்லாந்திலே குகைக்குள் சிக்கிய 13 மனித உயிர்களையும் காப்பாற்றுவதற்கு உலகமே ஒன்று திரண்டு போராடியதை விதந்து போற்றாதார் யாருமிருக்க முடியாது.

வர்த்தக மயமான சமகாலச் சூழலில் தமது வருமானத்துக் காக உயிர்களைக் கொத்துக் கொத்தாகக் காவு கொள்கின்ற செயற்பாடுகளும் அதற்குப் பின்னால் இருந்து உழைக்கின்ற பண முதலைகளும் சுதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் முக்கியமாக போதைப் பொருள் பாவனையைப் பரவலாக்கும் செயற்பாடு ராஜ்யம் அமைத்துத் தொழிற்படுகின்றது.

போதைப் பொருட்கள் மனித வாழ்வை நாசம் செய்யக் கூடியவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. போதை ஏறிய நிலையிலேயே கொலைகள் உட்பட பல நாசகாரச் செயல்கள் நடந்தேறி வருவதை அண்மைக்காலத் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. போதையினால் சீரழிகின்ற குடும்பங்களை யும், வீதிக்கு வரும் சிறுவர்களையும் சமூக அவலங்களையும் அவதானிக்கும் எவரும் போதைப் பொருட்களுக்கு எதிராக கடும் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கொள்ளமாட்டார்கள்.

இந்த நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதற்குத் தீர்மா னித்திருப்பது வரவேற்கத்தக்க பிரகடனமாக அமைந்திருக் கிறது. போதைப் பொருள் பாவனையினால் காவு கொள்ளப் படுகின்ற பல நூற்றுக் கணக்கான உயிர்களைப் பாதுகாப்பதற் காக, நாசகாரச் செயலில் ஈடுபடுகின்றவர்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்குவ தற்கு உரிய அதிகார பீடங்கள் முன்வராதவரையில் போதைப் பொருள் பாவனையினால் கொல்லப்படும் பெறுமதிமிக்க மனித உயிர்களைப் பாதுகாக்க முடியாது. இந்த வகையில் ஜனாதிபதியின் தீர்மானம் வரவேற்கத்தக்கதே.

இலங்கையில் இவ்வாறான தண்டனைகள் அமுல்படுத்தப் படுவது இதுதான் முதல் முறையல்ல. ஏற்கனவே இருந்த சட்டம் தான் மீண்டும் அமுலுக்கு வருகிறது. இருந்தாலும் நாட்டில் நடக்காதது ஏதோ நடந்துவிட்டது போல சிலர் ஆர்ப் பரிக்கின்றார்கள். மரண தண்டனை அமுலில் இல்லாத காலங் களில் கூட வெள்ளை வானில் மரண தண்டனை வழங்கு வதை பல அரசாங்கள் மௌனமாக அங்கீகரித்து வந்தன. பாதாள உலகை அழிப்பதற்காக பொதுமக்கள் முன்னிலையில் அவர்களைச் சுட்டுக் கொன்று மரண தண்டனை வழங்குவ தும் எமது நாட்டுக்குப் புதியதல்ல. அந்த வகையில் கூப்பாடு போட்டுத் தடுப்பவர்கள் எந்த நிலைப்பாட்டில் இருந்து இதனை எதிர்க்கிறார்கள் என்பது தேடிப்பார்க்கப்பட வேண்டும்.

இதற்கு முன்னரும் மரண தண்டனை அமுல்படுத்தப்படு வதற்கு தயாரான வேளைகளில் சர்வதேச நாடுகள் சிலவற் றின் அழுத்தம் காரணமாக அது கைவிடப்பட்டது. இம்முறை யும் அதேவிதமான அழுத்தங்கள் இந்தத் தீர்ப்பில் தாக்கம் செலுத்தி வருகின்றன. மரண தண்டனைத் தீர்மானத்தைக் கைவிடுமாறு அவை அரசாங்கத்தைக் கோரி வருகின்றன. இந்த இடத்தில் இந்தக் கோரிக்கையை விடுப்பதற்கு சொல் லப்படுகின்ற இந்த சர்வதேச நாடுகளுக்கு இருக்கும் தார்மீக உரிமை பற்றியும் கேள்வி எழுப்பப்பட வேண்டும்.

ஈராக்கிலே பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி அந்த நாட்டின் மீது படையெடுத்து அந்த நாட்டின் ஜனாதிபதி யையே போலியான குற்றச் சாட்டில் தூக்கில் போட்டுக் கொன்று விட்டு அந்த நாட்டையே தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளும் அராஜகத்தை இலங்கையில் தூக்குத் தண்டனை கூடாது என்றும் நாடுகள் அரங்கேற்றின. அதேநேரம் பலஸ் தீனின் அப்பாவி உயிர்களை பேரழிவு ஆயுதங்கள் மூலம் அநியாயமாகக் கொன்று குவிக்கும் இஸ்ரேலை இதே நாடுகள் குற்றவாளியாகப் பார்ப்பதில்லை. எனவே நீதி நியாயத்தை நிலைநாட்டுவதற்கு சொல்லப்படுகின்ற இந்த சர்வதேச நாடு களின் தயவை எதிர்பார்த்திராமல் நாட்டுக்குத் தேவையான சட்டத்தை நிலைநாட்டி மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் துணிச்சலுடன் முன்வர வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போராடாத முஸ்லிம்கள்

- மொஹமட் பாதுஷா

சனத்தொகைப் பரம்பல் மற்றும் அதனது மேல் நோக்கிய வளர்ச்சிப் போக்கு ஆகிய வற்றுக்கு ஏற்றாற்போல், காணிகள் இல்லாத இனக் குழுமமாக, நாட்டில் பரவலாகவும் குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இழந்த காணிகளை மீட்ப திலோ அல்லது காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலோ, இவர்கள் அக்கறை இல்லாமல் இருக்கின்றமை, மிகவும் ஆபத்தான நிலை மையாகும்.

தமிழர்கள் தனிநாட்டுக்காகப் போராடி னார்கள். அது சாத்தியப்படாது என்ற ஒரு நிலை வந்தபோது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்று கோரி வருகின்றார்கள். அத்துடன், இணைந்த வடக்கு, கிழக்கை அடிப்படையாக வைத்து, முன்வைக்கப்படும் தீர்வுப் பொதியில் சில அதிகாரங்கள் தமக்கு இருக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றனர். குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களை அவர்கள் அவாவி நிற்கின்றனர்.

இது கொடுபடுமா, இல்லையா என்பது வேறு விடயம். ஆனால், அதற்கான அவர் களது தீரா வேட்கை என்பது, வெறுமனே அதிகாரம் சார்ந்ததோ அல்லது கௌரவம் சார்ந்ததோ அல்ல. மாறாக, காணியின் அதிகாரம் இருப்பதென்பது, இவ்விரு மாகா ணங்களிலும் தமிழர்களின் எதிர்கால இருப் பையும் அடுத்த தலைமுறையின் வாழ்விட உரிமையையும் உறுதிப்படுத்தும் என்ற ஒரு தாற்பரியம் இதற்குப் பின்னால் இருக் கின்றது.

முஸ்லிம்கள் தரப்பில் இவ்வாறான வேண்டுதல்கள் இல்லையென்றாலும், ஒப் பீட்டளவில் சனத்தொகைப் பெருக்கத்தில் வேகமாக முன்னேறி வரும் இனமாகக் கருதப்படுகின்ற முஸ்லிம் சமூகம், எதிர் காலத்தில் தமது சந்ததிகள் வாழ்வதற்கான காணிகளைப் பெறுவதற்கு அல்லது குறை ந்தபட்சம் வேறு தரப்பால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள முஸ்லிம்களின் இலட்சக்கணக் கான ஏக்கர் காணிகளை மீளப் பெறுவதற்கு, ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கின்றதா என்ற கேள்விக்கு, இல்லையென்றுதான் விடையளிக்க வேண்டியிருக்கின்றது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம், முடி வுக்குக் கொண்டு வரப்பட்டாலும் அவர்கள், தங்களது நிலங்களை மீட்பதற்கான போராட் டத்தை, ஜனநாயக அடிப்படைகளில் தொட ர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்கள் என் பதை, முஸ்லிம்கள் முதலில் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

சாதாரண மக்கள் மேற்கொண்ட கேப்பா பிலவு போராட்டம், 50 ஏக்கர் நிலத்தை மீட்பதற்காகவே முன்னெடுக்கப்பட்டது. ஆனால், அது சர்வதேச அவதானத்தைப் பெற்றது. கடைசியில் அரசாங்கம் இறங்கி வர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. கேப்பாபிலவில் மட்டுமல்ல, தமது காணி என்று நினைக்கின்ற எல்லா காணிகளையும் மீட்டெடுப்பதற்காக, தமிழ் மக்கள் போராடி வருகின்றார்கள் என்பது கண்கூடு. இரணை தீவில், பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப் பாட்டில் உள்ள தமது காணிகளை, விடுவிக் கக் கோரி தமிழர்கள் போராடி வருகின்றனர். மட்டக்களப்பு நாவலடியில், மைலம்பா வெளியில் பாதுகாப்புத் தரப்பினரின் முகாம் அமைந்துள்ள காணிகளை மீட்க, ஒரு போராட்டத்தைத் தமிழர்கள் மேற்கொண்ட னர்.

இவ்வாறு யாழ்ப்பாணம், வலிகாமம், ஊர்காவற்றுறை, புதுக்குடியிருப்பு, முல் லைத்தீவு, ஒட்டுசுட்டான், பரந்தன், கிளி நொச்சி என வடக்கிலும் கிழக்கிலும், தமது நிலத்தை மீட்பதற்கான, வெகுஜனப் போராட்டங்களைத் தமிழர்கள் தினமும் முன்னெடுத்து வருகின்றனர்.

பொத்துவில், பாணமைக் காணிகளுக்காக குடாநாட்டில் கையெழுத்து வேட்டை நடக் கின்றது. மிக முக்கியமாக, இவற்றை மக்க ளாகவே பெரும்பாலும் ஏற்பாடு செய்கின்ற னர். அத்துடன் ஏனையோருக்குக் கடும் போக்காகத் தெரிந்தாலும், தமிழ் அரசியல் வாதிகள் இதற்குப் பின்னால் நின்று, பக்க பலமாகச் செயற்படுகின்றனர் என்பதை மறுக்கவியலாது.

ஆனால், முஸ்லிம்கள் தமது காணிகளை மீட்டெடுக்க, என்ன செய்து கொண்டிருக் கின்றார்கள்? முஸ்லிம்களின் மீட்பர்கள் என்று கூறி, மார்தட்டுகின்ற முஸ்லிம் அரசி யல் தலைமைகள், அமைச்சர்கள், பிரதிய மைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மக்கள் தமக்களித்த இந்தப் பதவிகளின் ஊடாக, எதைச் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள்...?

தமிழ் மக்கள் தம் மத்தியில், பெரிதாக அமைச்சர்களோ, அதிகமான தலைவர்களோ இல்லாத ஒரு சமூகமாகும். இவர்கள், இரா ணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை மீட்டெடுப்பதற்காக, நிராயுத பாணியாகத் தைரியமாக முன்னிற்கின்றார்கள் என்றால், அது சுலபமான காரியமல்ல.

சனத்தொகை 50 சதவீதத்தை தாண்டும் என்று கணித்துக் கூற முடியும்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கில் பல ஹெக்டேயர் கணக்கான காணிகள் தொடர் பான பிரச்சினைகள் முஸ்லிம்களுக்கு இருக் கின்றன. கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு, கிட்டத்தட்ட 90 ஆயிரம் ஏக்கர் காணிப் பிரச் சினைகள் உள்ளன.

இதில் கணிசமான காணிப் பிரச்சினை கள், அம்பாறை மாவட்டத்தில் இருப்பதாகச் சொல்ல முடியும். வட மாகாணத்தை பொறுத்தவரை, 1990ஆம் ஆண்டு புலிகளால்




ஆனால், முஸ்லிம் மக்களும் அரசியல் வாதிகளும் இதற்காகப் போராடுவது ஒரு புறமிருக்க, குறைந்த பட்சம் வடக்கிலும், கிழக்கிலும் தென்னிலங்கையின் சில இடங் களிலும் முஸ்லிம்களுக்குரிய எத்தனை ஆயிரம் அல்லது இலட்சம் ஏக்கர் காணிகள் வேறு தரப்பினர் வசம் இருக்கின்றன என்ற புள்ளி விவரத்தையாவது மேலோட்டமாக அறிந்து வைத்திருக்கின்றார்களா என்பது கடும் சந்தேகமே. தரவுகளே இல்லையென் றால், அதற்காகக் குரல்கொடுப்பது எங்ங னம் சாத்தியமாகப் போகின்றது என்று தெரிய வில்லை.

முஸ்லிம்களின் தேசியத் தலைமை ஆவ தற்காக, அமைச்சுப் பதவிக்காக, தேசியப் பட்டியல் எம்.பி பதவிக்காக, கொந்தராத் துக்காக, தரகுக் கொடுப்பனவுகளை உழைப் பதற்காக, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பினாமி பெயரில் சொத்துகளைக் குவிப்ப தில் அக்கறை காட்டுகின்ற முஸ்லிம் அரசி யல்வாதிகள், முஸ்லிம்களின் காணிப் பிரச்சி னையைத் தீர்ப்பதில் பராமுகமாக இருப் பதையே காண்கின்றோம்.

அரசியல்வாதிகள் இவ்வாறு என்றால், முஸ்லிம் மக்கள் இது விடயத்தில் அதை விட மோசம் என்றுதான் சொல்ல வேண்டி யிருக்கின்றது. அரசியல்வாதிகளின் நக் குண்டு நாவிழந்த தனமும், முஸ்லிம் மக் கள், தூரநோக்கற்ற விதத்தில் தமது அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கின்ற விதமும், கடந்த பல தசாப்தங்களாக ஏற்படுத்தியிருக் கின்ற படு பாதகமான விளைவு என்றே, இதைக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்பார்கள்; தெண்டித்தவன் பெற்றுக் கொள் வான் என்பார்கள். இஸ்லாம் மதத்தில் கூட, இறைவனிடம் பிரார்த்தனை செய்து, தமது தேவைகளைக் கேட்குமாறு வலியுறுத்தப்பட் டிருக்கின்றது. இப்படியிருக்க, தலையாய முக்கியத்துவம் மிக்க காணிப் பிரச்சினைக் குத் தீர்வு காணாமலும், அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க, ஜனநாயக அடிப் படையிலான போராட்டங்களை முன்னெடுக் காமலும், முஸ்லிம்கள் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். மிகமுக்கியத்துவம் மிக்க விடயத்தில், முஸ் லிம் அரசியல்வாதிகள் பராமுகமாக இருக்க முடியாது.

கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக (42 சதவீதம்) வாழ்கின்றனர். திரு கோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பெரும்பான்மையாக வாழும் இனக்குழும மாக முஸ்லிம்களே இருக்கின்றனர். அத் துடன், பாடசாலைகளில் தரம் 1 இற்குச் சேர்கின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மாண வர்களின் எண்ணிக்கையை வைத்து ஒப் பிட்டு நோக்குகின்ற போது, கிழக்கில் இன்னும் 15 வருடங்களில் முஸ்லிம்களின்

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ் லிம்களின் மீள்குடியேற்றக் காணிப் பிரச் சினை முதன்மையானதாகும். அந்தவகை யில், மொத்தமாக வடக்கைப் பூர்வீகமாகக் கொண்ட முஸ்லிம்களுக்கு, சுமார் 40 ஆயிரம் ஹெக்டேயர், அதாவது ஓர் இலட்சம் ஏக்கர் காணிப் பிரச்சினைகள் உள்ளன.

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிர மிப்புகள், சுவீகாரம், அத்துமீறல்கள் மற்றும் வர்த்தமானி ஊடாக பாதுகாக்கப்பட்ட வன மாகப் பிரகடனப் படுத்தப்பட்ட காணிகள் என ஏகப்பட்ட பிரச்சினைகள் வடக்கில் உள்ளன. கிடைக்கப் பெறுகின்ற தகவல்களின் பிரகாரம், மாவில்லு பாதுகாக்கப்பட்ட வன மாக அறிவிக்கப்பட்ட காணிகளுள், முஸ் லிம்களின் காணிகள் அதிகமானவை என்று சொல்லப்படுகின்றது.

வடக்கில் இருந்து வெளியேறிய முஸ் லிம்களின் தலைமுறை பெருகி, சனத்தொகை மும்மடங்காக அதிகரித்துள்ளது. எனவே, இவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் நிம் மதியாக வாழ்வதற்கான காணியை உறுதிப் படுத்துவது அவசியமானது.

அம்பாறை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், முஸ்லிம்கள் 48 சதவீதமாக பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இங்கு வேகமாகம், கிரான்கோவை, கிரான்கோமாரி. ஒலுவில் அஷ்ரப் நகர், பொன்னன்வெளி, கீத்துப்பத்து பாவாபுரம், அம்பலம் ஓயா, ஹிங்குராணை, வட்டமடு ஆகிய இடங்களில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளின் உரிமைகள் சிக்கலுக்குள்ளாகி இருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில், சிங்கள இனப் பரம்பலை அதிகரிக்கும் வேறு குடியேற்றங் களாலும் பெருமளவு காணிகள் இழக்கப் பட்டுள்ளன. வனவளம், இராணுவ முகாம், தொல்பொருள் மையங்கள், புனித வலயப் பிரகடனம் என்ற பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு, கணிசமான காணிகள் உரிமை சார்ந்த பிரச்சினைக்குள்ளாகி உள்ளன.

1930களில் அம்பாறை மாவட்ட முஸ் லிம்களுக்கு எல்.டீ.ஓ. உத்தரவுப் பத்திரங் களை அரசாங்கம் வழங்கியதுடன், அடர்ந்த காடுகளை வெட்டி விவசாயம் செய்யும் நிலையும் உருவானது. இந்தக் காணிகளில், 30 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்தனர். பின்னர், கல்ஓயா அபிவிருத்தித் திட்டம் மற்றும் அதன் பின்னரான செயற்றிட்டங்களின் கீழ், தென்னிலங்கையில் இருந்து அழை த்து வரப்பட்ட சிங்களவர்களுக்காக, இவற்றுள் கணிசமான காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இப்படியாக..... நுரைச்சோலை, பொன் னன்வெளி, தீகவாபி, அம்பலத் தாறு, ஓமரங்காய், சேனைக்கண்டம், சேலவட்டை, வேலாமரத்துவெளி, சியத் தரவட்டை, அம் பலம்ஓயா, கிரான் கோவை, (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நல்லாட்சி எதிர்கொள்ளும் சவால்கள்




றவூப் ஸெய்ன்

**சுதந்திரத்திற்குப் பிந்திய ஒவ்வொரு தசாப்தங்களிலும் அதிகாரத்திற்கு வந்த கட்சி அரசாங்கங்களினது ஊழல் மோசடிகள் படிப்படியாக அதிகரித்தே வந்துள்ளது. கடந்த தசாப்தத்தில் எல்லை மீறிய ஊழல் எனக் கூறும் அளவுக்கு நாட்டின் தேசிய சொத்துக்களை அரசியல்வாதிகள் பெருமளவு சூறையாடியுள்ளனர். தேசிய அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் அரைப்பங்குகிற்கு மேல் கனகச்சிதமாகக் களவாடப்பட்டுள்ளது.**















வரலாறு காணாத அளவு டொலரின் பெறுமதி உயர்ந்து இலங்கை நாணயத்தின் பெறுமதி கீழே இறங்கியுள்ளது. இறக்குமதி பொருட்கள் அனைத்தினதும் விலை -பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்டு- விமானம் போல் ஏறி வருகின்றது. 2015 ஜனவரியில் உருவான நல்லாட்சி விம்பம் மெது மெதுவாக உடைந்து நொறுங்குகின்றது.

கடந்த ஆட்சியில் மட்டுமல்ல, இந்த ஆட்சியிலும் ஊழல் பெருச்சாளிகளும் திருடர்களும் உள்ளனர் என்பதை மக்கள் வெகுவாக உணர்கின்றனர். தொழிற் சங்கப் போராட்டங்களால் நாடு சின்னா பின்னமாகியுள்ளது. முன்னைய ஆட்சியில் இது அச்சுறுத்தப்பட்டு அடக்கப்பட்டது. ஒவ்வொரு அரச, திணைக்கள ஊழியர்களும் தத்தமது பங்கிற்கு மாறி மாறி சம்பள அதிகரிப்பை முன்னிறுத்தி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர்.

பெற்றோல் விலை உயர்ந்துள்ளதால் அனைத்து அத்தியவசியப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளன. இறுதியாக பேக்கரி உற்பத்தி சங்கம் தமது உற்பத்திப் பொருட்களின் விலை களை அதிகரிப்பதாக அறிவித்துள்ளது. மக்களின் வருமான வழிகளை விட வாழ்க்கைச் செலவீனங்களுக்கான வழிகள்தான் இங்கு அகலத் திறந்திருக்கின்றன.

பல்வேறு வாக்குறுதிகளோடு அதிகாரத்திற்கு வந்த அரசாங்கம் முன்னைய ஆட்சியாளர்களின் பில்லியன் கடன் தொகையை அடைப்பதற்கு மக்களை கசிக்கிப் புழிகின்றது. வெளிநாட்டு அரசாங்கங்களையும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களையும் நம்பியிருக்கும் நாடு என்ற நிலைக்கு மாறி மாறி வந்த அரசாங்கங்கள் இலங்கையைக் கொண்டு வந்து விட்டன.

நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. அரசியலமைப்பு மாற்றம் வடக்கின் மீள்குடியேற்றம், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, தளம்பலற்ற நாணயக் கொள்கை, உயர் கல்வித்துறையிலுள்ள பிரச்சினைக்கான தீர்வு என முன்னைய ஆட்சி போன்று நல்லாட்சியிலும் எதுவும் சாத்தியப்படவில்லை.

மூன்றாண்டுகள் உருண்டோடி விட்டன. தற்போதைய ஆட்சி குறித்த விமர்சனங்கள் அல்லது மதிப்பீடுகள் எதுவும் முன்னைய ஆட்சியை நியாயம் கண்டுவிடக் கூடாது அல்லது இந்த அரசாங்கத்தின் ஆட்சி மாற்றத்திற்கான ஏக நியாயங்களாகவும் இருக்க முடியாது. நாடு அத்தனை தளங்களிலும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் சூழலை முன்னைய ஆட்சியாளர்கள் அடுத்த தேர்தல் வெற்றிக்கான பிரச்சாரப் புள்ளிகளாகக் கையாள்கின்றார்களே ஒழிய, இந்நெருக்கடியில் தங்களின் பங்கை அவர்கள் வசதியாக மறந்து விட்டனர்.

இன்று இலங்கையைச் சூழ்ந்துள்ள அடிப்படைப் பிரச்சினைகள் என்ன? தெற்காசியாவிலேயே மிக வளமான நாடு இலங்கைதான். சிறியதொரு கைக் கடக்கமான மக்கள் தொகை. பல்வகை கலாசாரம், மொழிகள், மதங்கள். இந்தியாவின் பிரபல எழுத்தாளரும் ஆய்வாளருமான அனிதா பிரதாப் கூறுவது போன்று இந்த பவளத் தீவுக்கு இடையில் என்ன நடந்தது? இலங்கையை அறேபியர்கள் மரகதத் தீவு என்றனர்.

துரதிஷ்டமாக 30 ஆண்டுகள் இந்தத் தீவு குருதியில் குளித்தது. போர் முடிந்த தன் பின்னரும் ஒட்டு மொத்த பாதீட்டில் கால் பங்கினை ஆதங்களுக்கும் ஆயுதப் படைக்கும் ஒதுக்கி வரும் நாடாக இலங்கை இருப்பதேன்? நமது நாட்டின் பிரச்சினைகளுக்கு காரணமாய் இருப்பவர்கள் யார்? மக்களா, கட்சி அரசாங்கங்களா அல்லது வளங்களா, கொள்கை வகுப்பிலுள்ள கோளாறுகளா என்ற கேள்விகள் நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் ஒவ்வொருவரையும் குடைந்துகொண்டே இருக்கின்றது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அல்லது மேன்மை என்பது சில அடிப்படைக் காரணிகள் மீது தங்கியுள்ளது. ஸ்திரமான பொருளாதார வளர்ச்சி, தேசிய இறைமையும் பாதுகாப்பும், மக்களின் உயர் வாழ்க்கைத் தரம், உயர்ந்த சுகாதாரம், உயர் எழுத்தறிவு வீதம். இவை அபிவிருத்தி அடைந்த நாடொன்றின் பிரதான சுட்டிகளாகும். ஐரோப்பிய காலனியத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர் அபிவிருத்தியின் இந்த இலக்குகளை நோக்கி தூர நோக்கோடும் திட்டமிடலோடும் இதய சுத்தியோடும் இயங்கிய அரசாங்கங்கள் இலங்கைக்கு வாய்த்தனவா என்பது சிக்கலான ஒரு கேள்வி.

## தூர நோக்குள்ள தலைமை

ஒரு தேசத்தின் முன்னேற்றம் அதன் சிறந்த தலைமைத்துவத்துடன் தொடர்பு பட்டுள்ளது. தூர நோக்கு சிறந்த திட்டமிடலுடன் கூடிய தலைமைத்துவமொன்று இலங்கைக்கு வாய்த்ததா என்பது விவாதத்திற்குரிய விடயமே.

1960 களின் ஆரம்பத்தில் சிங்கப்பூரை இலங்கையாக்குவேன் என்று நவீன சிங்கப்பூரின் நிர்மாணி எனப் போற்றப் படும் லீ குவான் யெவ். தேர்தல் பிரச்சார மேடைகளில் முழங்கினார். 20 ஆண்டுகளுக்குள் சிங்கப்பூரை ஆசியாவின் புலிகளில் (Asian Tigers) ஒன்றாக லீ குவானால் மாற்ற முடிந்தது. நீண்ட வரலாற்றுத் தொன்மையோ நாகரிகப் பாரம்பரியமோ இல்லாத, வெளிநாட்டவர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்ற சிங்கப்பூர் கல்வியிலும் பொருளாதாரத்திலும் தொழில்நுட்பத் துறைகளிலும் எவ்வாறு வேகமான மாற்றங்களைக் கண்டது என்று நோக்க வேண்டும். சிங்கப்பூரிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்கள் அநேகம் உள்ளன.

தென்கிழக்கு ஆசியாவில் மூன்று தசாப்தங்கள் அதிகாரத்தில் நீடித்த லீ குவானின் சிங்கப்பூர் அவரது வெற்றிக்குப் பின்னணியாக இருந்த தலைமைக் காரணி என்ன? சிங்கப்பூர் ஒரு பன்மைப் பாங்கான நாடு. பன்மைக் கலாசார (Multi Cultural), இன அடிப்படைகளைக் கொண்ட நாடு. குவான் சிங்கப்பூரில் பின்பற்றிய அரச நிருவாக முறைமை Meritocracy எனப் படுகின்றது. பன்மைச் சமூக அமைப்பில் அல்லது பல்லின தேசமொன்றில் ஒரு ஆட்சித் தலைவன் பின்பற்ற வேண்டிய மிகச் சிறந்த கொள்கை இது. அரசியல் நிர்வாகத் திறனும், ராஜதந்திர வெல்திறனும் (Diplomacy) உள்ளவர்களிடம் அந்தந்தப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இதன் சாரம்சமாகும்.

திறமைசாலி இந்துவா கிறிஸ்தவரா முஸ்லிமா என்று லீ குவான் மக்களைப் பிரித்துப் பார்க்கவில்லை. லீ குவானின் வெற்றிக்கு இந்த அணுகுமுறை பெரிதும் உதவியது. இதனால்தான் இன்றும் கூட பல்லின சமூகம் கொண்ட சிங்கப்பூரில் முக்காடு அணிந்திருக்கும் முஸ்லிம் பெண் ஹலீமா யாகூப் ஜனாதிபதியாக இருக்க முடிகிறது.

சிங்கப்பூரின் இந்த அனுபவத்தை நாம் இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இங்கு பாராளுமன்ற அங்கத்தவர்களில் 50 வீதத்திற்கும் அதிக மானவர்கள் க.பொத. உயர் தரத்தில் தோற்றாதவர்கள். மறுதலையாக சிறுபான்மைச் சமூகத்தின் திறமைசாலிகளுக்கு இந்த நாட்டில் போதிய இடம் வழங்கப்படவில்லை. நிருவாகத் திறனோ கல்வித் தகைமையோ இல்லாத கழைக் கூத்தாடிகளின் விவாத மன்றமாக நமது பாராளுமன்றம் இருப்பதற்கு இதுதான் காரணம். இங்கு இனவாதம் சுயதோல்வி காண்கின்றது. நாட்டின் அபிவிருத்திற்கும் சிறந்த அரச நிர்வாகத்திற்கும் குறுக்கே நிற்கின்றது.

சிங்கப்பூரின் இந்த உதாரணத்தை மற்றொரு பல்லின நாடான மலேசியாவுடனும் ஒப்பிடலாம். அங்கு மலாயர்கள் 60% ஆக உள்ளனர். 20% சீன சிறுபான்மை, இந்திய வம்சாவழியினர், குறைந்தளவு கிறிஸ்தவர்களும் உள்ளனர். மஹாதிர் இனத் தேசியத்தை உடைத்து மலேசியாவில் எல்லோரும் பங்குகொள்ளும் பொருளாதாரத் தேசியத்தை (Economic Nationalism) கட்டியெழுப்பினார். விளைவு இறப்பர் விவசாயத்திலிருந்து கைத்தொழில் வளர்ச்சி கண்ட நாடாக மலேசியா மாறியது. இன்றைய ஆசியப் புலிகளில் மலேசியாவும் ஒன்று. இலங்கையில் இன்னும் நாம் இனவாதம் பேசிப் பேசி நாட்டை குட்டிச் சுவராக்கி வருகிறோம்.

## எல்லை மீறிய ஊழல்

சுதந்திரத்திற்குப் பிந்திய ஒவ்வொரு தசாப்தங்களிலும் அதிகாரத்திற்கு வந்த கட்சி அரசாங்கங்களினது ஊழல் மோசடிகள் படிப்படியாக அதிகரித்தே வந்துள்ளது. கடந்த தசாப்தத்தில் எல்லை மீறிய ஊழல் எனக் கூறும் அளவுக்கு நாட்டின் தேசிய சொத்துக்களை அரசியல்வாதிகள் பெருமளவு சூறையாடியுள்ளனர். தேசிய அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் அரைப்பங்குகிற்கு மேல் கனகச்சிதமாகக் களவாடப்பட்டுள்ளது.

எல்லை கடந்த ஊழல் ஒரு நாட்டின் அபிவிருத்தியை பின்நோக்கித் தள்ளிவிடும் என்பதற்கு நமது நாடுதான் உலகிலேயே மிகச் சிறந்த உதாரணம். ஐரோப்பாவின் நோயாளி எனக் கருதப்பட்ட துருக்கியை இரண்டு தசாப்தத்திற்குள் உலகப் பொருளாதாரத்தின் 14 ஆவது இடத்திற்குக் கொண்டு வந்த இன்றைய துருக்கிய ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகான் தனது பொருளாதார வளர்ச்சியின் ரகசியம் குறித்து கேள்வி எழுப்பிய ஒரு ஊடகவியலாளரிடம், ''நாம் இந்த நாட்டின் செல்வங்களை சூறையாடவில்லை. அதனால் வேகமாக வளர்கிறோம்'' எனப் பதிலளித்தார்.

இன்று வெளிநாடுகளுக்கு இலங்கை அரசு செலுத்த வேண்டிய கடன்தொகை முழுவதுமே அரசியல்வாதிகளால் சூறையாடப்பட்ட சொத்து என்பதை துருக்கி அனுபவங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## எல்லையற்ற வெளிநாட்டுத் தலையீடு

இலங்கை ஐரோப்பிய காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்றபோதும் வெளிநாடுகளின் மறுகாலனித்துவமும் ஆதிக்கமும் இன்னும் இங்கே தொடரவே செய்கின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுள் எல்லாவற்றின் மீதும் மேலைய நாடுகளின் ஆதிக்கமும் போட்டி நிலைமகளும் நீடிக்கின்றது என்பது உண்மையே. ஆனால், ஒரு நாட்டின் தன்னிச்சையான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளுக்கு சவால் விடுக்கும் அளவுக்கு அல்லது அதனைத் தீர்மானிக்கும் அளவுக்கு வெளிச் சக்திகள் அழுத்தம் கொடுக்கும் நிலைக்கு நமது நாடு தள்ளப்பட்டுள்ளது. பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கும் இந்த உண்மை பொருந்தும். இதனால்தான் இலங்கை போன்று அவர்களும் பின்னடைந்திருக்கிறார்கள்.

அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் அத்தனை நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டு அவர்களிடம் கையேந்தும் நிலைக்கு நாம் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். கட்டமைப்பு மாற்றம் (Structural Change) எனும் நாணய நிதியத்தின் கொள்கை தொடர்ந்தும் நம்மை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவே வைத்திருக்கின்றது. ஒரு நாட்டை அபிவிருத்தி அடையாமல் தடுப்பதே கட்டமைப்பு மாற்றக் கொள்கையின் பிரதான இலக்காகும்.

இலங்கை மீது இன்று மிகப் பெரிய ஆதிக்கம் கொண்டுள்ள நாடு சீனா. இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா என்பனவும் இலங்கையின் துறைமுகங்கள், கனிமங்கள், இயற்கை வளங்களை கண்ணாங்கொத்திப் பாம்பு போல் கவனித்துக் கொண்டே இருக்கின்றன. பல மில்லியன் அமெரிக்க டொலர் அபிவிருத்திற் திட்டங்களில் ஏற்கனவே சீனா முதலீடு செய்து முன்னணியில் நிற்கின்றது. சீனாவுக்குப் போட்டியாக இந்தியாவும் அமெரிக்காவும் கை கோர்த்துச் செயல்படுகின்றன. ஆக, இலங்கை வெளிநாட்டு ஆதிக்க சக்திகளின் ஆடுகளமாக மாற்றப்பட்டுள்ளது. தங்களுடைய அரசியல் வசதிக்காக எந்தவொரு நபரையும் ஆட்சியாளராகக் கொண்டு வரலாம் என்ற நிலையிலேயே வெளிநாட்டுச் சக்திகள் இங்கு இயங்குகின்றன. இதனால் நமது இறைமை, சுயாதீனம், அத்தனையும் கேள்விக் குள்ளாகியிருக்கின்றன.

பரஸ்பர கௌரவத்துடன் கூடிய, இரு தரப்பு நலன் சார்ந்த, சமநிலையான ஒரு வெளிநாட்டுக் கொள்கை நமக்கு அவசியமாகின்றது. அப்போதுதான் அந்நிய சக்திகளின் ஆடுகளத்திலிருந்து இலங்கையை நாம் விடுவிக்கலாம்.

## அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமைப்படுத்தலில் உள்ள நெருக்கடிகள்

இலங்கையின் தேசிய முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி எதிர்நோக்கி வருகின்ற இன்னொரு பாரிய சவால் மாறி மாறி வரும் அரசாங்கங்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமைக் கொள்கைகள் எதுவுமில்லை என்பது. கடந்த கால இலங்கையில் இது மிகவும் வெட்ட வெளிச்சமானது. அபிவிருத்தியில் முதன்மைக் குரியவை எவை? நாட்டின் தேசிய பிரச்சினைகளில் அதிகூடிய முக்கியத் துவத்துடன் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவை எவை? கால அளவிலும் பெறுமான அடிப்படையிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் எவை? இவை ஒவ்வொரு அரசுக்கும் சவாலாகவே உள்ளது.

சுகாதாரமா? கல்வியா, பாதுகாப்பா, தொழில் வாய்ப்பா என்ற திக்கு முக்காடல்களுக்கு ஒவ்வொரு அரசாங்கமும் உட்பட்டே வருகின்றது. துரதிஷ்ட வசமாக தெற்காசியாவின் ஏனைய அனைத்து நாடுகளுடனும் ஒப்பிடும் போது இலங்கை கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கு ஒதுக்கும் தொகை மிகக் குறைவாக உள்ளது. இது நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் சவாலாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 வீதமான தொகையே கல்விக்கு ஒதுக்கப்படுகின்றது. மலேசியாவில் இது 6.3 வீதமாகவும் இந்தோனேசியா மற்றும் பிலின்பைஸில் 3.4 வீதமாகவும் சிங்கப்பூரில் 3 வீதமாகவும் நேபாளத்தில் 4.1 வீதமாகவும் இந்தியால் 3.8 வீதமாகவும் உள்ளன. ஒப்பீட்டு ரீதியில் இலங்கையின் சுகாதாரத்துறை முன்னேற்றகரமானது. ஆனால் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு போதுமானதல்ல.

அதேவேளை, பாதீட்டில் 25 வீதம் பாதுகாப்புத் துறைக்காக ஒதுக்கப்படுவது போருக்குப் பிந்திய சூழலில் எந்த வகையிலும் பொருத்தமற்றது. இத்தகைய சவால்களைத் தாண்டிச் செல்ல முடியுமானால் மாத்திரமே இலங்கையர்களாகிய நமக்கு நல்லாட்சி சாத்தியமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்ரேலின் ஏற்றுமதிகளைத் தடுக்கும் சட்டம்:

## அயர்லாந்தின் அதிரடி நடவடிக்கை பாராட்டப்பட வேண்டும்

இஸ்ரேலின் அடாவடித்தனங்களுக்கு எதிராக ஐரோப்பிய நாடான அயர்லாந்திலிருந்து முதலாவது எதிர்ப்புக் குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இஸ்ரேல் பலஸ்தீன் எல்லையில் வலுக்கட்டாயமான முறையில் கைப்பற்றிக்கொண்டுள்ள பிரதேசத்திலிருந்து ஏற்றுமதி செய்து வரும் பொருட்களை தனது நாட்டில் இறக்குமதி செய்வதை தடுக்கும் சட்டமொன்றை கடந்த ஜூலை 11ஆம் திகதி அயர்லாந்து செனட் சபையில் நிறைவேற்றியுள்ளது.

இச்சட்ட மூலத்தை வரைவதில் முன்னின்று செயலாற்றிய அயர்லாந்து பாராளுமன்றின் சட்டத்தரணி பிரன்ஸஸ் பிளக் இச்சட்டத்திற்கு அயர்லாந்து சட்ட வல்லுனர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவர் தனது வேண்டுகோளில் "இஸ்ரேல், பலஸ்தீன் எல்லையில் வசித்த மக்களை பலாத்காரமாக விரட்டியுள்ளது. அப்பகுதியில் வசிக்கும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் பலஸ்தீன் விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு அவற்றை அயர்லாந்து நாட்டிற்கு ஏற்றுமதிசெய்கின்றனர். இதன் மூலம் கிடைக்கும் இலாபங்களை இஸ்ரேலுக்கு கிடைக்கும் வகையில் செய்துள்ளனர். இந்தச் செயலுக்கான எதிர்ப்பை தெரிவிக்கும் விடயமே இது.

இது முதலாவதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான நடவடிக்கை. சட்டவிரோத குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டிருப்பது ஒரு யுத்தக் குற்றமாகும். அயர்லாந்து எப்போதும் நீதி, நியாயத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும் குரல் எழுப்பும் என்பதை நாம் உறுதியாகவே கூறிக்கொள்கிறோம். நாம் இன்று பலஸ்தீனுக்கு நீதியை நிலைநாட்டும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க சந்தர்ப்பத்திற்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளோம். இதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம்"

இச்சட்டமூலத்திற்கான வாக்கெடுப்பு நடைபெற முன்னர் பலஸ்தீன் விடுதலை அமைப்பின் சர்வதேச விவகாரங்களுக்கான செயற்பாட்டாளர் ஹனா அஷ்ராபி அயர்லாந்து சட்ட உருவாக்குனர்கள் மத்தியில் "நீங்கள் விசுவாசிக்கும் பெறுமதிகளுக்காக வேண்டி கிளர்ந்தெழுங்கள். இஸ்ரேல் புரியும் அட்டூழியங்களுக்கு பதில் வழங்கும் நடவடிக்கைக்கு தயாராகுங்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

அயர்லாந்து பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மைப் பலமுள்ள Fianna Fail கட்சி இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கடந்த ஜூன் 27ஆம் திகதி தெரிவித்ததைத் தொடர்ந்து ஜூலை 11ஆம் திகதி அயர்லாந்து பாராளுமன்றம் Control of Economy Activity Occupy Territory Bill 2018 எனும் பெயரில் நிறைவேற்றிய சட்டத்திற்கு ஆதரவாக 25 வாக்குகளும் எதிராக 20 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து இஸ்ரேல் ஏற்றுமதி செய்யும் பொருட்களை நிராகரித்த முதலாவது ஐரோப்பிய நாடாக அயர்லாந்து மாறியுள்ளது.

பலஸ்தீன் போராட்டத்திற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் நாடாகவும், போர் குற்றங்களுக்கு எதிராக கிளர்ந்தெழும் சிறந்ததொரு தேசமாகவும் அயர்லாந்து மாறியுள்ளது. அயர்லாந்தின் இந்த நடவடிக்கையானது' சர்வதேச சட்டத்தை ஸ்தாபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்தும் காட்டும் நடவடிக்கையாக உள்ளது. ஒரு சில உலக வல்லரசுகள் இஸ்ரேல் மேற்கொள்ளும் பல்வேறு யுத்தக்குற்றங்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கும் தருணத்தில் அயர்லாந்து சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் பலஸ்தீன் விடுதலைக்காக வேண்டி மிகப்பெரும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

பலஸ்தீனின் மேற்குக் கரையினை இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டு முதல் கைப்பற்றிக்கொண்டுள்ளது. தற்போது இஸ்ரேல் வசமுள்ள மேற்குக் கரையில் மாத்திரம் 7050000 இற்கு மேற்பட்ட சட்டவிரோதக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டில் அத்துமீறிப் பிரவேசித்து குடியேற்றங்களை அமைப்பது சர்வதேச குற்றவியல் சட்டத்தின் படி போர்க் குற்றமாகக் கருதப்படுகிறது. மனிதாபிமான சட்டத்தின் (IHI) படி அது தடைசெய்யப்பட வேண்டிய விடயமாகும்.

அயர்லாந்து செனட் சபை நிறைவேற்றிய இச்சட்டமானது ஏனைய தேசங்களுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது. அயர்லாந்து மற்றும் பலஸ்தீனப் போராட்டங்களுக்கு இடையில் மிகப்பெரும் பிணைப்புள்ளது. பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு பல நூற்றாண்டு காலம் அயர்லாந்து முன்னெடுத்த போராட்டத்திற்கும் பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குமிடையில் ஒருமித்த தன்மைகள் காணப்படுகின்றன.

ஆபிரிக்க மக்களின் சுதந்திர போராட்டம் தொடர்பில் அயர்லாந்து எடுத்திருந்த நிலைப்பாடும் பலஸ்தீன் தொடர்பில் தற்போது எடுத்துள்ள நிலைப்பாட்டுக்குமிடையில் வித்தியாசங்களில்லை. இதன் மூலம் ஐரோப்பாவுக்கும் உலக மக்களுக்கும் முன்மாதிரியொன்றை வழங்கியுள்ளது.

# 'மனந் திறப்போம்'

## பிரபாகரனிய கோட்பாடாக மாறும் யாழ் மண்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஜூலை 02ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிறுவர் மற்றும் மகளிர் விவகார முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பாக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திய மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பொது எதிரணியினர், இந்த உரை அரசியலமைப்பை மீறும் விதத்தில் அமைந்துள்ளதென தெரிவித்து நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டு வந்தனர்.

பொது எதிரணியினர் மாத்திரமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியினரும், முன்னாள் அமைச்சர்களும் விஜயகலாவிற்கு எதிராக கடும் கண்டனங்களை வெளியிட்டு வந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய விஜயகலா தனது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

திடீரென குறித்த உரை தொடர்பில் கடும் கண்டனங்களை வெளியிட்டு வந்த மஹிந்த உட்பட அவரது சகாக்கள் சமீப காலமாக விஜயகாலவுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்து வருகின்றமை தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் அதிசயமாகப் பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ குறித்த கருத்து தொடர்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றுவதை எடுத்துக் காட்டுவதாகவே முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கூற்று அமைந்துள்ளது" என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் அந்தக் கருத்துக்கு பின்னணியில் தற்போதைய தேசிய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கிய போலி வாக்குறுதிகளை நிறைவேற்றாமையே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, குறித்த விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, "இலங்கையின் தற்போதைய மைத்ரி - ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கத்தின் இயலாமை காரணமாக வடக்கில் தீவிரமடைந்துள்ள பாலியல் வன்கொடுமைகள், கொலை, கொள்ளை மற்றும் போதைப் பொருள் பாவணை ஆகிய சம்பவங்களின் வெளிப்பாடாகவே விஜயகலா மகேஸ்வரனின் உரை இடம்பெற்றிருப்பதாக கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

அதேநேரம், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்து கூறியதில் எந்த தவறும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பல்வேறு வாக்குறுதிகளை கொடுத்தன. எனினும் அவற்றை நிறைவேற்றவில்லை எனவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால் இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வை கொண்டு வர வேண்டும். எனினும், இனப்பிரச்சினைக்கான தீர்வை கேட்டால், விடுதலைப் புலிகள் தற்போது இல்லை எனக் கூறி இழுத்தடிப்பு செய்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் அனைத்து அரசாங்கங்களும் யோசனைகளை முன்வைத்தன. எனினும் தற்போது விடுதலைப் புலிகள் இல்லை என்ற காரணத்தினால் அவற்றை நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகள் அமைப்பு குறித்து கூறியதில் எந்த தவறும் இல்லை" என அவர் தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு, பொதுபல சேனா



அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தன் இனத்திற்காக துணிச்சலாக சர்ச்சைக்குரிய கருத்தை விஜயகலா வெளியிட்டுள்ளதாக தேரர் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ தர்மாராம விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 70 வருடங்களாக நாட்டில் உருவான அனைத்து தலைவர்களும் தம்மை பலவீனப்படுத்தினர். இலங்கைக்கு பொருத்தமான தலைவர் ஒருவர் உருவாகவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என பாரிய சர்ச்சைக்குரிய கருத்து வெளியிட்ட விஜயகலா மகேஸ்வரன் தொடர்பில் தான் பெருமை அடைகிறேன். விஜயகலா தனது இனத்திற்காக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்த பெண் தனது இனத்திற்காக முன் நிற்கின்றார். அரசியல்வாதிகள் எங்களை பலவீனப்படுத்துவதை மாத்திரமே செய்தனர். பிரிவினை ஏற்படுத்தினார்கள். இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் எங்களை பலவீனப்படுத்தினார்கள். எனினும் விஜயகலா மகேஸ்வரன் குறித்து பெருமைப்படுகிறேன்.

தான் சிறை வைக்கப்பட்ட பின்னர் இந்த நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் பிக்குகள், பௌத்த மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். என்னை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். பௌத்த புத்திரனாக எங்கள் இனம் மற்றும் மதத்தை காப்பாற்ற நாம் முயற்சிக்கின்றோம். எங்களுக்கு சாப்பிடுவதற்கு வாய், வயிறு உள்ளது போன்று, நாடு ஒன்று இருக்க வேண்டும்.

தங்கள் இனத்தை குறித்து நினைத்தே பிரபாகரன் ஆயுதத்தை கையில் எடுத்தார். இந்த நாட்டில் உள்ள தலைவர்களின் செயற்பாடு காரணமாக விஜயகலா போன்ற பெண்கள் எங்கள் தலைவர்களின் தோள்பட்டையிலும் ஏறுவார்கள். நாம் தியாகம் செய்ய வேண்டும். எங்கள் பிள்ளைகளுக்காக எங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றியமைக்கு எதிராக அரசியலமைப்பின் படி வழக்கு தொடர முடியாது என்று முன்னாள் தலைமை நீதியரசரான சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற தேசிய ஒன்றுமைக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசியலமைப்பின் படி விஜயகலாவுக்கு எதிராக வழக்கு தொடர முடியாது. விஜயகலா மகேஸ்வரனின் இந்தக் கருத்துக்கு பின்னால் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தூண்டல் இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

விஜயகலாவின் கூற்று பிரிவினைவாதம் தொடர்பாக வழங்கிய சத்தியப் பிரமாணத்திற்கு எதிரானதாகும். அதனால் சம்பந்தப்பட்ட நபருக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய முடியும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் விஜயகலா மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சராக இருந்தவர். தனிப்பட்ட முறையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் நெருக்கமான தொடர்பை வைத்திருப்பவர். அவரே இந்த உரையை ஆற்றியிருக்கின்ற நிலையில் அவரது தனிப்பட்ட நோக்கத்திற்கு இதனை மேற்கொண்டிருப்பார் என்று நான் நினைக்கவில்லை.

விஜயகலா மகேஸ்வரன் எதனைக் கூறினாலும் யாருமே தத்தமது சிந்தனையை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். அவருக்கு பெரிதான அரசியல் அனுபவமும், செல்வாக்கும் இல்லை. அவர் ஏன் இதனைக் கூறினார் என்பதே பிரச்சினை.

அவர் இராஜினாமா செய்து விட்டார். இது போன்று திலக் மாரப்பன, விஜேதாஸ ஆகியோரும் இராஜினாமா செய்து மீண்டும் பதவிகளை பெற்றுக் கொண்டதுபோல விஜயகலாவும் மீண்டும் வரலாம்.

அரசியலமைப்பின் 6ஆவது திருத்தத்திற்கு முரணான கருத்தை வெளியிட்ட போதிலும் இதன்படி விஜயகலா செய்யவில்லை. ஆகவே அவருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது. அதற்குப் பதிலாக அவர் விரைந்து அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்து விட்டார். மக்களை திசை திருப்பும் செயலாகவே இதனை பார்க்கின்றோம். என்றும் முன்னாள் தலைமை நீதியரசரான சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

விஜயகலா மகேஸ்வரனின் கூற்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனை சட்டக்கோவையின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என்பது தெரியவருவதாக, திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் பிரிவு கொழும்பு பிரதம நீதவான் ரங்க திசாநாயக்கவிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை தண்டனை சட்டக்கோவையின் 115 மற்றும் 120 ஆகிய சரத்துக்களின் கீழ், விஜயகலா மகேஸ்வரனின் கூற்று பயங்கரவாதத் தடை திருத்தச் சட்டத்தின் கீழ் வருவதாகவும் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்தக் கூற்றை யாழ். நீதிமன்ற அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் தெரிவித்துள்ளதால், இது தொடர்பாக விசாரணை நடத்தி, குறித்த பகுதியிலுள்ள உரிய நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யவுள்ளதாகவும் திட்டமிட்ட வகையில் இடம்பெறும் குற்றங்களை தடுக்கும் பிரிவு நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளதால், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் நாகல்கந்தே சூதத்த தேரர் மற்றும் அந்த அமைப்பின் தலைவர் லியனகே அபேரத்ன ஆகியோர் கடந்த 3 ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இவைகளைத் தொகுத்து நோக்குகின்ற போது, சிறுபான்மையினர் தேசிய கட்சியில் இருந்தாலும் அல்லது தனிக்கட்சியில் இருந்தாலும், அவர் கதைத்தால் பெரும்பான்மையினருக்கு ஆதரவாகக் கதைக்க வேண்டும். இல்லையேல் கதைக்காமல் இருக்க வேண்டும்.

மாறாக சிறுபான்மையினரின் சமகால நிலைப்பாட்டை எடுத்துக் கூறினால் அவர் பதவி துறக்க வேண்டும் என்பதுதான் பெரும்பான்மை தேசிய அரசாங்கத்தின் முடிவு என்பது இப்போது வெளிப்படையாகிவிட்டது.

ஆனால், கலைக்கும், கலாச்சாரத்திற்கும் சிறந்த எடுத்து காட்டாக இருந்த யாழ்ப்பாணம் இன்று கொலைக்கும், கொள்ளைக்கும் எடுத்து காட்டாக இருப்பது கவலைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவி பாடசாலைக்குச் சென்று மதியம் வீடு திரும்பிய வேளையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். ஆள் நடமாட்டம் அற்ற இடத்தில் உள்ள கிணற்றில் சிறுமியின் சடலம் கிடந்துள்ளது. சிறுமி சீருடைகள் அற்ற நிலையில் அரை நிர்வாணமாக கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு மிலேச்சத்தனமாக சிறுவர், சிறுமிகள் கொலை செய்யப்படுகிறார்கள்.

இவ்வாறு, யாழ் வட்டுக்கோட்டையில் நடந்த கொடூரம், நாளாந்தம் வடமாகாணத்தில் நடக்கும் வாள்வெட்டு, அடாவடித்தனம் இவற்றின் காரணமாகவே மீண்டும்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “முகவர்கள் ஹஜ்ஜின் இறுதியில் அழுது துஆக் கேட்டு பாவங்களைக் கழுவி விடுவதால் ஹாஜிகள் முறைப்பாடு செய்வதில்லை”



## எம்.எச். அப்துல் ஹலீம்

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர்

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- **இம்முறை ஹஜ்ஜுக்குரிய ஏற்பாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றன?**

ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் உள்ளது. இம்முறை வித்தியாசமான முறையில் ஹஜ்ஜுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. ஹஜ் விடயங்கள் முன்பு கணினிமயப்படுத்தப்படவில்லை. இம்முறை சகல விடயங்களும் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது ஹஜ் முகவர்களுக்கான அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

- **இம்முறை ஹஜ்ஜுக்கு எத்தனை கோட்டாக்கள் கிடைத்துள்ளன?**

மொத்தமாக எமக்கு 3000 கோட்டாக்கள் கிடைத்துள்ளன. பொதுவாக முஸ்லிம்களின் சனத்தொகையை வைத்தே கோட்டாக்கள் பிரிக்கப்படுகின்றன. இதுவரை காலமும் இலங்கைக்கு 2800 கோட்டாக்களே கிடைத்தன. ஆனால் கடந்த முறை சவூதிக்குச் சென்று ஹஜ் விவகார அமைச்சரை சந்தித்து பேசியமைக்கு இணங்க இன்னும் 200 மேலதிக கோட்டாக்கள் வழங்கப்பட்டன. சில நேரம் இறுதித்தருவாயில் இன்னும் சில கோட்டாக்கள் கிடைக்கும் வாய்ப்புமுள்ளது. கடந்த முறை இறுதித் தருவாயில் 600 கோட்டாக்கள் கிடைத்தன.

- **ஹஜ் கோட்டா கூடிக் குறைவதற்கான காரணங்கள் என்ன?**

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு நான் கையாயிரம் கோட்டாக்கள் கிடைத்தன. தற்பொழுது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள முஸ்லிம் சனத்தொகைக்கு ஏற்பவே கோட்டா பிரித்து வழங்கப்படுகின்றது.

- **கடந்த காலப்பகுதியில் ஹஜ் விவகாரங்களில் மோசடி இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து ஜனாதிபதி விசாரணை குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன் உண்மைத் தன்மை குறித்து தெளிவுபடுத்த முடியுமா?**

இதன் பின்னணியில் எனக்கெதிராக ஒரு குழு செயற்பட்டு வருகின்றது. விஷேடமாக அஸாத் சாலி தலைமையில் இந்தக் குழு செயற்படுகின்றது. எம்.என். முஹம்மட் என்கின்ற முகவர் ஒருவரே எனக்கெதிராக ஹஜ் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். மக்களிடமும் ஹஜ் முகவர்களிடமும் அவரைப் பற்றிக் கேட்டால் அவர் எப்படிப்பட்டவர் என்பதைச் சொல்வார்கள்.

அவர் பொய்யான குற்றச்சாட்டுகளையே முன்வைத்துள்ளார். அவர்கள் மாத்திரமல்ல, உண்மையில் விசாரணை நடத்துமாறு நானும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தேன். நான் இப்பதவிக்கு வர முன்பு ஹஜ் விடயத்தில் சில குழப்ப நிலைகள் ஏற்பட்டு, சுப்ரீம் கோட்டினால் ஒரு வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரமே சகல விடயங்களும் இடம்பெறுகின்றன. அவ்வழிகாட்டல்களை எம்மால் மீற முடியாது.

மற்றுமொரு மாற்றத்தை நான் கொண்டு வந்தேன். அதாவது, ஹஜ்ஜுக்காக வேண்டி அறவிடப்படுகின்ற கட்டணம் அதிகமாகக் காணப்பட்டது. எனவே ஹஜ் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டேன். சட்டமா அதிபர் திணைக்களமும் உடன்பட்டதனைத் தொடர்ந்தே இம்மாற்றத்தைச் செய்தேன்.

ஹஜ் கடமைக்கு ஹாஜிகளிடமிருந்து 8, 9 லட்சங்கள் அறவிட்டார்கள். இது அவ்வளவு செலவாகும் விடயமல்ல. எனவே முகவர்களை அழைத்து, 'இது மார்க்க விடயம், இவ்வளவு அதிக தொகையை அறவிடாதீர்கள். நியாயமான முறையில் சம்பாதியுங்கள்' என்றேன். அவர்கள் இதனை ஏற்றுக்கொண்டார்கள்.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா, தேசிய ஷூறா சபை மற்றும் மார்க்க ரீதியாக எமக்கு வழிகாட்டுகின்ற பலருடைய கருத்துக்களையும் பெற்றதன் பின்பு அந்த முறையை மாற்றியமைத்தோம். அதாவது முன்னர் 50, 100 என்றவாறு முகவர்களுக்கு கோட்டாக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆனால் புதிய முறையில் பாஸ்போட் கொண்டு வந்தாலேயே வீசாக்கள் வழங்கப்படும். அதேநேரம் குறிப்பிட்ட முகவர் நிலையங்கள் ஹாஜிகளுக்கு அளிக்கின்ற வசதிகளை எம்மிடம் அறிவிக்க வேண்டும். எமது ஹஜ் குழு ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று மக்களை அறிவுறுத்தியது.

சில முகவர்கள் ஏராளமான வாக்குறுதிகளை அளித்துவிட்டு அவற்றில் சிலவற்றையே நிறைவேற்றுகிறார்கள். ஹஜ் கிரியைகள் முடிந்ததும் ஒரு மௌலவியை அழைத்து அழுகையோடு துஆ கேட்பார்கள். இத்தோடு எல்லாப் பாவங்களும் கழுவப்பட்டு விடும் என்று நம்புகிறார்கள். இதனால் அநேகமான ஹாஜிகள் ஹஜ் முடிந்ததன் பிறகு எம்மிடம் வந்து முறைப்பாடு செய்வது குறைவு. முறைப்பாடு செய்த விடயங்களும் சரியாக விசாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதனால் கடந்த வருடத்திலிருந்து முறைப்பாடுகளையெல்லாம் சரியான முறையில் விசாரித்து அதற்கேற்ற வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சில முகவர் நிலையங்களை நாம் தடைசெய்தோம்.

உதாரணத்திற்கு கடந்த முறை இறுதித் தருவாயில் எமக்கு 600 கோட்டாக்கள் கிடைத்தன. ஒரு சில முகவர்களே இங்கிருந்தார்கள். மற்ற முகவர்கள் ஹாஜிகளை அழைத்துக் கொண்டு ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தார்கள். இதனால் இங்கிருந்த சில முகவர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட போது ஒரு முகவர் மக்களிடம் பணத்தை அறிவிட்டுக் கொண்டு அவர்களை அழைத்துச் செல்லவில்லை. அந்த ஹாஜிகள் இன்னும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள். ஊர்களில் சில ஹாஜிகள் வழியனுப்பப்பட்டு விமான நிலையம் வந்த பின்னர் திருப்பியனுப்பப்பட்டார்கள். இன்னும் சிலர் கிராமங்களுக்கு செல்ல முடியாமல் ஹஜ் முடியும் வரை ஹோட்டல்களில் தங்கிய சம்பவங்களும் உள்ளன.

- **ஹஜ் விவகாரத்தை முறையாகக் கையாள்வதற்குரிய சட்ட ஏற்பாடுகள் எவ்வகையில் உள்ளது?**

ஹஜ் தொடர்பில் எம்மிடம் சட்ட ரீதியான உரிய நடைமுறைகள் இல்லை. இதனால் எப்படி முறையாக, பிழைகள் இடம்பெறாத வண்ணம் ஹஜ் விவகாரத்தை கையாள்வதென்கின்ற சட்ட ரீதியான வரைபொன்றுக்கான அமைச்சரவை அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ளேன். இதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. இது தொடர்பில் நாம் மக்களிடம் கலந்தாலோசித்து சட்ட ரீதியான கோவையாக -இது எப்படி அமைய வேண்டும் என்கின்ற கருத்துக்களை பெறவுள்ளோம். அதனைத் தொடர்ந்து சட்டமா அதிபரிடம் கதைத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன்.

இப்படி சட்டரீதியாக அமையும் பட்சத்தில் ஏதும் பிரச்சினைகள் இருக்காது. இன்று பல நாடுகளில் ஹஜ் விவகாரத்தை அந்தந்த அரசாங்கங்களே பொறுப்பேற்றுச் செய்கின்றது. இந்தியா, மலேஷியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இதனை காணலாம். நாம் இங்கு சிறுபான்மையாக இருப்பதால் முகவர்களின் தயவை நாடுகின்றோம்.

- **முஸ்லிம் சமூக கலாசார அபிவிருத்திக்கு நீங்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் என்ன?**

நாம் பல்வேறு புதிய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அண்மையில் இடம்பெற்ற சிறந்த பள்ளிவாசலுக்கான பரிசளிப்பு வைபவம் நல்லதொரு திட்டமாக நோக்கப்படுகின்றது.

இன்று நாட்டில் நல்லிணக்கத்தை வளர்ப்பதே மிக முக்கியமான தேவையாக உள்ளது. எமது பள்ளிவாசல்கள் தொழுவிக்கும் இடமாக மாத்திரமே காணப்பட்டது. பள்ளிவாசல்கள் இப்படியில்லாமல் வித்தியாசமாக அமைய வேண்டும் என்பதே எமது கோட்பாடு.

விஷேடமாக நாம் அந்நிய சமூகத்தோடு நல்லுறவைப் பேண வேண்டும் என்ற வகையில் ஐந்து விடயங்களுக்கு கீழால் ஒரு மதிப்பீட்டை செய்து பார்த்தோம். ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான கவுன்ஸிலுடன் இணைந்து அந்நிய சமூகத்தவர்களை சகல பள்ளிவாசல்களுக்கும் அழைத்து மதிப்பீடுகளை செய்து பரிசில்களை வழங்கினோம்.

மற்றுமொரு திட்டமாக Open Mosque திட்டம் உள்ளது. இதுதவிர, மாற்று மதங்களை சேர்ந்த மதகுருக்கள், சகோதரர்கள் எமது பள்ளிவாசல்களுக்கு வருகை தந்தால் அவர்களை உபசரிப்பதற்கான அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார் மற்றும் கண்டி மீராமக்காம் பள்ளிவாசல்களில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

மற்ற விடயம் என்னவெனில் மத்ரசாக்களின் பதிவு விடயங்கள். எமது திணைக்களத்தில் வரையறையில்லாமல் மத்ரஸாக்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டரீதியான நடைமுறைகளும் இல்லை. இதனால் வக்ப் சட்ட மூலத்தை விரைவில் கொண்டு வந்து அதன் கீழ் மத்ரஸாக்களை கொண்டு வரவுள்ளோம். இன்று ஒவ்வொரு மத்ரசாக்களிலும் ஒவ்வொரு பாடத் திட்டம் போதிக்கப்பட்டு வருகின்றது. ஜாமியா நளீமியா கலாபீடத்துடன் இணைந்து மத்ரசாக்களுக்கான ஒரு பொதுவான பாடத் திட்டத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இது தொடர்பாக ஓரிரு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

- **திகன வன்முறையில் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்களை கட்டித் தருவதாக அரசாங்கம் வாக்குறுதியளித்தது. தற்பொழுது அந்த விடயம் எவ்வாறான கட்டத்தில் உள்ளது?**

திகன வன்முறையில் சேதமான பள்ளிகள் மூன்று வகைக்குட்படுத்தப்பட்டன. குறைந்தளவு பாதிக்குள்ளானவை, பெரியளவில் பாதிப்புக்குள்ளானவை, நடுத்தர அளவில் பாதிப்புக்குள்ளானவை என்றவாறு. குறைந்தளவு பாதிப்புக்குள்ளான பள்ளிகள் திருத்தப்பட்டு வருகின்றன. இதில் 10 பள்ளிவாசல்கள் பெரியளவில் பாதிப்புக்குள்ளாயின. இது தொடர்பில் பொறியியலாளர் குழுவொன்று அறிக்கை தயாரித்தது. அவ்வறிக்கைக்கான அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் அப்பள்ளிவாசல்களுக்கான புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

- **பிறைக்குழுவின் அதிகாரங்கள் என்ன? இதன் பிறகு பிறை விவகாரம் உங்களது தலைமையின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதா?**

பிறை தொடர்பில் இதற்கு முன்னரும் நிறைய சர்ச்சைகள் ஏற்பட்டன. ஆரம்ப காலத்திலிருந்தே கொழும்பு பெரிய பள்ளிவாசலும், ஜம்மிய்யத்துல் உலமாவும் இணைந்து பிறை முடிவுகளை அறிவித்து வந்தது. எமது அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் மாத்திரமே பிறை அறிவிப்பு விடயங்களில் பங்குபற்றி வந்திருக்கிறார். இதை விட விரிவாக, அழகான முறையில், சர்ச்சைகள் ஏற்படாத வண்ணம் பிறைக்குழு அமைய வேண்டும் என நினைத்தோம். பெரிய பள்ளிவாசலே தொடர்ந்தும் இதனை பொறுப்பேற்க வேண்டும் என சிலர் கூறினார்கள். அவர்களையும் இணைத்துக்கொண்டு இரண்டு மேலதிக குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஒன்று மேல்மட்டக் குழு. இதில் நானும், உலமா சபைத் தலைவரும், பிறைக்குழுத் தலைவரும், கொழும்பு பெரியபள்ளிவாசல் தலைவர், வக்பு சபைத் தலைவர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோர் உள்ளனர்.

அடுத்த குழுவில் வானசாஸ்திரம் தொடர்பாக அனுபவமுள்ளவர்கள், பிறைக்குழு தொடர்பாக அனுபவமுள்ளவர்கள் உள்ளடங்கலாக ஒரு குழு அமைக்கப்பட்டது. எமது சமூகத்தில் வான சாஸ்திரம் தொடர்பாகவும், பிறை (பக்.14)

---

## எழுவாம், மயமிலை



அபூ ஷாமில்

### இந்த ஆண்டின் சிறந்த பள்ளிவாசலுக்கான விருது

பள்ளிவாசல்கள் பூமியின் சிறப்பிடங்களாக நிர்ணயிக்கப்பட்டவை. இலங்கையின் இனவாத சக்திகளின் தீ நாக்குகள் இந்தப் புனிதத் தலங்களையும் விட்டு வைக்கவில்லை. பள்ளிவாசல்கள் இனவாதிகளின் இலக்காவதற்கு முக்கியமான காரணம் பள்ளிவாசல்கள் வெளித்தெரியக் கூடிய சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு பள்ளிவாசல்களின் பணியை அறைகூவாமல் இருந்தமைதான். நாட்டின் ஏனைய வழிபாட்டுத் தலங்களைப் போல வணங்குவதற்கான தளமாக மட்டுமன்றி பள்ளிவாசல்கள் சமூக அசைவியக்கத்துக்கான மையத் தலமாகச் செயற்படுவதில் அண்மைக் காலங்களில் விட்ட குறைபாடுகள் தான் பள்ளிவாசல்களை முஸ்லிம் சமூகத்தை விட்டும் தூரமாக்கவும், ஏனையவர்கள் ஓரக் கண்ணால் பள்ளிவாசல்களைப் பார்ப்பதற்கும் வழிவகுத்தன.

இந்த நிலையிலிருந்து பள்ளிவாசல்களை ஆக்கபூர்வமான நிலைக்கு கொண்டுவருவதற்கான வழிகாட்டலும் உந்துசக்தியும் வழங்கப்பட வேண்டிய தேவை சமூகத்தில் வெகுவாகவே இருந்தது. இந்த நிலையில் தான் ARC எனப்படுகின்ற ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான கவுன்ஸில் தேசிய மஸ்ஜித் விருது வழங்கும் விழாவொன்றை ஏற்பாடு செய்திருந்தது. கல்வி, வாழ்வாதாரம், சமூகப் பணி, சக வாழ்வு ஆகிய பகுதிகளில் பங்களிப்புச் செய்த பள்ளிவாசல்கள் தரப்படுத்தப்பட்டு பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவுகளும் சிறப்பாகச் செயற்பட்ட ஐந்து பள்ளிவாசல்களுக்கு விருதுகளும் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதலாவது பரிசாக 300,000 ரூபாவும், இரண்டாவது பரிசாக 200,000 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100,000 ரூபாவும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர்.

நாட்டிலுள்ள 2000 க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களில் 152 பள்ளிவாசல்கள் இந்தத் தரப்படுத்தலுக்கு உள்வாங்கப்பட்டிருந்தன. பத்திரிகை வாயிலாக இந்த விருது வழங்கும் திட்டம் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதும் பள்ளிவாசல்களுக்கும் பத்திரிகைகளுக்கும் இருக்கின்ற தூரம் காரணமாகவோ என்னவோ 152 பள்ளிவாசல்களே விண்ணப்பித்திருக்கின்றன. இந்தப் பள்ளிவாசல்களில் இருந்து அவற்றின் செயற்பாடுகளை மதிப்பிட்டு டொப் 10 பள்ளிவாசல்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான சிறந்த பள்ளிவாசலாக கொழும்பு வாழைத்தோட்டம் அந்நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசல் தேர்ந்தெடுக்கப்பட்டது. விருது கிடைத்த பள்ளிவாசல்களில் கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனை மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் மட்டுமே காணப்பட்டது.

பள்ளிவாசல்களை தரப்படுத்தி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு உலகிலேயே இங்குதான் முதலில் நடைபெறுகிறது என்றும் இந்த விழாவின் போது சுட்டிக்காட்டினார்கள். விருதுக்கான அங்கீகாரத்தை அதிகரிக்கும் வகையில் விருது வழங்கும் விழாவை ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். பாராளுமன்றத்தின் சபாநாயகர் உட்பட பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும் என பல முக்கிய பிரமுகர்களின் முன்னிலையில் விருதுகள் வழங்கப்பட்டன. பௌத்த மதத் தலைவர்கள் பலரும் கூட அழைக்கப்பட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

சிறப்பாக இயங்குகின்ற பள்ளிவாசல்களை கௌரவிப்பதும் ஏனைய பள்ளிவாசல்களை அதன்பால் தூண்டுவதுமே இந்த விருது வழங்குதலின் நோக்கமாகச் சொல்லப்பட்டது. பள்ளிவாசல்களை கட்டிப் பிடித்துக் கொண்டு தானும் எதுவும் செய்யாமல் அடுத்தவர்களையும் செய்யவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்ற பள்ளிவாசல்களுக்கு மத்தியில், ஊர் மக்களுடைய ஏச்சும் பேச்சும் கேட்டுக் கொண்டு, எங்களுக்கு எதுக்கு வீண் வேலை என்று ஒதுக்கித் தள்ளாமல் பள்ளிவாசல்களை ஒரு சமூக மையமாக மாற்றுவதில் அரும்பணி புரிந்த பள்ளிவாசல் நிர்வாகிகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டது உண்மையிலேயே மன நிறைவான விடயம் தான்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் தேசத்துக்குப் பங்களித்தல் என்ற பகுதிக்கும் விருது வழங்க முடியுமாக இருந்தால், ஏனைய சமய வழிபாட்டுத் தலங்களையும் போட்டி போட வைத்திருக்க முடியும். அத்தோடு முஸ்லிம் சமூகம் பள்ளிவாசல்கள் செய்ய வேண்டுமென பெரிதும் எதிர்பார்க்கின்ற சமூக ஒற்றுமைக்கான பங்களிப்பைச் செய்கின்ற பள்ளிவாசல்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டால் விருது அர்த்தமுள்ளதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## காஸா சிறுவர்கள் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் படுகொலை



வீட்டின் மேற்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்களை இஸ்ரேலிய விமானம் குறி வைத்துத் தாக்கியதில் அச்சிறுவர்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ள சம்பவம் காஸாவில் இடம்பெற்றுள்ளது. 16 வயதான லுவைஸ் கலீல் மற்றும் 15 வயதான ஆமிர் அல் இம்ரா ஆகிய சிறுவர்களே காஸாவில் வைத்து இஸ்ரேலிய வான் படையால் கொல்லப்பட்டுள்ளனர்.

லுவைஸ் கலீலின் தாய், சம்பவம் குறித்து விபரிக்கும்போது ''ஒரு பெரும் வெடிப்புச் சத்தம் கேட்டது. மேலே எனது மகனுக்கு ஏதொ நடந்து விட்டது என்று உணர்ந்து கொண்டேன். அங்கு சென்று பார்த்தபோது எனது மகனைச் சூழ மக்கள் குழுமியிருந்ததைக் கண்டேன்.''

சம்பவம் நடந்தபோது லுவைஸ் கலீலின் தாய் சற்றுத் தொலைவிலிருந்து வருகை தந்துகொண்டிருந்தார். மகனைப் பார்த்தவுடன் அவர் அதிர்ச்சியில் உறைந்து போனார். அது போன்றே ஆமிர் இம்ரா இத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.


கடந்த 15 ஆம் திகதி காஸாவிலுள்ள ஹமாஸின் காப்பரண்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அதன்போது எந்த சம்பந்தமும் இல்லாத இரண்டு சிறுவர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டதோடு மேலும் 30 பலஸ்தீனர்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற காஸா மீதான தாக்குதலுக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான காஸா மக்கள் இத்தகைய தனித் தனி தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். 2014 தாக்குதலில் ஒரே முறையில் 2250 பொது மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட இரு சிறுவர்களும் மத்திய கஸா வீதியில் வசிக்கின்றவர்கள். ஒரே வகுப்பறை நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பனிப்போர் முடிந்து விட்டது. இனி இணைந்து செயற்படுவோம்

### -ட்ரம்ப் புட்டின் உறுதி



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஆகியோரின் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பதட்டத்தை நீக்கிக் கொள்வதற்கும் இணக்கம் கண்டுள்ளனர். பின்லாந்தின் தலைநகரம் ஹெல்சிங்கியில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இருவரும் இவ்வாறு தெரிவித்தனர்.

''ரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் முரண்பட்டுக் கொள்வதற்கு தெளிவான காரணங்கள் எதுவுமில்லை. பனிப்போர் என்பது கடந்த காலத்தின் விவகாரம். இன்றைய உலக நிலமை முற்றாக மாறிவிட்டது'' என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்தார். ''ரஷ்யாவும் அமெரிக்காவும் பகைத்துக் கொள்வது முட்டாள் தனம்'' என்று ஏற்கனவே ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

ஹெல்சிங்கி உச்சிமாநாட்டை அடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ''நடந்து முடிந்த பேச்சுவார்த்தை நேரடியானது, திறந்தது, ஆழமானது, பயன்மிக்கது'' என்றார். இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்து வேற்றுமைகளை ராஜதந்திர ரீதியில் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை தனக்குள்ளது. இந்த கலந்துரையாடலால் அமெரிக்கா மட்டுமல்ல, ரஷ்யா மட்டுமல்ல, உலகத்திற்கே பயன் ஏற்பட்டுள்ளது என்று டொனால்ட் ட்ரம்ப் அங்கு தெரிவித்தார்.

தகவல் துறை பாதுகாப்பு, சிரியாவின் பிரச்சினை என்பன குறித்தும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

## ஆப்கான் தாலிபான்களோடு பேசத் தயார்: அமெரிக்கா



17 ஆண்டுகாலமாக ஆப்கானில் இடம்பெற்று வரும் சிவில் யுத்தத்தை முடித்துக் கொள்வதற்கு தாலிபான்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அமெரிக்கா தயார் என்று அமெரிக்காவின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஜெனரல் ஜோன் நிக்கல்சன் எனும் அமெரிக்க இராணுவ அதிகாரியே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ரமழான் மாதம் ஆப்கான் அரச படைகளுக்கும் தாலிபான்களுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் இடம்பெற்ற போது ஆப்கான் முழுவதும் அமைதி நிலவியது. இந்நிலை நீடிக்க வேண்டுமாயின் இப்பிரச்சினை ஆயுத ரீதியாக வன்றி, ராஜதந்திர ரீதியிலேயே அணுகப்பட வேண்டும்.

ஆப்கான் பாதுகாப்பிற்கும் எல்லைப் புற நாடுகளின் பாதுகாப்பிற்கும் சவாலாக விளங்கும் தாலிபான்களை ஆயுத ரீதியில் எதிர்கொள்வது பிரச்சினைக்குத் தீர்வாகாது. நேட்டோ படைக்கு தலைமை தாங்கிய நிக்கல்சன் ஆப்கானின் எதிர்காலம் அமைதிப் பேச்சுவார்த்தையிலேயே தங்கியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்நிலைப்பாடு தன்னுடையது அல்ல எனவும், ஏற்கனவே அமெரிக்க ராஜாங்க செயலாளர் மைக் பொம்போ தாலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயார் என்று கூறியிருந்ததை நிக்கல்சன் நினைவுகூர்ந்தார்.

## மியன்மாருக்கு இஸ்ரேல் தொடர்ந்தும் ஆயுத விநியோகம்



மியன்மாரை இராணுவ ரீதியில் பலப்படுத்தும் முயற்சியில் இஸ்ரேல் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. இது தொடர்பாக ஜூலை 04 இல் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அதன் தலைவர் ஸைத் ராஇத் அல் ஹுஸைன் சில முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதன்போது, இஸ்ரேலும் மியன்மாரும் பயங்கரவாதத்தை இலக்கு வைக்கின்றோம் என்ற பெயரில் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. டெல் அவிவ் மற்றும் யங்கூன் என்பன தமது போர்க் குற்றங்களை வெளிப்படுத்த முயலும் ஊடகவியலாளர்களை அடக்கி ஒதுக்குகின்றன என ஹுஸைன் தெரிவித்தார்.

ஜூன் 18 இல் இஸ்ரேலில் நிறைவேற்றப்பட்ட சட்ட மொன்றின்படி இஸ்ரேலின் இராணுவத்தின் நடவடிக்கைகளை ஒளிப்பதிவு செய்வது குற்றம் என அறிவிக்கப்பட்டது. இதே இஸ்ரேல் பர்மாவுக்கத் தொடர்ந்தும் ஆயுதங்களை விநியோகித்து வருகின்றது.

பர்மாவில் ஜனநாயகம் பௌத்தர் களுக்கு மட்டுமே. ரோஹிங்யர்களுக்கு அல்ல. இஸ்ரேலில் இது யூதர்களுக்கு மட்டுமே பலஸ்தீனர்களுக்கு அல்ல என பலஸ்தீனின் பிரபல பத்திரிகையாளர் ரம்ஸி பாரூத் குற்றம் சாட்டியுள்ளார்.

## இராணுவத்தினரை விசாரணையிலிருந்து பாதுகாக்கும் புதிய சட்டம் எகிப்தில்

கலாநிதி முஹம்மத் முர்ஸி அவர்களை பதவி கவிழ்த்த போதும், பதவி கவிழ்த்த பின்னரும் நடந்த பிரதான வன்முறைச் சம்பவங்களோடு தொடர்பான இராணுவ அதிகாரிகளுக்கு விசாரணை விலக்களிக்கும் சட்டமூலமொன்றை எகிப்திய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. 2013 இல் ஜனாதிபதி முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

16 ஜூலை 2018 இல் இப்புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி 03 ஜூலை 2013 தொடக்கம் 08 ஜூன் 2014 -அதாவது முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டு ஸீஸி பதவியேற்று முதல் நாள் வரைக்கும் இடம்பெற்ற தாக்குதல்கள் பற்றிய விசாரணைகளிலிருந்து இராணுவ அதிகாரிகள் விடுவிக்கப்படுகின்றனர்.

உண்மையில் இக்குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் 800 முஸ்லிம் சகோதரத்துவ இயக்க ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். 2013 ஆகஸ்டில் கெய்ரோவிலுள்ள ரபா சதுக்கத்தில் அமைதியாக உட்கார்ந்து நீதி கோரிய பொதுமக்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியது. இப்போர்க் குற்றத்தைப் புரிந்தவர்களே புதிய சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றனர்.



இச்சட்டத்தை எகிப்தில் பலர் கடுமையாக விமர்சித்துள்ளதோடு, குற்றவாளிகளைப் பாதுகாக்கும் சட்டம் என வர்ணித்துள்ளனர்.


## லிபியாவிலிருந்து புலம்பெயரும் அகதிகள் தொடர்ந்தும் ஆபத்தில்



லிபியாவின் சிவில் யுத்தத்திலிருந்து தப்பியோடும் அகதிகள் தொடர்ந்தும் உயிராபத்தை எதிர்நோக்கி வருவதாக ஐரோப்பிய நாடுகள் எச்சரித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் புலம் பெயர்வுப் பிரிவு இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், சமீபத்தில் லிபியாவின் வடமேற்குக் கரையில் 150 குடியேற்றவாசிகள் காப்பாற்றப்பட்டனர் எனவும் தொடர்ந்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு லிபியர்கள் இடம்பெயர்கின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

தலைநகர் திரிப்போலியில் இருந்து வடமேற்காக அமைந்துள்ள ஹும்ஸ் துறைமுகத்திலிருந்து அதிக குடியேற்றவாசிகள் கடல் வழியாக ஐரோப்பாவிற்குள் நுழைகின்றனர். இதேவேளை, ஆபிரிக்காவின் பிற நாடுகளிலிருந்து வரும் அகதிகளும் லிபிய கடற்கரை வழியாகவே ஐரோப்பிய நாடுகளுக்கு ஊடுருவுகின்றனர் என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## உலகில் பலம் வாய்ந்த நாடுகளின் பட்டியலில் சவூதி மற்றும் ஐக்கிய அறபு அமீரகம்



அமெரிக்கச் செய்தி நிறுவனமொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகத்தின் பலம் வாய்ந்த நாடுகளின் பட்டியலில் சவூதி அறேபியாவை சேர்த்துள்ளது. 25 உலகப் பலம் வாய்ந்த நாடுகளின் பட்டியலில் இஸ்ரேல், சவூதி அறேபியா, ஐக்கிய அறபு அமீரகம், ஈரான், துருக்கி, கட்டார், எகிப்து என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கிலேயே மிகப் பலமான நாடாக இஸ்ரேல் குறிப்பிடப்பட்டுள்ளது. 25 நாடகளின் பட்டியலில் இஸ்ரேலுக்கு 8 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. இராணுவ ரீதியில் மிகப் பலமான மத்திய கிழக்கு நாடு எனவும் அமெரிக்காவின் ஆதரவு பெற்ற நாடு எனவும் இஸ்ரேல் குறிப்பிடப்பட்டுள்ளது. 9 ஆவது இடம் சவூதி அறேபியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திய கிழக்கு புவி அரசியலும் தேசங்களின் சிதைவும்

• முஷாஹித் அஹ்மத்

மத்திய கிழக்கு (தென்மேற்கு ஆசியா) உலக நிலப் பரப்பில் புவிசார் பொருளாதாரத்திலும் அரசியலிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியமாகும். இங்கு 300 மில்லியன் அறபை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் 12 நாடுகளில் வாழ்கின்றனர். 1990 களுக்குப் பின்னர் இந்நாடுகளில் ஏற்பட்ட அமைதியின்மை சிவில் யுத்தங்கள், ஆயுதக் கிளர்ச்சிகள் மற்றும் அறபு வசந்தம் என்பவற்றால் இந்நாடுகள் நிலை குலைந்து போயுள்ளன.

1990 வளைகுடாப் போரின்போது பெரும்பாலான மத்திய கிழக்கு அறபு நாடுகளில் அமெரிக்க இராணுவம் நிலை நிறுத்தப்பட்டது. ஈராக்கை அடி பணிய வைப்பதற்கு பிரிட்டனும் பிரான்ஸும் அமெரிக்காவும் தொடர்ச்சியாக அந்நாட்டின் மீது குண்டுமழை பொழிந்தன. ரேகனின் காலத்தில் ஆரம்பித்த ஈராக் ஆக்கிரமிப்பு இன்று வரை தொடர்கின்றது. 2003 மார்ச்சில் அமெரிக்கா ஈராக்கை தாக்கி அதன் எண்ணெய் வளத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.

யெமன் கடந்த 3 ஆண்டுகளாக சவூதி அரேபியா தலைமையிலான வளைகுடா ஒப்பந்த நாடுகளின் விமானத் தாக்குதல்களுக்கு இலக்காகி நிலைகுலைந்து போயுள்ளது. 2017 மே மாதம் கட்டார் பிற அறபு நாடுகளால் ஒதுக்கப்பட்டு ராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டன. 2017 நவம்பரில் சஊதி அந்நாட்டின் முக்கிய இளவரசர்களைக் கைது செய்தது. இதே ஆண்டு ஜூன் மாதம் ஜெரூசலம் இஸ்ரேலின் தலைநகர் என ட்ரம்ப் பிரகடனம் செய்ததார். 2018 மே மாதம் அமெரிக்கத் தூதகரம் டெல் அவிவிலிருந்து ஜெரூசலத்திற்கு மாற்றப்பட்டது. வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத வகையில் இஸ்ரேலுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் 'நூற்றாண்டின் ஒப்பந்தம்' எனப்படும் அரசியல் உடன்படிக்கையொன்று கைச்சாத்தாகியது.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு தொடங்கிய அறபு வசந்தம் 7 ஆண்டுகால நிறைவில் ஆறரை இலட்சம் மக்களைப் பலி கொண்டுள்ளதோடு, நாட்டின் அரைவாசி மக்களை நாட்டிலிருந்து அகதிகளாய் வெளியேற்றியுள்ளது. தொடர்ந்தும் சிரியாவின் தர்ஆ பிராந்தியத்தில் கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து அரச படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். தர்ஆ கிளர்ச்சி தொடங்கிய நிலம் என்பது கவனிப்புக்குரியது.

ஜோர்தானின் மன்னர் இரண்டாம் அப்துல்லாஹ் இஸ்ரேலியப் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். துரக்கிய ஜனாதிபதித் தேர்தலில் அர்தூகான் வெற்றி பெற்றதை அடுத்து ஜெரூசலம் குறித்த கவனம் அதிகரித்து வருகின்றது. வரலாற்று ரீதியில் ஜெரூசலத்தை பராமரிக்கும் உரிமை ஜோர்தானின் ஹாஷிமிய்யா குடும்பத்திற்கு உள்ளது என்று மன்னர் 2 ஆம் அப்துல்லாஹ் வாதிக்கின்றார்.

அதேவேளை, பலஸ்தீன் ஒரு காலத்தில் உஸ்மானிய பகுதிகளில் ஒன்றாக விளங்கியமையால் ஜெரூசலத்தின் மீதான உரிமை துருக்கிக்கு உள்ளதென்றும் அர்தூகானின் வெற்றிக்குப் பின்னர் பலஸ்தீன் விவகாரத்தில் துருக்கி இன்னும் அதிகம் தலையிடலாம் என்றும் ஜோர்தான் எச்சரிக்கின்றது. இதற்கிடையில் ஜோர்தானில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியினால் மக்கள் சாலை மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

மத்திய கிழக்கிலுள்ள இன்னொரு நாடு லெபனான். வரலாற்று ரீதியில் ஷாம் என அழைக்கப்பட்ட விரிந்த நிலத்தின் ஒரு பகுதி. சுன்னிகள், ஷீஆக்கள், துரூசிகள், கிறிஸ்தவர்களைக் கொண்ட நாடு. கடந்த பத்தாண்டுகளாக ஸ்திரமில்லாத அரசாங்கம் நீடிக்கும் லெனானில், பிரதமர் ஸஅத் அல் ஹரீரி ரியாதின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. அவரை எதிர்த்து நிற்கும் ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தை ஈரான் வழிநடாத்தி வருவதாக சவூதி குற்றஞ்சாட்டுகின்றது.

மத்திய கிழக்கிலுள்ள அறபு அல்லாத ஒரே நாடு ஈரான். 1505 ஆம் ஆண்டிலிருந்து ஷீஆயிஸத்தை அரச மதமாகக் கடைப்பிடித்து வருகின்றது. பாரசீகர்களின் ஈரான் மற்றும் சவூதி அரேபியாவுக்கிடையிலான ஷீஆ-சுன்னி மோதல் மத்திய கிழக்கில் பெரும் அரசியல் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. யெமன், சிரியா, லெபனான் ஆகிய 3 நாடுகளும் ஈரான் சவூதி அரேபியா ஆகியவற்றின் போட்டி நிலமாகவும் அரசியல் ஆடுகளமாகவும் கையாளப்படுகின்றன.

யெமனில் ஹூதிகளை ஈரான் வழி நடாத்துகின்றது. அரச படையோடு சேர்ந்து ஹூதிகளை ரியாத் எதிர்த்து நிற்கின்றது. சிரியாவில் சுன்னி ஆயுதக் கிளர்ச்சியாளர்களுக்கு சவூதி ஆதரவளிக்கின்றது. ஆளும் தரப்புக்கு அவர்கள் ஷீஆக் கும்பல் என்பதனால் ஈரான் ஆதரவளிக்கின்றது.

லெபனானில் ரபீக் ஹரீரியின் படுகொலைக்குப் பின்னர் பதவிக்கு வந்த அவரது மகன் சஅத் ஹரீரி, ரியாதின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளார். அதேவேளை, அரசாங்கப் படைக்குச் சவால் விடுக்கும் வகையில் அதிசக்தி வாய்ந்த ஆயுதங்களுடன் நடமாடும் ஹிஸ்புல்லாஹ் பரா இராணுவ அமைப்பை ஈரான் நிதியாதரவு மூலமோ படைக்கலன்கள் மூலமோ பலப்படுத்தி வருகின்றது.

ஈராக் சமீபகாலம் வரை, அதாவது 2003 ஆக்கிரமிப்புக்குப் பின்னர் - வொஷிங்டனின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. போருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அமெரிக்க ஆதரவு அரசாங்கம் ஈரானின் ஆதரவு அரசாங்கமாகவும் செயல்பட்டு வந்தது. ஏனெனில், போருக்குப் பிந்திய ஆளும் வர்க்கத் தலைமைகள் அனைவரும் ஷீஆ சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஈராக் சவூதி -ஈரானின் ஆடுகளமாக இதுவரை இருக்கவில்லை. ஆயினும், சமீபத்தில் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் யெமன் சிரியா, லெபனான் போன்று ஈராக்கும் சவூதி-ஈரான் போட்டிக் களமாக மாறும் அபாயம் உள்ளது.

ஈராக்கில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் முக்ததா சத்ரின் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. முக்ததா சத்ர் அடிப்படையில் ஒரு ஷீஆ தலைவர். தொடக்கத்தில் ஈரான் ஆதரவாளி. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ரியாத் அவரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது. ரியாதின் நிதி ஆதரவோடு சத்ர் ஈராக்கில் வெற்றி பெற்றுள்ளார். அவர் ஷீஆவாக இருந்தாலும் சவூதியின் ஆதரவாளராகவும் முகவராகவும் செயல்படப் போகிறார் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

ஒட்டுமொத்த மத்திய கிழக்கிலும் நீண்டகாலமாக அரசியல் நெருக்கடிகளுக்கு உட்பட்டு வரும் பிராந்தியம் பலஸ்தீன். 1948 ஆம் ஆண்டிலிருந்து 70 ஆண்டு காலமாக பலஸ்தீனர்கள் நில ஆக்கிரமிப்பையும் இனப்படுகொலைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

2001 ஆம் ஆண்டிலிருந்து மிகப் பயங்கரமான மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நாடு சிரியா. கடந்த ஆறாண்டு கால இடைவெளியில் மாத்திரம் சுமார் ஆறரை இலட்சம் பேர் அந்நாட்டில் கொல்லப்பட்டுள்ளனர். சிவில் யுத்தம் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் எதுவும் அங்கு தென்படவில்லை. பஹ்ரைன், அறபு அமீரகம், சவூதி [illegible] துண்டிக்கப்பட்ட கட்டார் மெதுமெதுவான பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கத் துவங்கியுள்ளது.

மத்திய கிழக்கிலுள்ள அறபு நாடுகளில் அரசியல் கொந்தளிப்போ இராணுவக் கெடுபிடிகளோ இல்லாத மிக அமைதியான நாடுகளாக இரண்டே இரண்டு நாடுகள் உள்ளன. அதில் முதலாவது குவைத். அடுத்தது ஓமான். வளைகுடா கூட்டுறவு அமைப்பு நாடுகளில் இவை இரண்டும் எப்போதும் நடுநிலை வகிக்கின்றன. மிகக் குறிப்பாக ஓமான் நீண்டகாலமாக அரசியல் ஸ்திரப்பாடும் அமைதியும் கொண்ட நாடாக விளங்கி வருகின்றது.

மத்திய கிழக்கின் இத்தனை புவியரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் பூதாரகமாகியுள்ள மற்றொரு பிரச்சினை சிரியாவின் ரக்காவிலிருந்து ஈராக்கின் மௌசூலை நோக்கி நகர்ந்த தாஇஸ் பயங்கரவாதம். இது இன்று மத்திய கிழக்கின் பெரும்பாலான அறபு நாடுகளுக்குப் பரவியுள்ளது. முழு மத்திய கிழக்கையும் வன்முறைக் களமாக மாற்றும் நோக்கில் மேலைத்தேய ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்டதே இப்பயங்கரவாத இயக்கமாகும். இதற்கு முன்னர் அங்கு தோன்றிய அல்காயிதா 9/11 தாக்குதல் நடத்தியது எனக் குற்றம் சுமத்தப்பட்டு உலகளாவிய இஸ்லாமிய பீதி (Islamophobia) உருவாக்கப்பட்டது.

300 மில்லியன் அறபுகளைக் கொண்ட மத்திய கிழக்கில் மாறிச் செல்லும் இந்த அரசியலை தெளிவாகப் புரிந்துகொள்வதுதான் இன்றுள்ள பிரச்சினையாகும். அதிலும் குறிப்பாக பலஸ்தீன விவகாரம் குறித்த அறபு நாட்டு ஆட்சியாளர்களின் நிலைப்பாடு பாரிய சந்தேகங்களை எழுப்பியுள்ளது. பலஸ்தீன் குறித்து இஸ்ரேல் மற்றும் சவூதி ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்தாகிய நூற்றாண்டின் ஒப்பந்தம், அதன் உள்ளடக்கம், அறபு நாட்டு ஆட்சியாளர்களின் -குறிப்பாக சவூதி இளவரசரின் பெரும் துரோகமாகும்.

பலஸ்தீனர்களுக்கு நாடு திரும்பும் உரிமையை இந்த ஒப்பந்தம் நிராகரிக்கின்றது. ஜெரூசலம் பலஸ்தீனர்களின் தலைநகராக இருப்பதையும் ஏற்க மறுக்கின்றது. ஜெரூசலம் இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கப்படுகின்றது.

உண்மையில் மத்திய கிழக்கு அரசியலை கலாச்சாரக் கண்ணோட்டத்திலும் வரலாற்று நோக்கிலும் புவி அரசியல் அணுகுமுறையிலும் நாம் பார்க்க வேண்டியுள்ளது. அதன் மூலமே ஒன்றுக்கொன்று சிக்கலான அரசியல் போக்குகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

யெமன், ஈராக், லெபனான், சிரியா ஆகிய நாடுகளில் மதச்சார்பற்ற சர்வதிகாரிகளே நீண்டகாலமாக அதிகாரத்தில் நீடித்தனர். அவர்களைத் தூக்கி வீசும் முனைப்பிலேயே அறபு வசந்தம் ஆரம்பித்தது. அதேவேளை, சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், ஓமான், ஐக்கிய அறபு அமீரகம், கட்டார், ஜோர்தான் ஆகிய நாடுகளில் குறிப்பிட்ட குடும்பங்களின் மன்னராட்சி நீடிக்கின்றது.

ஜனநாயகத்தை உரக்கப் பேசும் 21 ஆம் நூற்றாண்டில் தென்மேற்கு ஆசியாவில் மாத்திரம் அமெரிக்காவும் ஐரோப்பாவும் மன்னராட்சியை ஏன் காப்பாற்றி வருகின்றது என்பது ஒரு முக்கிய கேள்வியாகும். பெற்றோலிய வளம் நிறைந்த எண்ணெய் வயல்களுக்கிடையில் ஏகாதிபத்திய பிரிட்டன் யூதர்களை சட்டவிரோதமாகக் குடியேற்றி உருவாக்கிய இஸ்ரேல் மத்திய கிழக்கின் புவி அரசியல் பிரச்சினையின் மையமாக இருக்கின்றது.

மத்திய கிழக்கின் எண்ணெய் வளம் பிரச்சினையின் முக்கிய பரிமாணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே வேளை, மன்னராட்சியின் நீடிப்பும் அதற்கு மேலை நாடுகள் வழங்கும் உத்தரவாதமும் நெருக்கடிகளை மென்மேலும் கூர்மைப்படுத்துகின்றது. மேலைநாடுகளின் அரசியல் தேவைக்காக மத்திய கிழக்கு நாடுகளால் கொள்வனவு செய்யப்படும் வகைதொகையற்ற ஆயுதம் நெருக்கடிகளை மேலும் கூர்மைப்படுத்துகின்றது.







செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள ஷீஆ-சுன்னி அரசியல் மோதல் மேலை நாடுகளுக்குச் சாதகமாக உள்ளது. அறபு நாடுகளில் இராணுவத் தளங்களைப் பராமரிப்பதற்கும் ஆட்சியாளர்களை உஷார் நிலையில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கும் பகரமாக பெற்றோலியத்தைக் கொள்ளையடிப்பதற்கும் தாஇஸ் போன்ற பயங்கரவாத இயக்கங்கள் மேற்கு நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன.

ஜனநாயகத்திற்கு விரோதமாக ஆட்சியில் நீடிப்பதற்கு முயலும் மன்னர்கள் தமது எஜமானர்களுக்கு செஞ்சோற்றுக் கடன் கழிக்க வேண்டியுள்ளது. இத்தகைய எதிரும் புதிருமான அரசியல் சூழமைவுகளின் தொகுப்பே இன்றைய மத்திய கிழக்கு அரசியலாகும். அறபு நாடுகள் மன்னராட்சிக்கான உத்தரவாதமாக மேலை நாடுகளுக்கு அடிபணிவதைக் கடமையாகக் கருதுகின்றன. இதனால் மத்திய கிழக்கு அறபு நாடுகளுக்குள்ளேயே எதிரிகளால் உருவாக்கப்படும் மோதலுக்கு களமமைக்கின்றனர்.

யெமனில் இலட்சக்கான மக்கள் பட்டினியால் இறக்கும் நிலை தோன்றியுள்ள போதும், கையிருப்பிலுள்ள ஆயுதங்கள் முடியும்வரை சவூதி தனது தாக்குதலை நிறுத்தப் போவதில்லை. ஒரு பக்கம் சுன்னி முஸ்லிம்களுக்கு தலைமை வழங்குவதான விம்பத்தை சவூதி கட்டமைத்துள்ளது. அதேபோன்று ஷீஆக்கள் அடக்கி ஒடுக்கப்படுவதான விம்பத்தை ஈரான் கட்டமைத்துள்ளது. அதன் பின்னணியில் சில அறபு நாடுகளை ஆடுகளமாக்கி பனிப் போரில் ஈடுபட்டு வருகின்றன.

துருக்கியில் அர்தூகானின் வெற்றியின் பின்னர் மத்திய கிழக்கு அறபு நாடுகளின் பதகளிப்பு சற்று உயர்ந்துள்ளது. அரசியல் ஸ்திரப்பாட்டுடன் பொருளாதார ரீதியில் வளர்ந்து வரும் துருக்கி, மத்திய கிழக்கில் பாரிய செல்வாக்கைப் பெற்று வருகின்றது. துருக்கியின் இந்த வளர்ச்சி உஸ்மானியப் பேரரசின் மீள் வருகைக்கான தொடக்கமாக இருக்கலாம் என அறபுகளும் பாரசீகர்களும் குறிப்பாக அரசாங்கங்கள் அஞ்சுகின்றன. இந்தப் பின்னணிலேயே அறபு நாட்டு ஊடகங்களும் ஆட்சியாளர்களும் துருக்கியை மிகக் கேவலமாகக் கண்டனம் செய்கின்றன.


தென்மேற்கு ஆசியாவின் பிரச்சினை வெறுமனே அரசியல் பிரச்சினை மாத்திரமன்று. அதற்குள்ளே ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார நலன்கள், எதிரிகளின் வியூகங்கள், ஷீஆ-சுன்னி மோதல்களின் ஆணிவேர், பெற்றோலிய வயல்கள் என பல்வேறு விடயங்கள் அடக்கியிருக்கின்றன. அவை குறித்த முழுமையான பார்வையினூடாகவே மத்திய கிழக்கு அரசியலை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுஸ்ரான் பின்னூரி வைத்தியம்:

# விமர்சனங்கள் பற்றிய பார்வை



நுஸ்ரான் பின்னூரி வைத்தியம் தொடர்பில் அண்மைக் காலமாக சமூக வலைதளங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த விமர்சனங்கள் குறித்து நேரடியாகவே நுஸ்ரான் மௌலவியை சந்தித்து அவருடைய வைத்திய முறைகள் மற்றும் விமர்சனங்கள் தொடர்பான கருத்துக்களை அறிந்துகொண்டோம். அத்துடன், இவரது வைத்தியம் தொடர்பில் சமூகத்தின் ஒரு சில மருத்துவர்களிடமும் கருத்துக்களை பெற்றோம். அவற்றை நாம் இங்கு பிரசுரம் செய்கின்றோம்.

இவை மீள்பார்வையின் சொந்தக் கருத்துக்கள் இல்லை என்பதை தெளிவாக குறிப்பிட விரும்புகின்றோம்.

நான் மருத்துவத்துறை சார்ந்த ஒருவனல்ல. பாகிஸ்தான் பின்னூரியாவில் ஓதும் காலத்தில் கூட மருத்துவம் தொடர்பில் நான் எதனையும் அறிந்திருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்தியாவின் கேரளாவில் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெறச் சென்ற போது மலையாளி வயோதிபர் ஒருவரிடமும் பாஸ்கரின் ஆசான்களான கோஸ்மிரா, உமர் பாறூக் ஆகியோரிடமும் நிறைய விடயங்களை கற்றேன். நான் 2012 - 2015 வரை அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமாவின் மத்திய குழு உறுப்பினராகவும், கம்பஹா மாவட்ட செயலாளராகவும் இருந்தேன். 2015 டிசம்பர் 5ஆம் திகதி இந்தப் பதவிகளிலிருந்து விலகிக்கொண்டேன்.

### பதிவு

ஆரம்பத்தில் வத்தளை, மாபோலையில் அமைந்துள்ள நூர் காஸிம் முஹம்மத் என்பவரின் வைத்தியசாலையில் மருத்துவச் செயற்பாடுகளை செய்தோம். கடந்த நோன்பு மாதத்தில் நாம் அவ்விடத்திலிருந்து ஒதுங்கிக்கொண்டோம். அதன் பின் 2 மாதங்கள் கழித்து கிராண்பாஸில் தற்போதைய இடத்தை வாங்கினோம். அன்று முதல் பதிவிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். கம்பனி பதிவினை நாம் செய்துள்ளோம். Raha Natural Herb PVT limited எனும் பெயரில் இந்நிறுவனம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் சட்டபூர்வமான முறையில் குப்த மருத்துவம் (ஓதிப்பார்த்தல்) செய்து வருகின்றேன்.

இந்தப் பதிவு மேற்கொள்ளப்பட்டு 9 மாதங்கள் ஆகின்றன. தலிபானிசத்தை வலுவூட்டுவதாக MOH இற்கு வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டினை அடுத்து எமது வியாபார அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையினால் ஆயுர்வேத நிறுவனத்தின் அனுமதியும் தாமதாகிக்கொண்டுள்ளது.

### நோய்கள் தொடர்பான கருத்துக்கள்

- **சிறுநீரக நோய்**

ஆங்கில மருத்துவம் செய்து சிறுநீரக வியாதியில் கரைசேர்ந்த ஒருவரும் இலங்கையில் இல்லை. சிறுநீரகங்களை மாற்றுவதே அவர்களது இறுதிச் செயற்பாடு. நான் அறிந்த சட்டத்தரணி ஒருவர் 5 சிறுநீரகங்களை மாற்றியபடி வாழ்கின்றார். இப்படி வாழ்வதில் ஒரு சுகம் இருக்காது. மாற்றப்படுகின்ற சிறுநீரகங்களுக்கு 5 வருடங்களேனும் உத்தரவாதம் கொடுக்க மாட்டார்கள். சிறுநீரகங்களை மாற்றும் போது 40 வீதமே சாத்தியமாகும் எனக் கூறுவார்கள். இது சாத்தியமானாலும் அதற்கு கூட 5 வருடங்கள் உத்தரவாதமில்லை. சிறுநீரக செயலிழப்பு என்பது ஒரு தொற்று நோய். இரசாயன உணவுகளை உட்கொள்வதே அதற்கான காரணம். இதற்கான சிகிச்சைகள் என்ன என்பதை பார்ப்பதே இதன் அடிப்படை.

- **நீரிழிவு நோய்**

நீரிழிவு ஒரு நோயல்ல. அது உடம்பிலுள்ள ஒரு பலவீனம். கணையத்தின் (Pancreas) இயக்கம் குறைவதே இதற்கு காரணம். நீரிழிவுக்கு மருந்துக் குளிகைகளை கொடுக்கும் போது உடம்பின் மற்ற உறுப்புக்களும் பலவீனமடையும்.

- **கொலஸ்ட்ரோல்**

கொலஸ்ட்ரோல் நோயாளிகளை எம்மிடம் அனுப்புங்கள். ஆகக்குறைந்தது 10 நாளில் சிகிச்சை வழங்குவோம். ஆனால் 10 வருடங்கள் மருந்து குடிக்கும் கொலஸ்ட் ரோல் நோயாளிகள் உள்ளனர்.

- **Pressure**

சந்தர்ப்பத்திற்கேற்ப உடம்பு வேகமான இயக்கத்தை தேவை காணும் நேரத்தில் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். இரத்த அழுத்தம் குறைவது ஒரு நோய். high pressure என்பது ஒரு நோயல்ல. இரத்த ஓட்டம் அதிகமாவது என்பது அறிவு ரீதியாக பார்த்தால் கூட கூடாத செயலல்ல.

- **தடுப்பூசி (Vaccination)**

தடுப்பூசி தொடர்பில் Vaccinologyst களே பேச வேண்டும். தடுப்பூசித் துறையில் கலாநிதிப் பட்டம் முடித்த ஒருவரும் இலங்கையில் இல்லை. ஏறாவூரைச் சேர்ந்த சர்ஜூன் ஹாபிஸ் மாத்திரமே தடுப்பூசி தொடர்பில் கனடாவில் கலாநிதிக் கற்கையை தொடர்ந்துகொண்டுள்ளார். உலகில் தடுப்பூசித் துறையில் கலாநிதிப்பட்டம் முடித்தவர்களுள் ஒரு சாரார் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் என்றும் இன்னுமொரு சாரார் தடுப்பூசி கூடாதென்றும் கூறி வருகின்றனர். தடுப்பூசி கூடாதென்பதற்கு 150 மருத்துவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் என்னிடம் உள்ளன. இவர்கள் மேற்குலக வைத்தியர்கள். குழந்தை சுகதேகியாக பிறக்கும் போது ஏன் தடுப்பூசி ஏற்ற வேண்டும்?

இன்று தடுப்பூசி ஏற்றப்படுகின்ற பெரும்பாலான குழந்தைகள் அடிக்கடி மருத்துவமனைகளையே நாடுகின்றனர். கொழும்பு லேடி ரிஜ்வே மருத்துவமனையில் ஒரு மாதத்திற்கு 28,000 - 36,000 இடைப்பட்ட பிள்ளைகள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர். இதுவல்லாத பல ஆயிரக்கணக்கான பிள்ளைகள் வெளி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகின்றனர். 3 மாத குழந்தைகளை தூக்கிக்கொண்டு வைத்தியர்களை நாடாத பெற்றோர்களே இல்லை. ஒரு குழந்தைக்கு 3ஆவது மாத தடுப்பூசி ஏற்றப்பட்டால் அதன்பின் அது நோயாளிதான். எம்மை நாடி வந்த நூற்றுக்கணக்கான பிள்ளைகள் உள்ளார்கள் அவர்கள் ஒருவருக்கும் தடுப்பூசி ஏற்றப்படவில்லை. அல்லாஹ்வின் நாட்டத்தால் சுகதேகியாக உள்ளார்கள்.

தடுப்பூசியினால் நோய் ஏற்படும் என்பதாக உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது. உலக சுகதார தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் ஒவ்வொரு தடுப்பூசிக்குமான பக்கவிளைவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. BCG தடுப்பூசிக்கு மாத்திரம் 14 பக்கவிளைவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தடுப்பூசி மருந்தில் எத்தகைய உள்ளீடுகள் இடப்படுகின்றன என்பதை ஒருவரும் குறிப்பிடுவதில்லை.

### பாதிக்கப்பட்டிருப்பதாக கூறும் முறைப்பாடுகள்

எம்மிடம் சிகிச்சை பெற்று பாதிக்கப்பட்டவர்கள் இருப்பின் அவர்களை எம்மிடம் அழைத்துவாருங்கள். நோயொன்றுக்கு சிகிச்சை செய்து அது 100% குணமாக வேண்டும் என்பது பிழையானது. ஒரு நோயாளியை நாம் எம்மிடம் ஒரு வருடம் வரச்சொல்வதில்லை. கூடினால் எமது சிகிச்சைகள் 48 நாட்களே தொடரும். பரிசோதிக்கப்பட்டு சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுள்ள நபர்களை நாம் பொறுப்பேற்பதில்லை. ஆனால் பலாத்காரமாக வருகிறார்கள். ரக்வானையை சேர்ந்த 19வயது இளைஞன் ஒருவன் அப்படி எம்மிடம் அழைத்து வரப்பட்டான். அவனது சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருந்தது. கடந்த நோன்பு மாதம் முழுவதும் நோன்பு நோற்றார். தற்போது அவர் சுகமான நிலையில் உள்ளார். எமது சிகிச்சைகளால் குணமடைந்த 200இற்கும் மேற்பட்டவர்களின் விபரங்களை எமக்கு தர முடியும். நீரிழிவு முழுமையாக குணமடைந்த 20 நோயாளர்களின் விபரங்களை தர முடியும்.

### மருந்துகளை தயாரிக்கும் முறை

ஆயுர்வேத மருத்துவ சபையில் பணியாற்றும் டொக்டர் ஷான் அஜ்மிரின் கல்கிஸையில் அமைந்துள்ள மருந்து உற்பத்தி தொழிற்சாலையில் எமது மருந்துகளை உற்பத்திசெய்கின்றோம். ஆயுர்வேத அனுமதி பெற்றுள்ள அவ்விடத்தில் இயற்கையான மூலப்பொருட்களை கொண்டு மருந்துகளை தயாரிக்கின்றோம்.

- **6 நாள் மருத்துவப் பாடநெறி**

வீடுகளில் சாதாரணமாக மருத்துவம் செய்துகொள்ளும் இஸ்லாமிய வழிகாட்டல்களை கொடுத்து வருகின்றேன். வீட்டுக்கொரு மருத்துவர் என்ற செயற்திட்டத்தின் கீழ் இஸ்லாமிய மருத்துவம் ஓர் அறிமுகம் எனும் தலைப்பில் இதனை செய்கின்றேன். வீட்டில் மருத்துவம் செய்துகொள்பவருக்கு மருத்துவர் என்று சொல்லலாம். நாம் யாருக்கும் சிகிச்சை நிலையமொன்றை ஆரம்பித்து நோய்களுக்கு சிகிச்சையளிக்குமாறு கோறவில்லை. என்னிடம் பயிற்சிகளை பெற்றுக்கொண்ட சிஷ்யர்கள் கிராமங்களில் சிகிச்சையளித்து வருவதாக குறிப்பிடுகிறார்கள். அப்படிக் கூறுபவர்கள் இருந்தால் என்னிடம் வந்து உரையாடுங்கள்.

- **பிரசவம் பார்ப்பது தொடர்பில்**

பிரசவம் வீட்டில் பார்க்க வேண்டும் என்று பேசியுள்ளோம். அரசாங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இதற்கான புரட்சி நாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டும். உலக மனிதர்களின் வரலாறு 8000 வருடங்கள் எனில் ஆங்கில மருத்துவத்தின் வரலாறு 200 வருடங்களும் இல்லை. அப்படியென்றால் 6000 வருடங்களாக மக்கள் வாழவில்லையா? வீட்டில் பிரசவம் பார்த்ததில் பாதிப்புக்கள் ஏற்பட்ட 11 சம்பவங்கள் உள்ளன. இச்சம்பவங்களை எம்மீது சுமத்துகிறார்கள். இச்சம்பவங்கள் குறித்து நாம் ஆராய்ந்தோம். அதில் ஒன்று ஏத்தாளையில் நடந்த சம்பவம். ஏத்தாளை உமர் (ரலி) குழுவிலிருந்து பிரிந்து சென்ற ஒரு குழு மருத்துவமனைக்கு செல்வதில்லை.

அக்குழுவினை சேர்ந்த ஒருவர் தனது மனைவிக்கு பிரசவம் பார்த்து குடலை கத்தியால் அறுத்துள்ளார். தாயின் வயிற்றில் கிருமி தொற்றியதால் அவள் மரணித்துள்ளாள். அச்சம்பவத்திற்கு காரணமானவர் இன்று சிறையில் உள்ளார். அம்பாறையில் ஒரு பகுதியில் சித்தீக் என்பவர் தனது மனைவிக்கு பிரசவம் பார்த்த போது அவள் இறந்துள்ளாள். வீட்டில் பிரசவம் பார்க்க வேண்டும் என்ற கருத்தை கூறியதற்கு இச்சம்பவங்களை எனக்கெதிராக சாட்டுகிறார்கள். மேற்குலக நாடுகளில் இன்று வீடுகளிலேயே பிரசவம் பார்க்கப்படுகின்றது. இலங்கையில் இன்று 53 வீதமான பிரசவங்கள் மருத்துவமனைகளில் செய்யப்படுகின்றது. இலங்கையின் சனத்தொகை கடந்த 25 வருடங்களில் 22 லட்சத்தால் குறைந்துள்ளது.

## 'மடத்தனமான பிரச்சாரங்கள்'

Dr. ரயீஸ் முஸ்தபா



தடுப்பூசி கூடாதென்றும், பிரசவம் பார்க்க மருத்து வமனைக்கு செல்லக்கூடாதென்றும் சிலர் அறிவு பூர்வமற்ற கருத்துக்களை சொல்லி வருகின்றார்கள். எமது சமூகத்தில் பெரும்பாலானவர்கள் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள். தடுப்பூசிக்கும் யூதர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. 50 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் ஒவ்வொரு வீட்டிலும் போலியோவால் பாதிக்கப்பட்ட முடமான பிள்ளைகள் காணப்பட்டார்கள். தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டமையினாலேயே போலியோ இல்லாமல் போனது.

நியுமோ கொகைல் என்றொரு தடுப்பூசி உள்ளது. இந்தத் தடுப்பூசி ஏற்றப்படுவதன் மூலம் மூளைக் காய்ச்சல் வருவது குறைவு. ஒரு முறை ஒரு பிள்ளைக்கு மூளைக் காய்ச்சல் வந்து அதனால் அப்பிள்ளையின் காது செவிடாகியது. அந்தப் பிள்ளை என்னிடம் அழைத்து வரப்பட்டது. அப்பிள்ளையை பரிசோதித்த போது நியுமோ கொகைல் பிள்ளையின் உடம்பில் சென்றிருப்பதை அறிந்து கொண்டேன். நீங்கள் இந்தப் பிள்ளைக்கு தடுப்பூசி ஏற்றவில்லையா? தடுப்பூசி ஏற்றியிருந்தால் இப்படி வந்திருக்காதே என்று நான் பிள்ளையின் பெற்றோரிடம் கூறினேன். அப்போது அவர்கள், தடுப்பூசி போடக்கூடாதென்று ஒரு கூட்டத்தில் சொன்னார்கள் அதனால் நாம் போடவில்லை என்றார்கள்.

தற்போது இந்தப் பிள்ளைக்கு கொக்லியோ இன்பிளான்ட் (காதில் உள்ள கொக்லியரை மாற்ற வேண்டும்) செய்ய வேண்டும் என்றும், இலங்கையில் இதைச் செய்வதென்றால் 37 லட்சம் செலவாகும் என்றும் கூறினேன். 37 லட்சம் செலவு செய்து கொக்லியோ இன்பிளான்ட் செய்ய வேண்டும், அப்படிச் செய்தாலும் 10 வீதமே முன்னேற்றம் வரும் என்றேன். பள்ளி வாயல்களிலும் கூட்டங்களிலும் தடுப்பூசி கூடாதென குறிப்பிடுபவர்கள் சிகிச்சை நிலையங்களில் இவ்வாறான சம்பவத்தை காண்பதில்லை. அந்தப் பெற்றோர் என் முன்னால் அழுத அழுகை என் கண்ணுக்குள் அப்படியே பதிந்திருக்கிறது. தடுப்பூசி தேவையில்லை எனக் கூறுபவர்கள் எந்த விதமான அறிவுப் பின்னணியும் இன்றி சமூகத்திற்கு மிகப்பெரும் பாதிப்பை செய்து வருகின்றனர்.

இலங்கையில் தற்பொழுது போலியோ நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இன்னும் போலியோ நோய் காணப்படுகிறது. பாகிஸ்தானில் போலியோ மருந்து கொடுக்கச் சென்ற வைத்தியர்கள் மீது தலிபான்கள் துப்பாக்கிச் சூடு நடாதியுள்ளனர். நைஜீரியாவில் போலியோ நோய் முற்றாக இல்லாமல் இருந்தது. ஆனால் அறிவில்லாத சிலர் போலியோ ஹராம், தடுப்பூசி கூடாதென்ற கருத்துக்களை மக்களிடம் கூறியமையினால் அங்கு போலியோ தடுப்பு மருந்து நிறுத்தப்பட்டது அதனைத் தொடர்ந்து 10 வருடங்களாக போலியோ மருந்தின்றி பிள்ளைகள் முடமாகத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நைஜீரிய ஜம்இய்யத்துல் உலமா முன்வந்து இது [illegible] இந்தத் தடுப்பூசியை போடுங்கள் என மிகப்பெரும் பிரசாரத்தை மேற்கொண்டார்கள். அதன் பின்னரே அங்கு சுகமான நிலை வந்துள்ளது.

அறிவற்ற சமூகமே அறிவிலிகளின் கருத்துக்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கலீபா உமர் (ரலி) அவர்கள் மிம்பர் மேடையில் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு பெண் எழுந்து நின்று கேள்வியொன்றை கேட்டுள்ளார். அந்தப் பரம்பரையில் வந்தவர்களே நாங்கள். கதைப்பவர்கள் மோட்டுத்தனமான முறையில் கதைப்பார்கள். ஆனால் நாம் அவற்றை வெறுமனே கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. எழுந்து நின்று கேள்வியெழுப்ப வேண்டும். அப்படியானதொரு சமூகமே உருவாக வேண்டும். தடுப்பூசி, தடுப்பு மருந்துகளில் எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை. அவற்றை கட்டாயம் போடுங்கள்.

இந்தச் சமூகத்தை மீண்டும் குட்டிச் சுவராக்கும் கூட்டமொன்று உள்ளது. அவர்களே இந்த மடத்தனமான பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றனர். ஏற்கனவே நாம் அரசியல், பொருளாதார, சுகாதார, அறிவுத் துறைகளில் பின்தங்கியவர்களாக இருக்கிறோம்.

இலங்கையில் உள்ள 10 வீத முஸ்லிம்களுள் 23 வீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 43 வீதமான முஸ்லிம்களுக்கு ஏதாவது நோயிருக்கிறது. சிங்களவர்களுள் 22 வீதமானவர்களுக்கே நோயுள்ளது. தமிழர்களில் 20 வீதமானவர்களுக்கே நோயுள்ளது. ஆனால் முஸ்லிம்களில் 43 வீதமானவர்களுக்கு நோயுள்ளது. எனவே இப்படிப் பின்தங்கிய நிலையில் அடிமட்டத்தில் உள்ள சமூகத்தை இன்னும் பூமியில் புதைக்கும் நடவடிக்கைகளையே இவர்கள் மேற்கொள்கிறார்கள். இதற்கு நீங்கள் இடமளிக்க வேண்டாம்.

## 'பிற்போக்குத்தனமான சிந்தனைகள்'

Dr. மிப்ராஸ் ஷஹீத்
- மாவட்ட பொதுவைத்தியசாலை, பொலன்னறுவ.



சத்திரசிகிச்சை கூடாதென கூறுகிறார்கள். ஆனால் The Father of Surgery என்பதாக அஸ்ஸஹ்லாவி என்ற வைத்தியரை மேற்குலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையில் நாம் சிறுபான்மைச் சமூகமாக வாழ்கின்றோம். மாற்றுமதத்தவர்களுக்கு முன்மாதிரி மிக்கவர்களாக வாழ வேண்டும். ஆனால், காலத்திற்கு ஒவ்வாத சிந்தனைகளை கொண்டவர்களாக எங்களை நாம் அடையாளப்படுத்துவது எமது சமூகத்தின் வளர்ச்சியையே தூரப்படுத்தும்.

மார்க்கத்தை முற்படுத்திய இவ்வாறான பிற் போக்குத்தனமான சிந்தனைகள் சமூகத்தில் பரவிக் கொண்டிருப்பது ஆரோக்கியமான விடயமல்ல. முன்னைய காலங்களில் வீட்டுப் பிரசவங்கள் அதிகம் நடைபெற்றது. முன்பு சனத்தொகை குறைவாக காணப்பட்டது. முன்னர் பிரசவத்தின் போதான தாய்மார்களின் இறப்பு வீதம் அதிகமாக காணப்பட்டது. தற்பொழுது சனத்தொகை அதிகம் என்பதால் தாய்மார்களின் இறப்பு வீதம் குறைவாக காணப்படுகிறது. அதாவது இலங்கையில் 1 லட்சம் குழந்தைகள் பிறந்தால் 33 தாய்மார்களே இறக்கிறார்கள்.

இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட அபிவிருத்தி யடைந்த நாடுகளுக்கு சமமாகவும், அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளை விட மிக குறைவாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் சுகாதாரத் துறை வளர்ச்சியே இதற்கு காரணம். பிரசவத்தின் போது ஒரு தாய் மரணித்தால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசாரணைகளுக்கு எமக்கு முகம் கொடுக்க நேரிடும். எனவே இலங்கையின் சுகாதாரத் துறை வீழ்ச்சியடைவதற்கு இப்படியான பிற்போக்குத் தனமான கருத்துக்கள் அடிப்படையாக அமையும்.

முன்னைய காலங்களில் எத்தனை பிள்ளைகள் பிறந்தார்கள் என்ற செய்தியை கூறும் நாம் அதற்கு பின்னால் எத்தனை தாய்மார்கள் இறந்திருக்கிறார்கள் என்கின்ற செய்தியைப் பார்ப்பதில்லை. இரத்தப் போக்கு, தொற்று நோய் காரணமாக எத்தனையோ தாய்மார்கள் இறந்திருக்கிறார்கள் தெரியுமா?

இப்படியான சமூக விரோதக் கருத்துக்கள் சமூகத்திலிருந்து களையப்பட வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

(பக்.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# 2018 ஆம் ஆண்டுக்கான சமூக சேவை தேசகீர்த்தி நாமம்



பாத்திமா ஸிமாரா



அக்குரணையைச் சேர்ந்தஅப்துல் காதர் அப்துல் ரஸ்ஸாக் - செய்யத் ஹபீம் மௌலானா தூஃபது மஹ்கூமா தம்பதிகளின் புதல்வியான பாத்திமா ஸிமாரா அண்மையில் ''தேச கீர்த்தி அரச தேசிய விருது - 2018'' பெற்று கௌரவிக்கப்பட்டார். இவரது உயர்ந்த சமூக சேவைப் பணிகளை கௌரவித்தே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் வாழ்ந்து வரும் இவ்விருது பெற்றுள்ள ஒரே முஸ்லிம் பெண் என்ற பெருமை இதனால் இவருக்குக் கிடைத்துள்ளது.

'ஊதாப் பூ' என்ற புனைப்பெயரில் இலக்கிய உலகில் பிரகாசித்து வரும் ஸிமாரா அலி 1984.03.21 ஆம் திகதி பிறந்தார். கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் 8 வரை பயின்ற இவர், பின்னர் மடவளை மதீனா மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் கணணி மென்பொருளாளராக பட்டப்படிப்பை முடித்ததுடன், AMI பாட நெறியையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்தார்.

மாபோல அல்-அஷ்ரபியா பாலர் பாடசாலை ஆசிரியையாக இவர் 2001 - 2002 காலப்பகுதியில் பணி புரிந்துள்ளார். பின்னர் B.M.M.S ஏற்றுமதி இறக்குமதி சேவை நிறுவனத்தில் உதவி முகாமையாளர் பதவி வகித்ததுடன், பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் தகவல் திணைக்களத்தில் பணியாற்றியும் உள்ளார். தற்போது சமூக சேவை மற்றும் மனித உரிமை பெண்களுக்கான கல்வி உதவி முகாமையாளராக செயற்படுகின்றார்.

வித்துவ தீபம் அப்துல் காதர் புலவரின் பேத்தி என்று தன்னை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியுறும் ஸிமாரா, 2003 ஆகஸ்ட் 7ஆம் திகதி மன பந்தத்தில் தன்னுடன் இணைந்த அலி உல் அக்பருடன் அன்பின் 5 பிள்ளைகள் சகிதம் கொழும்பில் வாழ்ந்து வருகின்றார்.

குறுந்திரைப்படம் மற்றும் இறுவட்டுகளுக்கு பாடல் எழுதுவதில் சிறந்த திறன்களை வெளிப்படுத்தும் இவர் தென்னிந்தியா விலும் தனது கைவண்ணத்தைக் காட்டி வருகின்றார்.

பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளுக்கு கவிதை, கட்டுரை, விமர்சனங்கள், குறிப்புக்கள் எழுதுவதுடன், வானொலி மற்றும் தொலைக் காட்சி ஒலி / ஒளிபரப்புக்களில் அறிவிப்பு, கதை மற்றும் கவிதை நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்துடன் பங்களிக்கின்றார்.

இருபது வருடங்களுக்கு மேலாக தவமாய் தவமிருந்து எழுதிய 'கரையைத் தழுவும் அலைகள்' எனும் தனது முதல் கவிதை நூலை கடந்த ஆண்டு (2017) நவம்பரில் கொழும்பு அல் ஹிதாயா பாடசாலை மண்டபத்தில் வெளியீடு செய்தார் இந்த ஊதாப் பூ. கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீன் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் ரிஷாட் பதியுதீன், நூலை வெளியிட்டு வைத்தார். மேல் மாகாண சபை உறுப்பினர் பைறூஸ் ஹாஜி, பிரபல ஒலிபரப்பாளரும் கலைஞருமான பி.எச். அப்துல் ஹமீட் உள்ளிட் டோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். நூலின் முதல் பிரதியை பிரபல தொழிலதிபர் பௌசுல் ஹமீத் பெற்றுக் கொண்டார்.

பதிமூன்று வயது முதல் பாடசாலை கவிதை பேச்சு போட்டி களில் பங்கு பற்றியமையைத் தொடர்ந்து வானொலி கவிதை நிகழ்ச்சிகளில் சிறந்த வாய்ப்பை ஸிமாராவின் கவிதைகள் பெற்றன. இதுவரை இவர் 'ஈழக் குயில் விருது', 'சந்தக்கவி விருது' மற்றும் 'கவித் தென்றல் விருது' ஆகியவற்றை இலக்கியத் துறை பங்களிப்பிற்காக வென்றுள்ளார். உண்மையில் தனது தாயையும், கணவரையும் பெறுமதியான நன்றிக்குரியவர்களாக இங்கு குறிப்பிடுகின்றார்.

கல்வியை பாதியில் இழந்த மாணவர்களுக்கான தேவைகளைக் கண்டறிந்து அதற்கான செயற்பாடுகளில் அடுத்து களமிறங்க எண்ணியுள்ள ஸிமாரா, இலக்கியத் துறையிலும் தொடர்ந்து தனது மேலான பங்களிப்புகளை வழங்க உத்தேசித்துள்ளார்.

2002 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் பேராளராக பங்கு பற்றி விருதும் பெற்ற ஸிமாரா, சிறு வயதுமுதலே ஆசை வைத்த வழக் கறிஞர் தொழிலுக்கு தன்னால் செல்ல முடியாமல் போனமையை இன்றும் கவலையுடன் நினைவுகூர்கின்றார். எதிர்பார்ப்புக்களில் தொலைத்த பலத்தை எதிர்காலம் அவருக்கு வழங்க வாழ்த்துக்கள்!

• இப்னு மரைக்கார்

# உழ்ஹிய்யாவில் பின்பற்றப்பட வேண்டிய சில நடைமுறைகள்





முஸ்லிம்கள் வருடா வருடம் துல் ஹிஜ்ஜா மாதத்தின் பத்தாம் நாளில் ஹஜ் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். அந்த வகையில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி ஹஜ் பெருநாள் என ஆங்கில நாட்காட்டி தெரிவிக்கின்றது.

இஸ்லாம் இறை விசுவாசிகளுக்காக இரண்டு பெருநாட்களை அளித்துள்ளது. அவற்றில் ஒன்று தான் ஹஜ் பெருநாள் ஆகும்.

இஸ்லாத்தின் பிரதான கடமையாக விளங்கும் ஹஜ் நிறைவேற்றப்படுவதோடு உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் இப்பெருநாளைக் கொண்டாடுகின்றனர். இது இப்றாஹீம் (அலை) அவர்களதும் அவர்களது குடும்பத்தினரதும் தியாகம், அர்ப்பணிப்பு, சகிப்புத் தன்மையை நினைவுபடுத்துவதோடு சம்பந்தப்பட்ட ஒரு பெருநாளாக விளங்குகின்றது.

அந்த வகையில் இப்பெருநாளின் நிமித்தம் முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை உள்ளது. அது தான் உழ்ஹிய்யாவாகும். அதாவது ஹஜ் பெருநாள் தொழுகையை நிறைவேற்றியது முதல் மூன்று நாட்களுக்குள் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும். இது ஒட்டகம், ஆடு, மாடு ஆகிய கால்நடைகளைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு ஸுன்னாவாகும். இந்த ஸுன்னாவை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும். அதற்கான ஒழுங்குகள் யாவை என்பன தொடர்பில் இஸ்லாம் மிகவும் தெளிவாக விபரித்து வைத்திருக்கின்றது.

அந்த அடிப்படையில் இந்நாட்டிலுள்ள பள்ளிவாசல் பலவற்றில் இவ்வருட ஜூலை மாதம் முதல் வாரம் தொடக்கம் இக்கடமையை நிறைவேற்ற வேண்டிய ஒழுங்கு, அதற்கான அவசியம் என்பன தொடர்பில் ஜும்ஆ பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட ஆரம்பமாகியுள்ளன. இது தொடர்பில் சில பள்ளிவாசல்கள் உழ்ஹிய்யாவை கூட்டாக நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதோடு அதற்கான குழுக்களையும் கூட அமைத்துள்ளன. இது வரவேற்கத்தக்க நடவடிக்கையேயாகும். இதனூடாக செயலிழந்துள்ள ஒரு நபிவழி உயிர்ப்பிக்கப்படுகின்றது.

இது ஒட்டகம், ஆடு, மாடு ஆகிய கால்நடைகளைக் கொண்டு நிறைவேற்றப்படும் கடமை. ஆனால் இந்த இலங்கை நாட்டில் ஒட்டகம் கிடையாது. ஆடுகளும் போதியளவில் கிடைக்கப் பெறுவதில்லை. அதனால் மாடுகளைக் கொண்டு தான் இக்கடமையை நிறைவேற்ற முடியும். அதற்கேற்பவே முஸ்லிம்கள் இக்கடமையை நீண்ட காலமாக நிறைவேற்றி வருகின்றனர்.

ஆனால் இந்நாடு பல்லின மக்கள் வாழும் ஒரு தேசமாகும். அவர்களில் முஸ்லிம்கள் இரண்டாவது சிறுபான்மையினராகக் காணப்படுகின்றனர். அதாவது இரண்டு கோடி மக்களைக் கொண்ட இந்நாட்டில் இருபது இலட்சம் பேர் முஸ்லிம்களாவர். இவர்களில் ஒரு வீதத்திற்கும் குறைவானோர் தான் உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றும் தகுதியைக் கொண்டிருக்க முடியும்.

ஆனால் இந்நாட்டு முஸலிம்கள் தம் உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றிடவும் அதன் இறைச்சியைப் புசிக்கவும் பயன்படுத்தும் கால்நடையான மாட்டை இந்நாட்டிலுள்ள இரண்டு சமூகங்கள் அதாவது இந்துக்களும், பௌத்தர்களும் வழிபடும் ஒரு உயர்வான ஒன்றாகக் கருதுகின்றனர். அதாவது பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் ஒரு சமூகம் தம் சமூக கடமையை நிறைவேற்றப் பாவிக்கக் கூடிய கால்நடையை ஏனைய இரு சமூகங்கள் வணங்கி வழிபடக் கூடிய ஒன்றாகக் கருதும் நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படும் தம் உழ்ஹிய்யா கடமையை முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் அடிப்படையில் நிறைவேற்ற இந்நாட்டு முஸ்லிம்கள் தவறக் கூடாது. இவ்வாறு தான் இந்நாட்டு முஸ்லிம்கள் இக்கடமையை நீண்ட காலமாக நிறைவேற்றி வந்துள்ளனர்.

ஆனால் 1990 களின் பின்னர் மத்திய கிழக்கு நாடுகளது தொண்டர் அமைப்புகளின் உழ்ஹிய்யா உதவி இந்நாட்டிற்கும் வரத்தொடங்கியது. இது சொற்ப காலத்தில் ஹஜ் கால பெஷனாக மாறியது. அது எந்தளவுக்கு என்றால் ஹஜ் காலத்தில் விரும்பிய இடத்தில் மாட்டை அறுத்து உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை உருவானது. இங்கு உழ்ஹிய்யாவை மேற்கொள்ளும் போது மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கோ, பக்குவமோ பேணப்படாத நிலைமை தோற்றம் பெற்றது.

அதாவது ஜீவகாருண்யம் கருத்தில் பேணப்படாமை, இரண்டு மாடுகளை எடுத்துச் செல்லக்கூடிய லொறியில் இருபது மாடுகளை எடுத்து செல்லல், ஒரு இடத்தில் வைத்து பல மாடுகளை அறுத்தல், மாடுகள் பார்த்திருக்கும் நிலையில் கத்திகளை தீட்டுதல், மற்றொரு மாடு அறுக்கப்பட்ட பின்னர் வெளியாகும் இரத்தம், அவற்றின் உயிர் பிரியும் விதம் என்பவற்றை அறுக்கப்பட இருக்கும் மாடுகள் பார்த்திருத்தல், மாடுகள் திறந்த வெளிகளில் வைத்து அறுக்கப்படல், உழ்ஹிய்யா வழங்கப்படும் மாட்டின் கழிவுகளான சாணம், எழும்பு, தோல், இரத்தம் உள்ளிட்ட கழிவுகள் எவ்வித பக்குவமுமின்றி பிரதேசத்தில் கைவிடப்படல், அவை காகம் உள்ளிட்ட பறவைகளாலும் நாய்களாலும் பிரதேசமெங்கும் கொண்டு செல்லப்படல், இவ்வாறு கைவிடப்படும் கழிவுகளால் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுதல் என்றபடி பல்வேறு விதமான பிரச்சினைகள் தோற்றம் பெற்றன.

அதேநேரம் உழ்ஹிய்யாவுக்காக திறந்த வெளியில் வைத்து மாடுகள் அறுக்கப்படுவதையும், அவற்றின் இறைச்சி பகிரப்படுவதையும், அதனை வணங்கப்படக்கூடியதாக கருதும் சமூகத்தினர் பார்ப்பதையும் பொருட்படுத்தாத நிலைமையும் தோற்றம் பெற்றது. அதாவது உழ்ஹிய்யாவுக்கான கால்நடை பலியிடும் போது பேணப்பட வேண்டிய இஸ்லாமிய ஒழுங்கு முற்றிலும் மீறப்படும் நிலைமை உருவானது. அதாவது மாட்டை வணங்கி வழிபடக் கூடியதாகக் கருதப்படும் சமூகத்தினரின் உணர்வை பொருட்படுத்தாத நிலைமை ஏற்பட்டது.

இதன் விளைவாக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் மாடறுப்புக்கு எதிரான குரல்கள் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் வெளிப்படத் தொடங்கின. இதற்கு பௌத்த தேரர்கள் தலைமை தாங்கும் நிலைமை உருவானது. இது 2014 ஆம் ஆண்டாகும் போது மாடறுப்பைத் தடை செய்யக் கோரி கதிர்காமம் முதல் கொழும்பு வரையும் ஊர்வலம் நடாத்தப்படும் அளவுக்கு முன்னேற்றம் கண்டது. அத்தோடு 2016 ஆகும் போது களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி மாடறுப்பு தடை செய்யப்படும் என்று அறிவிக்கப்படும் அளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றது.

இவ்வாறான நிலையில் இப்போது எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மாடறுப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் மாட்டிறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில பிரதேசங்களில் பிரதேச சபைகளால் நடாத்தப்படுகின்ற மாட்டிறைச்சிக் கடைகளை சிலர் திட்டமிட்ட அடிப்படையில் பொறுப்பேற்று மூடிவைத்துள்ளனர். இன்னும் சில பிரதேசங்களில் இறைச்சிக் கடைக்கான டென்டர்களை அளவுக்கு அதிகமாக விலையை கூட்டி மாட்டிறைச்சி விற்பனையை மேற்கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மாடறுப்பு மற்றும் மாட்டிறைச்சி விற்பனைக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலைமை தோற்றம் பெற்றதற்கான முழுப் பொறுப்பையும் இந்நாட்டு முஸ்லிம்கள்தான் ஏற்றாக வேண்டும். அன்று உழ்ஹிய்யாவை பெஷனாக மாற்றியதன் விளைவாகவே இந்த நிலைமை தோற்றம் பெற்றிருக்கின்றது. இதில் இரண்டு கருத்துக்கு இடமிருக்கின்றது.

ஆகவே இக்கடமையை நிறைவேற்றும் போது பல்லின மக்கள் வாழும் நாட்டில் இருந்து இக்கடமையை நிறைவேற்றுகின்றோம் என்ற எண்ணம் மற்றும் உணர்வோடு இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படையில் நிறைவேற்றுவதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்போது தற்போது காணப்படுகின்ற மாடறுப்பு தொடர்பான எதிர்ப்புக்களை தணிக்கக் கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சாட்சியம் : ஷரீஆவின் பார்வையில் ஒரு பகுப்பாய்வு



• முஹம்மத் பகீஹுத்தீன்

இஸ்லாமிய சட்டக்கலையில் பெண்களின் சாட்சியம் சர்ச்சைக்குரிய விடயமாகவே தொடர்வதை அவதானிக்க முடிகிறது.

உண்மையில் சாட்சியம் குறித்த சட்ட வசனங்களில் எத்தகைய சிக்கலும் கிடையாது. குறித்த சட்ட வசனங்களை விளங்குவதிலும் அதனை அணுகும் மனப்பாங்கிலும் தான் பிரச்சினை காணப்படுகிறது.

இஸ்லாமிய சட்டப் பரப்பில் பெண்கள் சாட்சியம் தொடர்பாக வந்துள்ள சட்ட வசனங்களையும் மத்ஹபுகளின் வித்தியாசமான சிந்தனைகளையும் அறிஞர்களின் கருத்து வேறுபாடுகளையும் மொத்தமாக திரட்டி நோக்கும் போது அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வியாபாராம், கடன் கொடுக்கல் வாங்கள் போன்ற நிதி தொடர்பான கொடுக்கல் வாங்களின் போது ஒரு ஆணுடன் இரண்டு பெண்கள் சாட்சியாக இருப்பதை அறிஞர்கள் ஏக மனதாக அங்கீகரித்துள்ளனர் (குவைத் பிக்ஹ் கலைக்களஞ்சியம் 17/136- )
2. பெண்கள் மாத்திரம் ஆஜராகக் கூடிய, ஆண்கள் சாட்சியாக இருப்பதற்கு வாய்ப்பில்லாத, பெண்கள் விவகார வழக்குகளின் போது பெண்களின் சாட்சியம் ஏகமனதான ஏற்றுக் கொள்ளப்படும். உதாரணமாக பிறப்பு குறித்த மருத்துவச்சியின் சாட்சியம், பால்குடி உறவு குறித்த பெண்ணின் சாட்சியம், பெண்களின் அந்தரங்க குறைபாடுகள் குறித்த பெண்ணின் சாட்சியங்கள், இத்தா காலத்தின் ஆரம்பம் முடிவு பற்றிய சாட்சியங்களைக் குறிப்பிடலாம்.

பெண்களுடன் சம்பந்தப்பட்ட இத்தகைய பிரத்தியேகமான வழக்குகளில் பெண்கள் மாத்திரம் சாட்சியம் வழங்குதல் அல்லது தனியாக ஒருத்தி மாத்திரம் சாட்சியம் சொன்னாலும் அச்சாட்சியத்தை கருத்திற் கொண்டு தீர்ப்புக்கள் வழங்க ஷரீஆ சட்டப்பரப்பில் அங்கீகாரம் உள்ளது. இது பெரும்பான்மை அறிஞர்களின் உடன்பாடான கருத்தாக காணப்படுகிறது.

இது தவிர்ந்த ஏனைய விடயங்களில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அறிஞர்களின் வித்தியாசமான சிந்தனைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நிதி விவகாரம் தவிர்ந்த ஏனைய விடயங்களில் பெண்கள் சாட்சி ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என சில அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்தை நிறுவுவதற்குத் தெளிவான ஸஹீஹான சட்ட வசனங்கள் ஏதும் கிடையாது. அதனைக் கூறிய அறிஞர்களும் அதற்கான சரியான ஆதரங்களை முன்வைக்கவில்லை.

ஆனால் இது சட்டத்துறை அறிஞர்களின் சிந்தனைகளாகவே பதியப்பட்டுள்ளன. அந்த வகையில் இக்கருத்தை அலி இப்னு அபீதாலிப் (ரழி), கதாதா (ரழி), இமாம் ஸுஹ்ரி (ரஹ்), ஹஸன் அல்பஸரி (ரஹ்), இமாம் மக்ஹூல் (ரஹ்), இமாம் மாலிக் (ரஹ்), இமாம் ஷாபி (ரஹ்), இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

2. பெண்களின் சாட்சியம் என்பது வழக்குகளின் போது கோட்டுக்கு தேவையான ஒரு ஆதாரம் என்ற அடிப்படையில் அனைத்து விவகாரங்களிலும் பெண்ணின் சாட்சியம் ஏற்கப்படும். அதன் பொருள் விபச்சாரக் குற்றத்திற்கும் மூன்று ஆண்களுடன் இரண்டு பெண்கள் சாட்சி சொல்ல முன்வரலாம். காரணம் அவளை தடுப்பதற்கு நியாயமான எந்த சட்ட வசனமும் நேரடியாக தெளிவாக இல்லை என்பதே.

இந்த சிந்தனை முகாமில் உள்ள இமாம் அதா இப்னு அபீ ரபாஹ் (ரஹ்) இமாம் இப்து ஹஸ்ம், காழி ஷுரைஹ் (ரஹ்), இமாம் ஷாபி (ரஹ்) காழி இயாழ் இப்னு முஆவியா (ரஹ்) போன்றோர் இக்கருத்தைக் கூறியுள்ளனர். (முஹல்லா 8/476)

இதே சிந்தனையை நவீன கால அறிஞர்களில் இமாம் மஹ்மூத் ஷல்தூத், முஹம்மத் அப்துஹு, முஹம்மத் கஸ்ஸாலி, அப்துல் கரீம் ஸைதான் போன்ற பல அறிஞர்கள் கூறியுள்ளதோடு ஆணுக்கு நிகராக பெண்ணின் சாட்சியம் மதிக்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

3. விபச்சார குற்றத்தை தவிர ஏனைய அனைத்து விவகாரங்களிலும் பெண்களின் சாட்சியம் ஏற்புடையதே என சில அறிஞர்கள் கூறுவர். இக்கருத்தை இமாம் இப்னு தாவூஸ் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸன்னப் அப்துல் ரஸ்ஸாக் - 7/332)
4. இறைவனால் தண்டனை நிர்ணயிக்கப்பட்ட குற்றவியல் வழக்குகள் மற்றும் தலாக் விவகாரம் தவிர்ந்த ஏனைய பிரச்சினைகளின் போது பெண்கள் சாட்சியம் ஏற்கப்படும் என்ற இக்கருத்தை இமாம் இப்ராஹீம் நகஈ அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸுனன் குப்ரா- பைஹகீ 10/250)
5. இறைவன் தண்டனையை தெளிவாக விதியாக்கியுள்ள குற்றவியல் வழக்குகள் பழிவாங்கல் குற்றங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்திலும் பெண்கள் சாட்சியம் ஏற்கப்படும். இக்கருத்தை உமர் (ரழி), இமாம் ஷாஃபி (ரஹ்), இமாம் ஷுரைஹ் (ரஹ்), இமாம் அபூ ஹனீபா ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். (முஸன்னப் இப்னு அபீ ஷைபா 4/515-516, முஸன்னப் அப்துல் ரஸ்ஸாக் 7/332, அஹ்காமுல் குர்ஆன் - அல்ஜஸ்ஸாஸ் - 2/231)

பெண்கள் சாட்சியம் சம்பந்தமாக இஸ்லாமிய சட்டப்பரப்பில் காணப்படும் கருத்து முரண்பாடுகளையும் அந்த சிந்தனை முகாம் சார்ந்த அறிஞர்களையும் இதுவரை அவதானித்தோம்.

மத்ஹப் என்ற வரையரையில் நிற்கும் போது ஏற்படும் அசௌகரியங்களை இல்லாமல் செய்வதற்கு இந்த வாசிப்பு மிகவும் உதவியாக இருக்கும் என்றே இத்துறையில் உள்ள கருத்து வேறுபாடுகளைப் பதிவுசெய்துள்ளோம்.

அறிஞர்களிடையே கடுமையான கருத்து வேறுபாட்டுக்கு காரணமாக இருப்பது சூரா பகராவின்: ''கடன் கொடுக்கல் - வாங்களின் போது உங்களில் இரு ஆண்களை சாட்சிகளாக வைத்துக் கொள்ளுங்கள். இரு ஆண்கள் இல்லை யென்றால் ஓர் ஆணையும் இரு பெண்களையும் சாட்சிகளாக்கிக் கொள்ளுங்கள். காரணம் ஒரு பெண் மறந்தால் மற்றொருத்தி அவளுக்கு அதை நினை ஊட்டுவாள்'' என்ற 282ம் வசனமாகும்.


இந்த வசனம் ஆண்-பெண் வேறுபாடு பற்றியோ அல்லது பெண்ணின் சாட்சி ஆணின் சாட்சிக்கு சரிபாதியாக அமைய வேண்டும் என்றோ குறிப்பிடுவதற்காக வந்ததல்ல. இது பெண்ணின் இயல்பு நிலையை உள்வாங்கி வழங்கப்பட்ட சிறந்த வழிகாட்டலாகும். இதனால் குறித்த கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுபவரின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இருவரில் ஒருவருக்கு அநீதியி ழைத்து விடக் கூடாது என்றுமே ஷரீஆ கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பிட்ட வசனம் கடன் பத்திரம் எழுதுவதையும், சாட்சியாக இருப்பதையும் சிறந்த வழிகாட்டலாகவே இயம்புகிறது. பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்து இது கடன் கொடுக்கல் வாங்கல் பதிவுகளை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழிகாட்டல் மாத்திரமே. வாஜிபான ஒரு கடமையல்ல.

இங்கு பெண்ணின் இயல்பை கருத்திற் கொண்டு அல்லாஹ் வழிகாட்டியுள்ளான். வழமையில் இல்லாத ஒன்றை மனிதன் மறப்பது இயல்பு. அது வாழ்வின் இயல்புடன் சார்ந்த ஒரு விடயம். [partly hidden by watermark; "இயல்பு. அது" inferred] அது வாழ்வின் இயல்புடன் சார்ந்த ஒரு விடயம்.

எனவே பெண்கள் சாட்சியம் சொல்வதில் எந்த தவறுமில்லை. அவர்கள் ஈடுபாடு காட்டாத விடயமொன்றில் மறதி ஏற்படும் என்ற காரணத்திற்காக இருவர் இருப்பது உகந்தது என்ற இஸ்லாம் வழிகாட்டுகிறது.

எனவே, இந்த வசனம் பெண்களின் புத்தியில் குறை காணவுமில்லை, ஆணின் சாட்சிக்கு பெண்ணின் சாட்சி பாதி என்று தீர்ப்புக் கூறவுமில்லை.



ஒரு அடியானின் உரிமையில் அநீதம் நிகழக் கூடாது என்பதில் தான் ஷரீஆ சட்டம் கடும் கவனம் செலுத்தியுள்ளது.

ஆனால் இதற்கு மாற்றமாக ஆணின் சாட்சிக்கு பெண்ணின் சாட்சி நிகராகும் என்றே அல்குர்ஆன் சூரா நூரின் எட்டாம் வசனத்தில் தெளிவாக கூறுகிறது.

ஒரு கணவன் தனது மனைவியை விபச்சாரக் குற்றம் சுமத்தினால் நான்கு சாட்சியங்கள் இல்லாத பட்சத்தில் நான்கு சத்தியங்கள் செய்யவேண்டும். ஐந்தாவது சத்தியம் தனக்கு எதிரான சாபமாக அமையும். இதே போன்று பெண்ணுக்கும் அந்த உரிமை சமனாக உண்டு. அவளும் நான்கு சத்தியம் செய்து தான் குற்றமற்றவள் என தண்டனையில் இருந்து தப்பிக்க இடமுண்டு. ஐந்தாம் சத்தியம் தனக்கு அல்லாஹ்வின் கோபம் உண்டாகட்டும் என்று கூறுவாள்.

பெண், ஆணின் சாட்சியத்தின் பாதி என்பது விதியாக இருந்தால் இங்கு பெண் எட்டு சத்தியங்கள் கூறியிருக்க வேண்டும். இஸ்லாம் அப்படி வழிகாட்டவில்லை. ஆணுக்கு நிகராகவே பெண்ணின் சாட்சியம் அமையும் என வழி காட்டியுள்ளது.

இதுவரை நாம் பார்த்த விடயங்களில் இருந்து பெண்கள் சாட்சியம் சகல விடயங்களிலும் ஏற்க முடியும் என்பதே சிறந்த கருத்து என்ற தெரிவுக்கு வர முடியும். காரணம் பெண்களை சாட்சியங்கள் கூறாமல் தூரமாக்குவதற்கு நேரடியான ஸஹீஹான தெளிவான எந்த சட்ட வசனமும் கிடையாது. இறைவன் தண்டனை நிர்ணயித்த குற்றங்கள் மற்றும் பழிவாங்கல் குற்றம் பற்றிய விடயத்தில் பெண்கள் சாட்சியத்தை மறுக்கும் ஹதீஸ் பலவீனமாதாகும். (இர்வாஉல் அலீல் 8/295)

வீட்டில் களவு நடைபெறுகிறது. பெண்கள் பார்க்கின்றார்கள். திருடன் கூண்டில் நிற்கின்றான். இந்நிலையில் கோட்டில் பெண்கள் சாட்சிக்கு வரக் கூடாது என ஷரீஆ சொல்லுகிறது என்று கூறுவது எவ்வளவு அபத்தமானது. எத்தகைய திட்டவட்டமான சட்ட வசனங்களும் இல்லாத நிலையில் பெண்களின் சாட்சிகளை மறுப்பது சர்வதேச மனித சட்டங்களுக்கு முன்னால் இஸ்லாமிய சட்டத்தை அடிபணிய வைப்பதாகும். அது நீதிமிக்க இஸ்லாமிய சட்டவியலுக்கு அபகீர்த்தியாகும். இமாம் இப்னு ஹஸ்ம் அவர்கள் தனது முஹல்லாவில் சாட்சியம் என்ற அத்தியாயத்தில் ''விவாக விடுதலைக்கு இயாழ் பின் முஆவியா இரண்டு பெண்களின் சாட்சியை ஏற்றுள்ளார் என்றும் உமர் (ரழி) அவர்கள் நான்கு பெண்களின் சாட்சியத்தை ஏற்று விவாக விடுதலை வழக்கில் கணவன் மனைவியை பிரித்து வைத்தார்கள்'' என்ற சம்பவத்தையும் இன்னும் பல பெண் சாட்சியங்களின் அடிப்படையில் நிகழ்ந்த தீர்ப்புக்களையும் பதிவுசெய்துள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டின் ஷவ்வால் பிறையைத் தீர்மானிப்பதில் எழுந்த முக்கியமான சர்ச்சைகளில் ஒன்று பெண்ணின் சாட்சியமாகும்.

எனவே அது பற்றிய சுருக்கமான ஒரு தெளிவை இங்கு பதிவு செய்கிறோம். ரமழான் பிறையை உறுதிப்படுத்துவதற்கு பெண்களின் சாட்சியத்தை ஏற்க முடியும் என்பது ஹனபி, ஹன்பலி, மத்ஹப்களினது சிந்தனையாகும். அவ்வாறே ஷாபி மத்ஹபின் ஒரு கருத்தும் பெண்ணின் சாட்சியம் ரமழான் பிறையை உறுதிப்படுத்த ஏற்றுக் கொள்ளப்படும் என்பதே.

ஷாபி மத்ஹபின் பிரபல்யமான கருத்தும் மாலிக் மத்ஹபின் சிந்தனையும் ரமழான் மாத பிறையை உறுதிப்படுத்த பெண்களின் சாட்சியத்தை ஏற்க முடியாது என்பதாகும்.

பெருநாள் தினத்தை நிச்சயிக்கும் வகையில் ஷவ்வால் மாத பிறையை உறுதிப்படுத்துவதற்கு ஆண்கள் சாட்சி மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும் என்பது ஷாபி மற்றும் மாலிக் மத்ஹப்களின் உறுதியான கருத்தாகும்.

இமாம் இப்னு ஹஸ்மின் சிந்தனை முகாமைச் சார்ந்தோர் ரமழான் மற்றும் ஷவ்வால் பிறையை உறுதிப்படுத்துவதற்கு ஆண் பெண் வேறுபாடுகள் எதுவுமின்ற சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற கருத்தை கொண்டுள்ளனர். அதுவும் ஒருவரின் சாட்சியமே அதற்கு போதுமானது என அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிறை பார்த்தல் தொடர்பான இமாம்களின் இந்நிலைப்பாடுகளில் பெண்ணின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்வதே மிகச் சரியான கருத்தாகும் என அப்துல் கரீம் ஸைதானி அவர்கள் தனது தெரிவாக கூறுவார்.

இந்த கருத்து முரண்பாடு ஏன் தோன்றியது அதற்கான அடிப்படை யாது என்று தேடும் போது நியாயமான பதில்கள் அதற்கு கிடைப்பதில்லை. பிறை பார்ப்பதில் பெண்ணின் சாட்சியத்தை மறுப்பதற்கான எந்த சட்ட வசனங்களையும் காண முடியாது. எனவே ஷரீஆவின் நிலைக்களனில் பிறை பார்ப்பதில் பெண்களின் சாட்சியை ஏற்றுக் கொள்வதே ஏற்புடைய கருத்தாகும்.

இங்கு சராசரி மனிதனொருவனின் உள்ளத்தில் தோன்றும் கேள்வி என்னவென்றால்,ஆயிரக்கணக்கான பெண்களுக்கு மத்தியில் நடைபெறும் பிரச்சினைகளில் அவர்களின் சாட்சியம் மறுக்கப்படுவதால் என்ன நலன் கிடைக்கப் போகிறது? அடிப்படையில்லாமல் மறுக்கும் இந்த சிந்தனை பொதுப் பாதுகாப்புக்கு பங்கமில்லையா? இஸ்லாத்திற்கு நற்பெயரை வாங்கித்தரும் சிந்தனைகளை புறந்தள்ளி விட்டு அதற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் சிந்தனைகளை தீர்ப்பாக முன்வைக்க முனைவது ஷரீஆ சட்டத்தற்கு நலன் பயக்குமா? சிந்தனை ஒரு அருள். அதனை பயன்படுத்தாமல் ஒரு எல்லைக்குள் தான் வாழ்வோம் என பிடிவாதம் பிடிப்பது குற்றமில்லையா?

எனவே பெண்களின் சாட்சியத்தை ஆண்களின் சாட்சிக்கு நிகராக ஏற்க முடியும் என்பதை இஸ்லாமிய ஷரீஆ சட்டம் மறுக்கவில்லை. அவ்வாறே ஆணின் சாட்சியத்தில் பாதிக்கு சமனாக பெண்ணின் சாட்சியம் அனைத்து விவகாரங்களிலும் செல்லுபடியாகும் என்ற கருத்தும் மிகவும் ஏற்புடையதாகும். இங்கு பெண்கள் சாட்சியம் பற்றிய சிந்தனைகள் தெளிவானது. எதனை தெரிவு செய்வது என்பதே எமது பணியாகும்.

---

## நுஸ்ரான்... (10 ஆம் பக்கத் தொடர்)

(10 ஆம் பக்கத் தொடர்)

## 'ஜம்மிய்யதுல் உலமா பதில் சொல்ல வேண்டும்'

ராபி ஷரீப்தீன்

### பின்னூரி வீட்டுக்கொரு வைத்தியர் திட்டம்

இந்தியாவை வந்தடைந்த இந்த போலி மருத்துவ முறை பின்னூரி பட்டத்தைப் பயன்படுத்தும் ஒரு மார்க்க அறிஞரால் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்த வைத்திய முறைகளை இலங்கையில் அறிமுகம் செய்வதற்காக இவர் பயன்படுத்திய ஊடகம் மிம்பர் மேடைகளே. ஊர் ஊராக சென்ற இவர் நிகாப் வாஜிப், ஆங்கில வைத்திய முறைகள் ஹராம், பாடசாலைக் கல்வி கூட ஹராம், சத்திர சிகிச்சை ஹராம் என்பது போன்று தனது இஷ்டத்துக்கு ஏற்ப பத்வாக்களை அள்ளி வீசினார். அத்துடன் இவற்றுக்கு மாற்றீடாக இஸ்லாமிய வைத்திய முறை உள்ளதாகக் கூறி அக்குபன்சர் வைத்தியத்தை அறிமுகப்படுத்த அடித்தளம் அமைத்துக் கொண்டார். இவரது பேச்சு பாமர மக்களை கவரத் துவங்கியது.

இந்த அடிப்படையில் மார்க்கத்தை விற்றுப் பிழைப்பு நடாத்தி இந்த ஆலிம் தனது சீடர்களின் மனைவியருக்கு வீடுகளிலேயே பிரசவம் பார்க்க வேண்டும் என்பதாகவும் வற்புறுத்தலானார். இந்த விசமத்தனமான பிரச்சாரம் மூலம் பிரவசத்தின் [illegible] (Maternal and Infant Mortality Rate) முஸ்லிம்கள் மத்தியில் எதிர்காலத்தில் அதிகரிக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே முஸ்லிம்களுக்கு எதிரான சக்திகளின் இலக்குகளில் ஒன்றாக இருக்கும் முஸ்லிம் சனத்தொகை அதிகரிப்பை எவ்வழியிலேனும் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்ற ஒரு வழியில் நுஸ்ரான் பின்நூரி துணைபோகிறார்.


பல சவால்களை எதிர்கொண்டு தமது பாரம்பரிய துறையில் கற்றுத் தேர்ந்து, இக்கலைகளை அடுத்த சந்ததிக்கும் கடத்தும் நோக்கில் வாழ்பவர்களைக் கொச்சைப்படுத்தி, அவர்கள் கற்ற கலையை குழிதோன்றிப் புதைக்கும் ஒரு செயலாகவே இந்த ஆறு நாள் பாடநெறியை நான் நோக்குகின்றேன்.

பின்னூரி கூட்டணி இஸ்லாமிய பாரம்பரிய மருத்துவம் என்ற பெயரில் கருஞ்சீரகத்தை பன்னீர் விட்டு அறைத்து வெஸ்லின் ஒரு பங்கும் மென்தோல் சிறிதும் சேர்த்து இது தான் ராஹா பாம் என்கின்றனர். அதே கருஞ்சீரகத்தை பன்னீர் விட்டு அறைத்து ராஹா கருச்சீரக கிரீம் என்கின்றனர். இதனுடன் நின்றுவிடாமல் 4 லீட்டர் கருஞ்சீரக எண்ணெய் கேன்களை வாங்கி ராஹா லேபல் ஒட்டிய குப்பிகளில் அடைத்து சுத்தமானது சுகாதாரமானது என்கின்றனர்.

அத்துடன் இந்த ஆறு நாள் மருத்துவர் பித்தலாட்டக் குழுவில் தற்போதைய ஜம்மியதுல் உலமா அங்கத்தவர்கள் பலரும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். முஸ்லிம் சமூகத்திற்கு நாமே தலைமைத்துவத்தை வழங்குகின்றோம் என கூறிக் கொள்பவர்கள் என்ற அடிப்படையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இந்த பாடநெறி குறித்து தமது நிலைப்பாட்டை மக்களுக்கு வழங்கியே ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அடைவு மட்டமும் பெற்றோரும்



பிள்ளைகள் மீதான பெற்றோரின் அர்ப்பணம் மூத்த பிள்ளைகளிலிருந்து இளைய பிள்ளைகளை நோக்கிக் குறைந்து செல்வதை ஒரு சில ஆய்வுகள் நிறுவியுள்ளன. இன்னொரு புறம் இளைய பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் மூத்த பிள்ளைகள் பயன்படுத்தப்படுவதனால் இப்பிள்ளைகளின் கல்வி ஈடுபாடு குறைந்து காலப்போக்கில் பாடசாலைகளை விட்டு இடைவிலகும் நிலை உருவாகின்றது. எனவே, குடும்பத்தின் அளவும் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றது. கீழ் வர்க்கக் குடும்பங்களின் அளவு பிள்ளைகளின் கற்றலில் செறிந்த செல்வாக்கைச் செலுத்துகின்றது.

வறுமைப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் தமது கல்விக்குத் தேவையான மேலதிக வசதிகளைப் பெறுவதற்குரிய வாய்ப்பை இழைக்கின்றனர். இன்னொரு புறம் வறுமைப்பட்ட பெற்றோர் பல்வேறு வகையான கீழுழைப்புக்களில் ஈடுபடுவதனால் பிள்ளைகளின் மீதான அவர்களது கவனம் குறைகின்றது. பெற்றோர்களின் வறுமைச் சுமையை தாமும் முன்வந்து ஏற்க வேண்டுமென்ற மனப்பாங்கில் இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து இடைவிலக நேரிடுகின்றது. தொழிலுக்காகப் பெற்றோர் வெளியே செல்வதனால் வீட்டிலுள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்கு மூத்த பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுமாறு வற்புறுத்தப்படுகின்றனர் என்பதை முன்னரும் ஆய்வாளர் சுட்டிக் காட்டினார்.

ஒரு மாணவனின் இளைய சகோதர சகோதரிகள் அவனது பாடசாலை இடைவிலகலில் செல்வாக்குள்ள காரணியாக இருப்பதை Hale என்பவர் மேற்கொண்ட ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளார். இடைவிலகிச் செல்லும் மாணவர்களின் தீர்மானங்களில் பெற்றோரைப் போன்று இளைய சகோதர சகோதரிகளினதும் செல்வாக்கு உள்ளது என்று Hale கூறுகின்றார். ஏனெனில் அதிகம் இளம் சகோதர சகோதரிகளைக் (Sibilings) கொண்டுள்ள மாணவர்கள் இடைவிலகிச் செல்லும் ஆபத்து (Highrisk) அதிகமுள்ளது. இவ்வாறான மாணவர்களுக்கு பாடசாலையுடனான ஈடுபாடு மிகக் குறைவாகும். பாடசாலை வரவும் மிகக் குறைவாகும். அடைவு மட்டத்தில் தாழ்ந்த நிலையிலேயே இத்தகைய மாணவர்கள் உள்ளனர். (Horn 1992)

பெற்றோரின் கல்வி மட்டமும் தொழில் தகைமையும் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் அடுத்த காரணியாகும். குடும்பப் பின்னணிக்கும் மாணவர் கல்வி அடைவுக்குமிடையில் மிக நெருக்கமான தொடர்புகள் உள்ளன. (ரணசிங்க & Hartog 2001) ஆகியோர் சுட்டிக் காட்டுவதுபோல் பெற்றோர் உயர் வருமானம், உயர்ந்த பதவிகள், உயர்கல்வி பெற்றிருப்பார்களாயின் அவர்களது பிள்ளையின் கல்வியில் அவை நேர்ப்படியான தாக்கத்தைச் செலுத்துகின்றன. அதிலும் குறிப்பாக தாய்மார்களின் கல்விமட்டம் உயர்வாக இருப்பின் பிள்ளைகளின் கல்வி அடைவு அதிகரிக்கின்றது. எனவே பெற்றோரில் தாயின் கல்வித் தரம் முக்கியமானது. தாய்மார்களின் உயர் கல்வித் தகைமை பிள்ளைகள் பாடசாலை நடவடிக்கைகளில் கூடியளவு பங்கேற்பதற்கு உதவுகின்றது. அத்தோடு ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் பிள்ளைகள் வீட்டில் அதிகம் வாசிப்பதற்கும் உதவுகின்றது. (பெலன்டின்னே எச். 1986)

இதற்குப் புறம்பாக வறுமைப்பட்ட, குறைந்த கல்வியறிவு கொண்ட பெற்றோர் மிகக் குறைந்த ஆற்றலுள்ள பிள்ளைகளையே உருவாக்குகின்றனர். பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் முன்னேற்றகரமான பெற்றோரின் பிள்ளைகள் ஒப்பீட்டு ரீதியில் இடைவிலகுவது மிக அரிதாகும். (ரணசிங்க 2001). கல்வியில் வாய்ப்பும் இயலுமைகளும் முக்கியமானவை. அவற்றைத் தீர்மானிக்கின்றவர்களாக இருப்பவர்கள் பெற்றோர்களே. பொருத்தமான கல்விச் சூழலையும் போதிய ஊக்கங்களையும் இத்தகைய பெற்றோரே வழங்குகின்றனர்.

தர்மபால தர்மவர்தன என்பவர் 1998 இல் மேற்கொண்ட ஓர் ஆய்வில் இடைவிலகிய மாணவர்களின் பெரும்பாலானோரின் பெற்றோர் பாடசாலையில் குறிப்பிட்ட மட்டத்திற்கு கற்றவர்களல்ல என்பதைக் கண்டடைந்தனர். அவரது தரவுப் பகுப்பாய்வில் விலகிச் சென்ற மாணவர்களின் 62 சதவீதமான தந்தைமார்களும் 58 சதவீதமான தாய்மார்களும் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யவில்லை. பெரும்பான்மையானவர்கள் ஆரம்ப நிலைக் கல்வியுடன் இடைவிலகியுள்ளனர். 16 வீதமானோர் பாடசாலைப் பக்கமே சென்றதில்லை. அவர்களில் 58 வீதமானோர் மட்டுமே ஒன்றில் எழுத அல்லது வாசிக்கத் தெரிந்தவர்கள்.


இலங்கையில் 78 வீதமான மாணவர்கள் இடைவிலகலுக்கு பெற்றோரின் வறுமையே காரணம் என கூறப்படுகின்றது. அவர்களில் 26 வீதமான தந்தைமார்கள் விவசாயிகள். 31 வீதமானவர்கள் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள். 29 வீதமான தந்தைமார் எந்தத் தொழிலுமற்றவர்கள். 15 வீதமான பெற்றோர் மாத்திரமே நிரந்தரத் தொழிலுள்ளவர்கள். ஆக அனேகர் தற்காலிக, நிச்சயமற்ற தொழில்களில் தங்கியிருப்பவர்கள். (தர்மவர்த்தன 1998)

சமூக வர்க்கம் (Social Classes) என்பதற்கும் பாடசாலை இடைவிலகலுக்குமிடையில் நெருங்கிய தொடர்புள்ளதையும் சில ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. எடுத்துக்காட்டாக, 60 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டின் படி தலாவீத வருமானம் குறைவாக உள்ளபோது இடைவிலகல் விகிதம் (Ratio) அதிகமாக உள்ளது. (தர்மவர்த்தன 1998)

கொரியாவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கருத்து முன்வைக்கப்படுகின்றது. உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர் தலா வீத வருமானம் ஆரம்பக் கல்வியை 80 வீதமான பிள்ளைகள் பூர்த்தி செய்வதற்குக் காரணமாகின்றது. அதேவேளை சமூக, பொருளாதார நிலைமைகளில் கீழ் வர்க்கக் குடும்பங்கள் ஒப்பீட்டு ரீதியில் தமது பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்க வேண்டுமென்ற பெற்றோரின் அபிலாஷைகள் குறைவாக உள்ளன. (தர்மவர்த்தன 1998)

பெற்றோர் குறிப்பாகத் தாய் பணிப்பெண்ணாக வெளிநாடு செல்வது பிள்ளைகளின் கல்வியில் தாக்கம் செலுத்துகின்றது என்பதையும் ஆய்வுகள் நிறுவியுள்ளன. குணதிலக என்பவர் மேற்கொண்ட ஓர் ஆய்வில் கல்விக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பைப் பற்றிக் குறிப்பிடும்போது "வறுமை காரணமாக சில பெற்றோர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்களது பிள்ளைகளோ குடும்ப ஆதரவின்றி அநாதரவாகக் கைவிடப்படுகின்றனர். இது பிள்ளைகளின் இடைவிலகலுக்கு இட்டுச் செல்கின்றது. அல்லது பாடசாலைகளில் பிள்ளைகள் அனுமதி பெறாமலேயே இருந்து விடுவதற்குக் காரணமாகின்றது." (குணதிலக 1984)

# உளநெருக்கீடு




முன்னைய அத்தியாயங்களில் உளநலம், அதன் வெளிப்பாடுகள், மனமகிழ்ச்சியின் அடையாளங்கள், உளக்கோளாறுகளை வகைப்படுத்தல் குறித்து விபரிக்கப்பட்டது. இப்பத்தியில் உள மாறாட்டங்கள்; அதன் எளிய வடிவங்களிலிருந்து தீவிர அல்லது சிக்கலான வடிவங்கள் வரை விளக்கப்படுகின்றது.

மனோநிலை மாறாட்டங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் Stress இங்கு விரிவாக ஆராயப்படுகிறது. Stress என்ற சொல்லை மொழி அடிப்படையில் அழுத்திக் கூறல், வலியுறுத்தல் என பெயர்க்கலாம். உளவியல் அடிப்படையில் தமிழ்ச் சூழலில் இச்சொல் மனஅழுத்தம், தகைப்பு, உளநெருக்கீடு போன்ற பதங்களால் குறிக்கப்படுகின்றது.

ஒருவர் மீது ஏற்படுத்தப்படும் அழுத்தத்தின் விளைவாக உடலில் ஏற்படும் எதிர்வினையே பொதுவாக நெருக்கீடு எனப்படுகின்றது. இங்கு அழுத்தம் உள்ளகக் காரணிகளாலோ வெளியகக் காரணிகளாலோ ஏற்படலாம். அடிப்படையில் Stress என்பது சிறிது தேவையானதுதான். ஏனெனில், நாம் ஒரு செயலை முனைப்புடன் மேற்கொள்வதற்கும் ஒரு இலக்கை விரைந்து அடைவதற்கும் அழுத்தம் நமக்குப் பயன்படுகின்றது. ஆனால், எப்போதும் எம்மீது அழுத்தங்கள் பதியும்போது உடல் அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் நெருக்கீடுகளை சந்திக்கின்றது. நாம் செய்ய வேண்டியதற்கும் செய்ய முடியுமானதற்கும் இடையில் உள்ள இடைவெளியே நெருக்கீடாக மாறுகின்றது.

நிதி நெருக்கடிகள், குடும்பம், தொழில் செய்யும் இடம், நண்பர்கள், பாடசாலை போன்ற பல்வேறு சூழ்நிலைகளில் மனிதன் இந்த உளநெருக்கீட்டுக்கு ஆளாகின்றான். யார் தோற்கடிக்கப்படுகின்றேன் அல்லது இயலாதவனாகின்றேன் என உணர்கின்றாரோ அவரை மனஅழுத்தம் தொற்றிக் கொள்கின்றது. நீடித்த அழுத்தம் அடிக்கடி ஏற்படும் அழுத்தமுமே உளநெருக்கீட்டுப் பிரச்சினையாக மாற்றமடைகின்றது.

சாதாரணமாக முன்பள்ளியில் படிக்கும் குழந்தைகள் முதல் வயோதிபம் அடைந்தவர்கள் வரை உளநெருக்கீடு யாரையும் விட்டு வைப்பதில்லை. அதன் விளைவுகளாக சிலபோது பயமும் பதகளிப்பும் பதட்டமும் உருவாகின்றன. நமக்கு தீங்கு பயக்கும் ஒரு சூழ்நிலைக்கு உடல் வழங்கும் உடனடி எதிர்வினையே நெருக்கீடு எனலாம்.

நாம் அஞ்சும் குறிப்பிட்ட சூழ்நிலையின் கேடு உண்மையானதாக இருக்கலாம் அல்லது நாம் ஊகிப்பதாகக் கூட இருக்கலாம். அச்சுறுத்தலை உணரும்போது காயப்படுதல் அல்லது தாக்குதலைத் தடுக்கும் வழியாக உடலில் சில இரசாயனங்கள் சுரக்கின்றன. இந்த எதிர்வினை மோதலுக்கான மோதல் (Fight to Fight) அல்லது நெருக்கீட்டு எதிர்வினை (Stress response) எனப்படுகின்றது.

உளநெருக்கீட்டின்போது இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது. அதிக மூச்சு வாங்குகின்றது. தசை இறுக்கமடைந்து இரத்த அழுத்தம் கூடுகின்றது. ஆக, உளநெருக்கீட்டுக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் இடையில் கண்டிப்பான தொடர்புகள் உள்ளன. நெருக்கீட்டின் தாக்கமும் அளவும் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றது. உளநெருக்கீட்டைச் சிலர் வெற்றிகரமாகக் கையாள்கின்றனர். இதனால் நெருக்கீடு அவர்களுக்குப் பிரச்சினைக்குரியதல்ல. அதன் தாக்கமும் குறிப்பிடத்தக்கதல்ல. வேறு சிலரோ நெருக்கீட்டின் பாதிப்பை அதிகம் அனுபவிக்கின்றனர். அதனைக் கையாள்வதில் உள்ள இடர்பாடே இதற்குக் காரணம்.

சாதாரணமாக குழந்தை வளர்ப்பின்போது பள்ளிக்குச் செல்லும் மாணவப் பருவத்தில் உள்ளவர்களுக்கு அடிக்கடி ஒழுங்குக் கட்டுப்பாடுகளை வலியுறுத்தும் பெற்றோர் நெருக்கீட்டுக்கு ஆளாகின்றனர். வேலைப் பழு அதிகரிக்கும்போது அல்லது சோலிகளில் அமிழ்கின்றபோது அல்லது நிதி நெருக்கடி ஒன்றுக்கு முகம்கொடுக்கின்றபோது, சவாலான ஓர் உறவை எதிர்கொள்ளும்போது நெருக்கீடு நம்மைப் பீடிக்கின்றது. உடல் ரீதியிலும் உளரீதியிலும் நெருக்கீட்டின் அறிகுறிகளும் விளைவுகளும் உள்ளதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நெருக்கீடு நமது வாழ்வின் அத்தனை பகுதிகளையும் பாதிக்கலாம். சிந்தனை ஆற்றல், உணர்வெழுச்சிகள், உடல் ஆரோக்கியம், உடலின் நோய் எதிர்ப்பு சக்தி, என்பவற்றைப் பெரிதும் பாதிக்கின்றது. நீடித்த உளநெருக்கீட்டின் விளைவுகளும் அறிகுறிகளும் மிகவும் ஆபத்தானவை.

### உடல் சார்ந்த விளைவுகள்

அழுத்தம் அதிகரிக்கும்போது ஒருவரது நரம்பு மண்டலமும் கானில் சுரப்பிகளும் (neun Endocrine System) தூண்டப்படுகின்றன. இதனால் GAS (General Adeptation Syndrom) உருவாகின்றது. விளைவாக, உடலின் தசைநார்கள் இறுக்கமடைகின்றன. ஹோமோன்கள் அளவுக்கு அதிகமாகச் சுரக்கின்றன. இதயம் வேகமாக அடிக்கின்றது. மூச்சுறுத் திணறல், நா உலர்தல், தேகம் நடுங்குதல், வியர்த்தல் போன்றன ஏற்படுகின்றன. இதனால் உடல்சார் விளைவுகளான உயர் குருதி அழுத்தம், இதய நோய், எழுப்பு நோய், சருமம் சார்ந்த பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

## ஆளுமை அறிமுகம்



# பேராசிரியர் மாலிக் பத்ரி

சமகால இஸ்லாமிய உலகில் இஸ்லாமிய உளவியல் துறையில் மிகப் பிரபலமான ஆளுமைகளில் ஒருவரே பேராசிரியர் கலாநிதி மாலிக் பத்ரி அவர்கள். இவர் 1932 இல் சூடானில் உள்ள ரூபாஆ பிரதேசத்தில் பிறந்தார். பெய்ரூத்திலுள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் 1958 இல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட அவர், 1958 இல் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். பிரிட்டனிலுள்ள லைசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தை 1961 இல் பெற்ற அவர், சிகிச்சை உளவியல் துறையில் பட்டமேற் கல்வியைப் பூர்த்தி செய்தார்.

1966 இல் லண்டன் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற இவர், 1977 இல் பிரிட்டன் உளமருத்துவக் கழகத்தின் அங்கத்துவரானார். தற்போது அவர் இக்கழகத்தில் பட்டய உளவியலாளராக (Charted Psychologist) செயற்படுகின்றார்.

பொதுவாக உளவியல் துறைக்கும் மிகக் குறிப்பாக இஸ்லாமிய உளவியலுக்கும் பேராசிரியர் மாலிக் பத்ரி அவர்கள் வழங்கியுள்ள அளப் பெரிய பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக 2003 ஆம் ஆண்டு சூடான் அரசாங்கம் கல்வித் துறைக்கான உயர் விருது வழங்கி கௌரவித்தது. பல நாடுகளின் பல்கலைக்கழகங்களில் வருகை நிலை பேராசிரியராகவும் மாலிக் பத்ரி பணியாற்றுகின்றார்.

கார்டூம் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் பீடாதிபதியாகவும் தென் சூடானின் ஜுபா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் அமெரிக்காவிலுள்ள இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் துணைப் பீடாதிபதியாகவும் மலேசிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் வருகை நிலைப் பேராசிரியராகவும் கலாநிதி மாலிக் பத்ரி இயங்குகின்றார்.

அறபு இஸ்லாமிய நாடுகளில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் கல்வி மற்றும் உளவியல் பீடங்களை நிறுவுவதில் மாலிக் பத்ரி முன்னணிப் பங்கு வகித்துள்ளார். அதேவேளை மத்திய கிழக்கின் முன்னணி வைத்தியசாலைகளில் சிகிச்சை உளவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். 1971 இல் சவூதி அறேபியாவின் ரியாத் பல்கலைக்கழகத்தில் உள மருத்துவ சிகிச்சைப் பிரிவை ஸ்தாபித்த அவர், கல்வி மற்றும் உளவியல் துறை குறித்து எழுதியுள்ள பல நூல்கள் அநேக மொழிகளுக்குப் பெயர்க்கப்பட்டுள்ளன.

உலக சுகாதார நிலையத்தினால் பாரம்பரிய மருத்துவத் துறையின் தலைவராகவும் ஆய்வாளராகவும் அவர் தெரிவுசெய்யப்பட்டார். தற்போது சூடானின் உம்முதர்மானிலுள்ள அஹ்பாத் பல்கலைக்கழகத்தில் சிகிச்சை உளவியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். அதேவேளை, மலேசியாவின் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் சமூக, விஞ்ஞான பீடங்களில் சிறப்பு பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் எழுதிய நூல்களில் தியானம் ஓர் இஸ்லாமிய நோக்கு, பண்பாடும் இஸ்லாமிய விழுமியங்களும், ஆன்மாவின் வாழ்வாதாரம் போன்றவை முக்கியமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வரும்... (01 ஆம் பக்கத் தொடர்)

கூகுள் லூனை இலங்கைக்கு மேல் வானில் மிதக்க விடுவதன் ஊடாக நாட்டில் நிறுவப்பட்டு வரும் தொலைத் தொடர்புக் கோபுரங்களைக் (Towers) குறைக்க முடியும் எனவும், முழு நாட்டுக்கும் 4G தொழில்நுட்பத்தை வழங்க முடியும் எனவும் அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ தெரிவித்தார். ஆனால் அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ள வைபை திட்டத்துக்கு இது எந்த விதத்திலும் பங்களிப்புச் செய்யப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதனை நிறுவுவதில் இலங்கைக்கு எந்தச் செலவும் ஏற்படப் போவதில்லை. தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அனுமதிப்பத்திரம் தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டதும் கூகுள் லூன் இலங்கையில் தனது சேவையை ஆரம்பிக்கும். கூகுள் லூன் இதற்கு முன்னர் இலங்கையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னர் கூகுள் X என அழைக்கப்பட்ட X இனால் வடிவமைக்கப்பட்ட இந்த ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித் திட்டம், கிராமப் புறங்களுக்கும் கஷ்டப் பிரதேசங்களுக்கும் இணையச் சேவையை வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. கூகுள் லூனின் சேவையைப் பெறுபவர்கள் தமது கட்டடத்தில் புதியதொரு அன்டெனாவை பொருத்திக் கொள்வதனூடாக இணைய சேவையைப் பெற முடியும்.

## பட்டதாரிகளுக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

தொழில் வழங்குவதற்கான உயர்ந்த வயதெல்லை 45 ஆகக் கணிக்கப்படும். நான்கு கட்டங்களில் இவர்களுக்கான வேலை வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன. முதலாம் இரண்டாம் கட்டங்கள் 2018 இலும், மூன்றாம் நான்காம் கட்டங்கள் 2019 இலும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொழிலை இலக்காகக் கொள்ளும் வகையில் கற்கை நெறிகளைத் தெரிவு செய்வதற்கும், தற்போது நடைமுறையிலுள்ள பாடநெறிகளை தொழில்வாய்ப்புக்கு ஏற்ற வகையில் வடிவமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

## இனங்களுக்கிடையிலான... (01 ஆம் பக்கத் தொடர்)

நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தற்போது இனங்களுக்கிடையிலான இணக்கப்பாடின்மை சுலபமாகப் பற்றியெரியக் கூடியதாக மாறும் நிலையிலேயே உள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுடன் நான் பேசியதில், இந்த இரண்டு பொதுவான கொள்கைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பலரும் சொன்னார்கள். உலகின் பல நாடுகளும் இந்தப் பொதுக் கொள்கையைப் பின்பற்றுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இனிவரும் தேர்தல் காலங்களில் அனைத்துக் கட்சிகளும் தமது விஞ்ஞாபனத்தில் இந்த இரண்டு விடயங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யாத கட்சிகளுக்கு வாக்களிக்காமல் புறக்கணிக்க வேண்டும். நாங்கள் இப்படிச் செய்யாவிட்டால் இன்னும் இரண்டு தசாப்தங்களில் பௌத்தம் இங்கிருந்து அழிந்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

## காணிப் ... (04 ஆம் பக்கத் தொடர்)

பொத்துவில், லகுகலை, கிரான் கோமாரி, அஷ்ரப் நகர் உள்ளிட்ட இடங்களில், முஸ்லிம்களுக்கு உரித்தான காணிகள், வேறு தரப்பால் அபகரிக்கப்பட்டுள்ளன அல்லது சொந்தம் கொண்டாடப்படுகின்ற நிலையே காணப்படு கின்றது.

இங்கு குறிப்பிடப்பட்ட காணிகள், அம்பாறை மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலக எல்லைகளுக்கு உட்பட்டவை மாத்திரமேயாகும். அதே வேளை, மேலும் ஒரு தொகுதி காணியை, வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு உரிமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிய முடிகின்றது. அத்துடன், ஹிங்குராணை சீனித் தொழிற்சாலையின் காணிகளுக்கு என்ன நடக்கும் என்பதும் நிச்சயமில்லை. இதே வேளை, திருகோணமலை மாவட்டத்தில் 42 சதவீதமாகக் காணப்படுகின்ற முஸ்லிம்களின் இனப் பரம்பலுக்கு ஏற்றாற்போல், காணிகள் இல்லை. குறைந்த நிலப்பரப்பில் அளவுக்கதிகமான முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

கிண்ணியா, பதவிசிறிபுர, குச்சவெளி, மூதூர் உள்ளிட்ட முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் காணிப்பற்றாக்குறை காணப்படுவதுடன் இம்மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு உரித்தான பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் இன்று உரிமை கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. வழக்கமான காணிப் பிரச்சினைகளை விட, அண்மைக்காலத்தில் நில ஆக்கிரமிப்புகள், பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தும் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கரிமலையூற்று பள்ளிவாசலுக்கு முழுமையாக நிலத்தை வழங்க மனமில்லாத அதிகாரத் தரப்பினர், அங்குள்ள சில விகாரைகளுக்குப் பல நூறு ஏக்கர் காணிகள் இருந்ததாக உரிமை கொண்டாடுவதாகச் சொல்லப்படுகின்றது.

சிங்கள பிரதேசங்களில் குறைந்தளவான மக்களுக்கு அதிக நிலமும், தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களில் அதிகளவான மக்களுக்கு வரையறுக்கப்பட்ட காணி உரிமையும் இருப்பதைக் காண முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் சுமார் 20 கிலோமீற்றர் நிலப் பரப்புக்குள், சனத்தொகை அடிப்படையில் சிறுபான்மையாக வாழ்கின்றனர். ஆனால், அந்த மக்களுக்குக் கூட, அவர்களது சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப, காணிகள் இல்லை. அத்துடன், வரையறுக்கப்பட்ட நிலப்பகுதிக்குள்ளேயே அவர்கள் நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசங்களில் எல்லைப் பிரச்சினைகள் உள்ளன. அது ஒருபுறமிருக்க, வாகரை, கள்ளிச்சை, புணானை மேற்கு, வாகனேரி. காரமுனை போன்ற கிராமங்களில், வாழையடி வாழையாக வாழ்ந்து வெளியேறிய முஸ்லிம்களின் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிப் பிரச்சினைகன் இன்னும் தீர்க்கப்படவில்லை.

இன விகிதாசாரத்துக்கு அமைவாகக் காணிப்பங்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சர்வதேச நியதியாகும். அதுமட்டுமன்றி, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையிலும் இவ்விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதாவது, கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களின் காணிகளுக்கு, சட்டபூர்வ உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், பயங்கரவாதத்தால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினையை விரைவாகத் தீர்க்க வேண்டும் என்றும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, பல வருடங்களுக்கு முன்னரே பரிந்துரைத்துவிட்டது. ஆனால், அரசாங்கம் இதை நடைமுறைப்படுத்தவில்லை.

புரையோடிப் போன இந்தக் காணிப் பிரச்சினைகளை, ஓர் இரவுக்குள் தீர்த்து விட முடியாது. சில பிரச்சினைகளை நிர்வாக ரீதியாகத் தீர்த்துக் கொள்ள முடியும். சில விவகாரங்களுக்கு உயர் மட்ட கலந்துரையாடல்களின் ஊடாகத் தீர்வைத் தேடலாம். வேறு சில காணிப் பிணக்குகளைத் தீர்க்க, அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

சிலவற்றுக்கு, நீண்டநாள்கள் ஜனநாயக அடிப்படையில் போராட வேண்டியிருக்கும். அவ்வாறு செய்கின்ற போது தான், கால ஓட்டத்தில் மெல்ல மெல்லக் காணிகளை மீட்டுக் கொள்ள முடியும் என்பதை, தமிழரின் காணி மீட்பு போராட்டங்களின் வெற்றிகள் நமக்கு உணர்த்துகின்றன.

முஸ்லிம் மக்களும் தங்கள் பிள்ளைகளுக்கு காணி வேண்டும்; வளவு வாங்க வேண்டும் என்று நினைக்கின்ற முஸ்லிம்கள், தமது பேரப்பிள்ளைகள் அவர்களது பிள்ளைகள் காணிக்கு எங்கு போவார்கள் என்பதைச் சிந்திப்பதில்லை.

பெரும்பான்மையாக சனத்தொகை பெருகுவதில் பெருமையில்லை; அவர்கள் வாழ்வதற்கான பெருமளவு நிலமும் இருக்க வேண்டும்.

## மனந்திறப்போம்... (06 ஆம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் வரவேண்டும் என்ற கருத்தை அமைச் சர் விஜயகலா முன்வைத்தாரே அன்றி, இதில் தமிழீழ கோரிக்கை என்ற நோக்கில் கூறவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், அமைச்சர் விஜயகலா கூறியதைக் கண்டு கூக்குரல் இடுவோர், வட பகுதியில் நடக்கும் பயங்கரங்களை, ஜனாதிபதி போதை அற்ற தேசம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளார். ஆனால், வடபகுதி எங்கும் போதைவஸ்து பாவனைகள் தலைவிரித்தாடுகிறது. மாணவர்கள் முதல் இளைஞர்கள் வரை போதை வஸ்துக்குக்கு அடிமையாகிறார்கள் இவைகளைக் கண்டித்துக் கூக்குரல் இடாதது ஏன்?

இவைகளை உரிய முறையில் கட்டுப்படுத்தி, இவ்வாறு சிறுவர்களை பாலியல் சித் திரவதைகளுக்கு உள்ளாக்கி கொலை செய் கின்றவர்களையும், போதைவஸ்து வியாபாரி களையும் வடக்கில் உள்ள பொலிஸார் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தாமல் என்ன செய்கிறார்கள் எனக் கேட்காததும் ஏன்?

அதேநேரம், நீதி, சமத்துவம், சமூக நீதி என்பன இச்சமூகங்களுக்கு மத்தியில் அழிக்கப்பட்டு கிடக்கின்றது. இவைகளை நிலைநிறுத்த அனைத்து அரசியல் பிரமுகர்களும் ஏன் குரல் கொடுக்கவில்லை?

இங்கு முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஷ்வரன் தெரிவித்ததை நோக்குகின்றபோது, அண்மையில் இந்தியாவில் பல பெண்கள் பாடசலை மாணவிகள் பாலியல் சித்திரவதைக்கு உட்படுகின்றபோது, அங்குள்ள பல அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், பெண் செயற்பாட்டாளர்கள் என பலரும் சவூதி அரேபியாவில் இருக்கின்ற சட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறினார்கள். இதன் அர்த்தம் அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பதல்ல, அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் இவ்வாறான அநியாயங்கள், அக்கிரமங்கள், அராஜகங்கள் இல்லாமலாக்கப்பட்டு நீதி, சமத்துவம், சமூக நீதி என்பன இனங்களுக்கிடையில் உயிர்வாழும் என்பதேயாகும்.

## வடக்கிலும்... (01 ஆம் பக்கத் தொடர்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதோடு, இந்தியப் பிரமதர் நரேந்திர மோடி தொலைக்காட்சி தொழில்நுட்பத்தில் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

இரண்டாம் கட்ட அம்புலன்ஸ் சேவைக்காக இந்திய அரசு 15.02 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியினூடாக 209 க்கு மேற்பட்ட அம்புலன்ஸ் வண்டிகள் சேவைக்கு விடப்படுவதோடு 1782 இலங்கையர்கள் இதற்கென விஷேட பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டு செயற்படவுள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுவசரிய அறக்கட்டளைச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. 1990 என்ற இலக்கத்தை அழைப்பதனூடாக இந்தச் சேவையைப் பெற முடியும். முதல் கட்டமாக மேற்கு, தென் மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்துக்கு இந்திய அரசு 7.55 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்ததோடு இந்த நிதியின் மூலம் 55 அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

## அயோத்தியிலிருந்து... (01 ஆம் பக்கத் தொடர்)

வருமானமீட்டுவதற்கு இந்திய அரசு தீர்மானித்திருக்கிறது. ஸ்ரீ ராமாயண எக்ஸ்ப்ரஸ் எனும் பெயரில் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ள இந்தப் புகையிரதம் 16 நாட்களில் ராமாயணத்துடன் தொடர்புடைய தலங்களைத் தரிசித்துச் செல்லும் வகையில் தனது பயணத்தை வடிவமைத்துள்ளது. 800 இருக்கைகளுடன் கூடிய முதலாவது ரயில் பயணம், பாரதப் பிரமதர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பயணத்தின் இறுதிக் கட்டத்தில் சென்னை-கொழும்பு விமான சேவையை பயணிகள் பயன்படுத்த வேண்டி நேரிடும். இந்தியாவில் இந்தச் சுற்றுலா அயோத்தியிலிருந்து இராமேஸ் வரை அமையும். புகையிரதத்தின் உணவுச் சாலைகள், தர்மசாலைகளிலான தங்குமிட வசதிகள் உட்பட்ட கட்டணமொன்றையும் இந்திய ரயில்வே கேட்டரிங் அன்ட் டுவரிஸ்ம் கோபரேஷன் அறிவித்துள்ளது. புகையிரத நிலையத்திலிருந்து தரிசிக்கச் செல்லும் இடங்களுக்கான பஸ் சேவையும் இதனுள் உள்ளடங்குகின்றது. இலங்கையில் இந்தப் பயணம் ரம்பொட, நுவரெலியா, சிலாபம் பிரதேசங்களை உள்ளடக்குகிறது.

பெருமளவு வருமானமீட்டலை எதிர்பார்த்து ஆரம்பிக்கப்படவுள்ள இந்த சுற்றுப் பயணம், பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதைப் பொறுத்து வருடத்து ஒரு தடவை அல்லது இரு தடவை என்ற தீர்மானம் எட்டப்படவிருக்கிறது.

## எந்த இராணுவ... (01 ஆம் பக்கத் தொடர்)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசின் செயற்பாடுகளுக்கு இராணுவம் பெரும் பங்களிப்புச் செய்து வருகிறது. இராணுவத்தினரின் எண்ணிக்கையை வரையறை செய்வது யுத்த காலத்தில் போலவே யுத்தம் முடிந்த பின்னும் நடக்கிறது. இதனூடாக நிர்வாக வேலைகளுக்குத் தோதானவர்கள் இராணுவச் செயற்பாடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளிலும் தமது துறைசார்ந்த அலுவல்களிலும் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்த நடவடிக்கையின் விளைவாக எந்த இராணுவ முகாமும் மூடப்படப் போவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின் வழிகாட்டலில் இந்த இராணுவத்தினர் நாட்டின் பல பிரதேசங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையில்... (01 ஆம் பக்கத் தொடர்)

காணி, போக்குவரத்து, விவசாயம், உயர் கல்வி, மின்சாரம் ஆகிய விடயங்களின் அபிவிருத்திக்கெனவே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான செயற்திட்டங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததும் அமெரிக்க ஒத்துழைப்பு செயற்றிட்ட அலுவலகத்துடன் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பான ஒப்பந்தம் இவ்வாண்டு டிசம்பரில் கைச்சாத்தாகவுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களில் அவிசாவலையிலிருந்து பெல்மதுல்ல வரையும், பெரகல முதல் வல்லவாய வரையும், நாஉல முதல் தம்புள்ள வரையும், தம்புள்ளையிலிருந்து தலகஹவெவ வரையுமான பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

## முகவர்கள்... (07 ஆம் பக்கத் தொடர்)

பார்க்கக்கூடிய சட்டங்கள் தெரிந்தவர்களும் உள்ளார்கள். அவர்களை அழைத்து பொதுவான கரலந்துரையாடலை மேற்கொண்டு உறுப்பினர்களை

தெரிவுசெய்ய நினைத்துள்ளோம். பிறை தொடர்பான இறுதி முடிவை மேல்மட்டக் குழுவே அறிவிக்கும்.

- **இஸ்லாத்திற்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்படும் போது அமைச்சு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?**

எமது மார்க்கத்தை பற்றி ஏனைய மக்களுக்கு அறிவுறுத்தும் திட்டமொன்றை கொண்டு வரவுள்ளோம். இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கங்களில் சில உலமாக்கள் வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள். எனவே அவர்களை அழைத்து சரியான முறையில் குத்பாக்களை நடத்துவதற்கான பயிற்சியொன்றை நடத்தவுள்ளோம்.

- **இலங்கையில் சில பள்ளிவாசல்களில் வக்புசொத்து மோசடி செய்யப்பட்டு வருவதாக சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் அமைச்சு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?**

கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்குச் சொந்தமாக காணப்பட்ட அனேகமான சொத்துக்களை நாம் வழக்குப் பேசி மீட்டுக்கொடுத்துள்ளோம். புத்தளம் கே.கே. எஸ் கங்காணிக்குளம் சொத்துகளை அந்தப் பள்ளிவாசலுக்கு மீட்டுக் கொடுத்தோம். கொழும்பு செத்தம் ஸ்ட்ரீட் பள்ளிவாசலுக்குரிய சொத்துக்களை வக்கு சபையினால் நடவடிக்கை எடுத்து மீட்டெடுத்துள்ளோம்.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி தரும் இலட்சியங்கள்



நடை பழகும் ஒரு குழந்தை தனக்கு முன்னால் சிறிது தூரத்திலுள்ள பந்தை எடுக்கத் தத்தித் தத்தி செல்கிறது. அந்தப் பந்து இல்லாவிட்டால் அது அந்த இடத்தை நோக்கிப் போகாது. பந்தை எடுத்து வருவது அதற்கு இலட்சியம். நாம் அடைய வேண்டிய எல்லையும் நாம் கடக்க வேண்டிய இடைவெளியும் தெரியாவிட்டால் நாம் குறிப்பிட்ட இலட்சியத்தை அடைய முடியாது. குழந்தைக்கு முன்னால் பந்தை வைத்திருப்பது போல நமக்கு முன்னால் நாம் ஒரு இலட்சியத்தை வைக்க வேண்டும், உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதை அடைய நாம் திட்டங்கள் தீட்டி வழிமுறைகளை உருவாக்கிக் காலத்தைக் கணக்கிட்டுச் செயலில் இறங்க வேண்டும்.

### இன்றே முடிவு செய்யுங்கள்

உங்கள் இலட்சியத்தை இன்றே முடிவு செய்யுங்கள். கடந்து போன காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். காலம் கடந்துபோனது போனதுதான், இனித் திரும்ப வரப்போவதில்லை. இனி இருக்கின்ற காலத்தையாவது சரியாகப் பயன்படுத்துவோம்.

இலட்சியத்தை முடிவு செய்வதை சாதாரணமாக நினைக்காதீர்கள். இலட்சியம் உங்கள் வாழ்க்கைப் பிரச்சனை. இலட்சியத்தை முடிவு செய்வதைத் தள்ளிப்போட போட நீங்கள் அடைய வேண்டிய வெற்றிகளும் அனுபவிக்க வேண்டிய சுகங்களும் தள்ளிக் கொண்டே போகும். இலட்சியத்தை ஒரே நாளில் முடிவு செய்ய முடியாது தான். ஆனால் ஒரு சில நாட்களில், ஓரிரு வாரங்களில் அல்லது ஓரிரு மாதங்களுக்குள் முடிவு செய்துவிடலாம். அதற்குரிய தொடக்கம் - இன்றாகவே இருக்கட்டும். இந்த நிமிடத்திலேயே தொடங்குங்கள். இப்பொழுதே ஒரு தாளை எடுங்கள்; உங்கள் இலட்சியத்தை எழுதுங்கள்

### இலட்சியம் என்றால் என்ன?

இலட்சியம் என்பது வேறொன்றுமில்லை. வெளிப்படையாகச் சொல்லப் போனால் உங்களுடைய ஆசைகள்தாம். ஆம். ஆசைகள்தாம் இலட்சியங்கள். உங்கள் வாழ்நாளில் ஒரு வீடுகட்ட வேண்டும் என்று நினைக்கிறீர்கள், ஒரு கார் வாங்க வேண்டும் என்று ஆசைப் படுகிறீர்கள். நீங்கள் இந்த அளவு பி.ஏ., அல்லது எம்.ஏ., படிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். ஒரு மளிகைக் கடை வைத்திருப்பவர் சொந்தமாக ஒரு பெரிய கடை கட்டி அதில் வியாபாரம் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார். அரசியலில் இப்பொழுதுதான் நுழைந்துள்ள ஒரு தொண்டர் தான் அமைச்சர் ஆக வேண்டும் என்று விரும்புகிறார். வேறு ஒரு தொண்டரோ மாநில அரசியலே ஆகாது மத்திய அமைச்சர் ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஒரு ஓட்டல் அதிபர் தன் உணவு வகைகளை நவீனப்படுத்தி உலகின் எந்த நாட்டில் கேட்டாலும் நாங்கள் தயாரிக்கும் உணவுப் பண்டங்கள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்.

### இலட்சியத்தின் எல்லை

இலட்சியத்தின் எல்லையை வரையறுப்பது கூடாது. இலட்சியங்கள் தேவைக்கும் திறமைக்கும் ஏற்பக் காலத்திற்குக் காலம் வளர்ந்து கொண்டே போகும். ஒரு மில் போதும் என்று தொடங்கியவர்கள் அதன் நுட்பங்களை அறிந்த பின்னர் 10 மில்களை நடத்துகின்ற திறமையை வளர்த்துக்கொள்கிறார்கள். அதற்குரிய தகுதிகளும் அவர்கட்கு வந்துவிடுகின்றன.

நதி ஓடிக் கொண்டே இருப்பது போல இலட்சியங்கள் வளர்ந்து கொண்டே போகும். ஆதலின் இலட்சியத்திற்கு எல்லை இல்லை. உங்கள் முயற்சிதான் எல்லை. உங்கள் முயற்சிக்கு நீங்கள் முற்றுப் புள்ளி வைக்கும்போது இலட்சியத்தின் வளர்ச்சியும் முடிவுக்கு வந்து விடுகிறது.

மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

# நேரம் எப்போது வரும்?

"நா மட்டும் அப்பவே ஒழுங்கா படிச்சிருந்தா இந்நேரம் ஒரு நல்ல வேலையில இருந்துருப்பேன்", "இந்த வேலைய நேத்தே செஞ்சிருந்தேன்னா இன்னிக்கு யாரும் என்ன திட்டிருக்க மாட்டாங்க" என்று பலர் புலம்புவதை நம் காதால் கேட்டிருக்கிறோம். இழந்த பிறகு இன்னும் கொஞ்சம் கிடைக்காதா என மனிதன் ஏங்கும் ஒருசில விஷயங்களில் இந்த நேரமும் ஒன்று. கடந்து போன பிறகே அதன் முக்கியத்துவத்தை மனிதனுக்குப் புரிய வைக்கிறது. எந்த ஒரு நடந்து முடிந்த செயலையும் நம்மால் மறுபடி நிகழ்த்திக் காட்ட முடியும். ஆனால் அதே நேரத்தில் நிகழ்த்துவதென்பது தான் இயலாத காரியம்.

எனவே இழப்பதற்கு முன்பாகவே நேரத்தை முறையாக உபயோகப் படுத்திக் கொள்வது அவசியமாகிறது.

ஒரு சிறிய கதை. ஒரு நாட்டில் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் ஒருவர் இருந்தார். அவரிடன் ஒரு இளைஞன் செல்ல "குழந்தாய் உனக்கு என்ன பிரச்சனை இருக்கிறது?" என்று அவர் கேட்க, அதற்கு அவன் "என் வாழ்வில் நிம்மதியே இல்லை. நினைத்தது போல் எதுவும் நடக்க வில்லை. நினைத்ததை சாதிக்க முடிய வில்லை. என்னுடைய லட்சியங்களை அடையவும் முடியவில்லை. குடும்ப வாழ்க்கையிலும் அவ்வளவு நிம்மதியில்லை இதற்கு தாங்கள் தான் எனக்கொரு வழி கூற வேண்டும்" என்றான்.

சிறிது நேரம் யோசித்த அவர், "சரி நான் உனக்கு ஒரு நாளுக்கு 1440 வெள்ளிக்காசுகள் தருகிறேன். அதை நீ எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஆனால் நீ அதை சேமிக்க முடியாது. நான் காசு கொடுப்பதை ஒரு நாள் நிறுத்தி விடுவேன். என்றுடன் நிறுத்துவேன் என்றும் சொல்ல மாட்டேன். இப்போது சொல். அந்த காசுகளை நீ எவ்வாறு செலவிடுவாய்?" என்றார்.

சற்று யோசித்து அவன் "ஐயா.. அந்தக் காசுகள் எனக்கு மிகவும் முக்கியமானவை. அவற்றை மகிழ்ச்சியுடனும் கவனத்துடனும் செலவு செய்வேன். எனக்கு தேவையானவற்றை வாங்கிக் கொள்வேன். என் குடும்பத்தினருக்கும் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பேன். எஞ்சியிருக்கும் காசுகளை என் நண்பர்களும், உறவினர்களும் சுற்றத்தாரும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு செலவிடுவேன்" என்றான்.



இதனைக் கேட்ட பெரியார், "உன்னுடைய நேர்மையான பதிலைக் கண்டு மகிழ்கிறேன். இப்போது உன்னுடைய பிரச்சினைக்கு நீயே விடை கண்டுவிட்டாய்" என்றதும் இளைஞன் "புரியவில்லையே ஐயா " என்றான்.

அதற்கு பெரியார் "நான் 1440 வெள்ளிக் காசுகள் என்று கூறியது ஒரு நாளில் இருக்கும் 1440 மணித்துளிகளைக் குறிக்கிறது. அந்த மணித்துளிகள் வெள்ளிக்காசுகளைக் காட்டிலும் மதிப்பு மிக்கது. அது ஏழை, பணக்காரன், நல்லவன், கெட்டவன் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட ஒரு பொக்கிஷம். அதை ஒரு மனிதன் எவ்வாறு செலவிடுகிறானோ அதைப் பொறுத்தே அவனுக்கு வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். இப்போது உன்னுடைய பதிலிலேயே உன்னுடைய அத்தனை பிரச்சனைக்கும் தீர்வுகள் உள்ளது" என்றதும் தெளிவடைந்தவனாய் இளைஞன் வீடு திரும்பினான்.

இப்போது கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நம்மில் எத்தனை பேர் அந்த இளைஞனைப் போல் வாழ்ந்து வருகிறோம்? நம்மில் எத்தனை பேர் நம் குடும்பத்திற்காகவும், நண்பர்களுக்காகவும் உறவினர்களுக்காகவும் நேரத்தை ஒதுக்குகிறோம்?. எவ்வளவு நேரம் வேலை செய்தோம் என்பதை விட அந்த நேரத்தில் உபயோகமாக என்ன செய்தோம் என்பதே முக்கியம்.

நூல் மதிப்பீடு

# மலைப்பாடகன் - சக மனிதருக்கான குரல்

இன்ஸாப் ஸலாஹுதீன்

பூவுலகின் நண்பர்கள் வெளியிட்ட நண்பர் சாளை பஷீரின் மலைப்பாடகன் சூழலியல், மாற்று வாழ்வியல், அனைவருக்குமான கட்டடக் கலை, நுகர்வு வெறி, அணு உலை எதிர்ப்பு, இயற்கை விவசாயம், பழங்குடியினரின் பிரச்சினைகள் போன்ற முக்கிய விடயங்களை மையப்படுத்திய 13 கட்டுரைகளின் தொகுதியாகும்.

உலகமயமாக்கத்திற்கும் அதீத நுகர்வு வெறிக்கெதிராகவும் இன்று பல்வேறு போராட்டங்களும் எதிர்ப்புக்களும் நிகழ்ந்த வண்ணமுள்ளன. வாழ்க்கையின் வசீகரத்தை காவு கொள்ளும் இக் கொள்கைகளுக்கு எதிரான குரல்கள் உலகமெங்கும் மேலெழுந்த வண்ணமுள்ளன.

அந்தவகையில் இந்தியாவிலும் சுற்றுச் சூழல் மற்றும் மாற்று வாழ்வியல் குறித்த கருத்தாடல்களை பல்வேறு அமைப்புக்களும் தனிமனிதர்களும் நிகழ்த்தி வருகின்றனர்.

ஏன் இத்தகைய குரல்கள் உலகம் முழுக்க எழுகின்றன என்ற கேள்வி இங்கு முக்கியமானது? இதற்கான விடையை பஷீர் இப்படி முன்வைக்கிறார்.


"இப்பூவுலகின் மண், மலை, நன்னீர், கானுயிர்கள், பறவைகள், கடல், காடு, மரங்கள், கனிம வளங்கள், காற்று, மனித ஆற்றல் என அனைத்து இயற்கைக் கொடைகளையும் பணத்தாள்களாக மாற்றிப் பார்க்க முயலும் கண் மண் தெரியாத பேராசைதான் வர்க்க, வகுப்பு, சமூக மோதல்களாகவும், அணு ஆயுத உற்பத்தியாகவும், பழங்குடி அழிப்பாகவும் நாடுகளுக்கிடையேயான பகையாகவும் பாசிச வல்லாதிக்கமாகவும் வடிவமெடுக்கின்றது."

(எதிரலை பயணிகள், பக்-44)

இன்றைய உலகில் ஒவ்வொரு தனி மனிதனும் அதீத நுகர்வுக் கலாசாரத்திற்கெதிராக எதிர்வினையாற்ற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அந்தவகையில் சாளை பஷீர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் இவை என்றாலும் மொத்தமாகச் சேர்த்துப் படிக்கும் போது நமக்கு அவசியமான வாழ்க்கைக்கு அறைகூவல் விடும் எழுத்துக்களாகவே இருக்கின்றன.

அவரே சொல்வது போல "எல்லாத்




திசைகளிலிருந்தும் நம்மை வளைத்துப் பிடித்துள்ள உலகமயமாக்கம் தாராளமயமாக்கம் பெரு வணிக நிறுவனங்களின் ஆதாய வெறி ஆக்கிரமிப்பிற்கு எதிரான தற்காப்பு முயற்சியில் ஒரு சிறு கவசமாக இந்த எழுத்துக்கள் எழுந்து நிற்கும்..."

சுற்றுச் சூழல் கரிசனை, பசுமைச் சூழல் என்ற கருத்தாடல்கள் எல்லாம் மரம் நடுவதோடு முற்றுப் பெறும் அம்சம் அல்ல. மாறாக முழு வாழ்வியலையும் உள்ளடக்கிய ஒன்றாகவே காணப்படுகிறது.

அந்த மாற்று வாழ்வை நோக்கிய குரல்கள் இன்று எம்மை பல்வேறு வழிகளிலும் வந்தடைகின்றன.

ஆனால் நாம் யாரும் அத்தகைய ஒரு வாழ்க்கை முறைக்கு எம்மை ஒப்புக் கொடுக்கத் தயங்கியவர்களாகவே இருக்கிறோம்.

இக் கட்டுரைகள் வாழ்க்கையின் இன்னொரு பக்கம் நோக்கி எம்மை அழைத்துச் செல்கிறது. புதிய வாழ்வியலுக்கான பல்வேறு சாத்தியங்களைத் தொட்டுக் காட்டுகின்றது. அந்தவகையில் பஷீர் தான் அனுபவித்த உணர்ந்த விடயங்களையே பெரும்பாலும் பதிவு செய்துள்ளார்.

நூல் - மலைப்பாடகன்

ஆசிரியர் - சாளை பஷீர்

வெளியீடு - பூவுலகின் நண்பர்கள், தமிழ்நாடு, புதுச்சேரி

விலை - ரூ.100

விதையிலிருந்தே மரம் பயிற்சிப்பட்டறை குறித்த அனுபவங்களை மலைப்பாடகன் என்ற கட்டுரை பேசுகிறது.

பொதிகை மலை அடிவாரம் , தாமிரபரணி கரையோரத்தில் மூன்று நாட்கள் இயற்கையின் மடியில் தங்கிய அனுபவங்களையும் அதனூடு விரியும் வாழ்வையும் இங்கு அவர் பேசுகிறார்.

'மரம் நடுவோம் மழை பெறுவோம் என குடிமக்களுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டே மறு புறம் காடுகள், மலைகள், ஓடைகள், நதிகள், ஏரிகள், குளங்கள் கண்மாய்கள், அருவிகள், இயற்கை உயிரினங்களை தேச வளர்ச்சி என்ற பெயரில் அரசு அழித்து வருகின்றது.

அரசின் கண்மூடித்தனமான இந்த போக்கிற்கு குடி மக்கள் கொடுத்த விலைதான் உத்தரகாண்ட் பேரிடர். தேச பாதுகாப்பு என்ற பெயரில் அணு உலைகளும், தேச வளர்ச்சி என்ற பெயரில் கொள்ளை லாப கார்ப்பரேட் நிறுவனங்களும் நம் அருமை தாய் மண்ணையும், கடலையும், விண்ணையும் சீரழித்து வரும் நிலையில் நாம் அதன் பலிகடாக்கள் ஆகத்தான் வேண்டுமா? என்ற கேள்விகளுக்கு விடை காணும் முயற்சிதான் இந்த விதையிலிருந்தே மரம் பயிற்சி பட்டறை. " என எழுதுகிறார்.

இதுபோன்ற பட்டறைகள் இன்றைய நவீன வாழ்வின் சந்தடிகளிலிருந்து விலகி இயற்கையான வாழ்வு குறித்து சிந்திக்க உதவுகின்றது.

அனைவருக்குமான கட்டடக் கலை குறித்த விரிவான இரண்டு கட்டுரைகள் இத்தொகுதியில் அமைந்துள்ளன. லாரி பேக்கர் என்ற அதிசய கட்டடக் கலைஞனின் சுவாசிக்கும் வீடுகள் குறித்த விரிவான பதிவுகளை இங்கே காணலாம்.

நாம் வாழும் வீடுகள் வாழ்வதற்குப் [illegible]

கேள்வி கட்டுரையை வாசிக்கும் போது மனதில் எழுகிறது.

லாரி பேக்கர் காந்தியின் சிந்தனையினால் கவரப்பட்ட ஒரு ஐரோப்பிய கட்டடக் கலைஞர். இருந்தாலும் அவரது தேடல் இந்தியாவில்தான் நிறைவு பெறுகிறது.

அவரது கட்டடக்கலை குறித்த அருமையான விளக்கங்களை இங்கே காண முடிகிறது. வெறுமனே அது கட்டடக் கலை என்பதையும் தாண்டி அதன் உள்ளம்சம் குறித்து இப்படி எழுதுகிறார்.

"போர், ஆக்கிரமிப்பு, ஃபாஸிசம், நுகர்வு வெறி, பெருந்தொழில் மயம் ஆகியவை இன்று கொடு வாளை மூர்க்கமாக சுழற்றுகின்றன. அவற்றை எதிர்கொள்ளும் கேடயங்களாக அஹிம்சை, போர் வெறுப்பு, எளிமையான வாழ்க்கை, கிராமீய கைத் தொழில், மனித நேயம் ஆகியவற்றை முன்வைத்தனர் காந்தியும் லாரன்ஸ் வில்ஃப்ரட் பேக்கரும்."

இவை தவிர நூல் மதிப்புரை, ஆவணப் படம் குறித்த பதிவுகள் நூலில் இடம்பெறுகின்றன. இவை இன்னும் விரிவாக எழுதப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

குக்கூ காட்டுப் பள்ளி குறித்த விரிவான ஒரு நேர்காணல் நூலில் இடம்பெறுகிறது. இன்றைய கல்வி முறையின் இறுகிய அம்சங்களையும் மாற்றுக் கல்வி குறித்த யதார்த்தங்களையும் இந்த நேர்காணல் விரிவாகப் பேசுகிறது.

மாற்றுக் கல்வி முறையில் குக்கூ காட்டுப் பள்ளி எப்படி ஒரு முன்னுதாரணமாக இருக்கலாம் என்பதை நேர்காணலினூடாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

எல்லாக் கட்டுரைகளிலும் இழந்த ஒரு வாழ்வின் வலியும் நுகர்வு வெறிக்கெதிரான கோபப் பார்வையும் கலந்தே இருக்கின்றன. நுகர்வு வெறி ஒரு புயலென வந்தாலும் நம் கையிலுள்ள காற்றாடியும் ஆயுதம்தான் என்ற அளவில் நாம் போராட வேண்டியிருக்கிறது என்பதையே இந்த நூல் சொல்கிறது.

பஷீரின் உள்மனதில் மாற்று வாழ்வியலுக்கான தேடலும் நாட்டமும் வேரெனப் பதிந்து கிடக்கின்றது. வாழ்வாதாரத்திற்கான போராட்டம் மிகுந்த வாழ்விலும் அவர் அதனை விட்டுக் கொடுப்பதில்லை. இலக்கிய நிகழ்வுகளாக இருக்கலாம், விவசாயப் பயிற்சி முகாம்களாக இருக்கலாம் சாத்தியப்படுகின்ற எல்லாவற்றிலும் அவரது பிரசன்னம் நிச்சயம் இருக்கும். அந்த ஈடுபாடே அவரது வாழ்வையும் எழுத்தையும் சுவாரஸ்யம் மிக்கதாய் மாற்றுகிறது என நினைக்கிறேன்.

நுகர்வியத்திற்கு எதிரான ஒரு குரலாக, ஆவணமாக பஷீர் இந்த நூலை முன் வைக்கிறார். அது ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கை அனுபவமாக, உளக்கிடக்கையாக வெளிப்படுவதே இந்த நூலின் பிரதான அம்சம்.

இந்த உலகம் எல்லோருக்குமானது. மனிதர்களுக்கானது, தாவரங்களுக்கானது, பறவைகளுக்கானது, விலங்குகளுக்கானது. ஆனால் அதீத நுகர்வுக் கலாச்சாரம் அதனைத் தகர்த்து ஒரு துருவ நிலைக்கு உலகைக் கொண்டு செல்ல நினைக்கிறது.

இந்த ஒற்றை ஆதிக்கத்துக்கு எதிரான ஒரு அனுபவம் சார் எழுத்தாக நம்முன் நிற்கிறது இந்தப் பிரதி. மலைப்பாடகன் நம் அக மௌனத்தைக் கலைக்கிறான். நாம் வாழும் பூமியின் ஒவ்வொரு அங்குலமும் சுரண்டப்படுவதை, மாசுபடுத்தப்படுவதை, யாரோ ஒருவருக்கு விற்கப்படுவதை நமக்கு உணர்த்துகிறான்.

"எல்லோருடைய ஆசைக்கும் இந்த உலகம் போதுமானது. ஆனால் எல்லோருடைய பேராசைக்கும் போதுமாகாது" என்று யாரோ எழுதியது போல அனைவருக்குமாகவே இந்தப் பூமி படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருசிலர் அதனை உறிஞ்சிக் குடிக்க முற்படுவதை நாம் ஒவ் வொருவரும் எதிர்க்க வேண்டியுள்ளது. அந்த எதிர்வினையின் தார்மீகக் குரலாக மலைப் பாடகன் இருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு



## பங்களாதேஷ் U19 கிரிக்கெட் அணி பயிற்றுவிப்பாளராக நவீட்

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான நவீட் நவாஸ், பங்களா தேஷின் 19 வயதிற்கு உட்பட்ட தேசிய கிரிக்கெட் அணிக்கு தலைமை பயிற்றுவிப்பாளராக நியமனம் செய்யப் பட்டிருக்கின்றார். இவர் இலங்கை கிரிக்கெட் அணிக்காக ஒரு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். 44 வயதாகின்ற நவீட் நவாஸ் இலங்கையின் 19 வயதுக்கு கீழ்ப்பட்ட கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக 2009 ஆம் ஆண்டில் செயற் பட்டிருந்ததோடு, இலங்கை A கிரிக்கெட் அணி மற்றும் இலங்கை மகளிர் அணி ஆகியவற்றுடனும் இணைந்து பணிபுரிந்த அனுபவத்தைக் கொண்டிருக் கின்றார்.

அண்மையில் நியூசிலாந்தில் நடைபெற்று முடிந்த 19 வயதுக்கு கீழ்ப்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணத்தில், அவுஸ்திரேலியா வின் டேமியன் வ்ரைட்டினால் பயிற்றுவிக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் அணி, குறிப்பிட்ட உலகக் கிண்ணத் தொடரில் ஆறாம் இடத்தைப் பெற்றிருந்தது. எனினும், புதிய பயிற்றுவிப்பாளர் மூலம் பங்களாதேஷின் இளையோர் அணி 2020 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ள 19 வயதுக்கு கீழ்ப்பட்டோருக்கான அடுத்த கிரிக்கெட் உலகக் கிண்ணத்தில் இதனை விட சிறந்த பதிவைக் காட்ட பங்களாதேஷ் கிரிக்கெட் சபை எதிர்பார்க்கின்றது.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக ஒரு சில சர்வ தேச போட்டிகளிலேயே நவீட் நவாஸ் விளையாடியிருக்கின்ற போதிலும் உள்ளூர் முதல்தர போட்டிகளில் அவரது பதிவு பிரமிக்க வைக்கும் வகையில் இருக்கின்றது. உள்ளூர் முதல் தரப் போட்டிகளில் 7,000 இற்கும் கிட்டவான ஓட்டங்களை குவித்திருக்கும் நவீட் நவாஸ் 12 சதங்களையும், 42 அரைச் சதங்களையும் விளாசியிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.



## இலங்கைக்கு நான்கு சர்வதேச கால்பந்து போட்டிகள்

இலங்கை கால்பந்து அணி 'சாப்' கால்பந்து போட்டியைத் தொடர்ந்து மூன்று சர்வதேச நட்புறவுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் செயலாளர் ஜஸ்வர் உமர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி மலேஷிய அணியுடன் கொழும்பு ரீட் மாவத்த மைதானத்தில் ஒரு போட்டி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், சிங்கப்பூர், மாலைதீவு அணிகளுடன் இரண்டு நட்புறவுப் போட்டிகளை இம்மாத இறுதியில் நடத்தி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தெற்காசிய கால்பந்துப் போட்டி எதிர்வரும் செப்டம்பர் 4 - 15 வரையில் பங்களாதேஷ் டாகாவில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்காகத் தயாராகி வரும் இலங்கை தேசிய கால்பந்து அணி தற்பொழுது ஜப்பானில் வதிவிடப் பயற்சியில் பங்குபற்றி வருகிறது. அதனைத் தொடர்ந்து தென்கொரியா சோல் நகரிலும் பயிற்சி முகாமொன்றில் பங்குபற்றவுள்ளது.

ஆசிய காற்பந்து தரப்படுத்தலின் படி, மாலைதீவு 30 ஆவது இடத்திலும் சிங்கப்பூர் மற்றும் மலேஷியா முறையே 35,36 ஆவது இடங்களிலும் உள்ளன. இலங்கை 45 ஆவது இடத்தில் உள்ளது. சாப் போட்டிகளில் கலந்து கொள்ளும் நாடுகளுள் உலகத் தரப்படுத்தலின் படி 97 ஆவது இடத்தில் உள்ள இந்தியா முதலில் உள்ளது. இம்முறை சாப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை இந்திய அணியை எதர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2022 கட்டார் உலகக் கிண்ண கால்பந்து தொடரின் திகதி அறிவிப்பு



எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 22ஆவது FIFA உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியை நடத்தும் பொறுப்பு ரஷ்யாவில் நடைபெற்ற எளிமையான நிகழ்ச்சியில் வைத்து, மத்திய கிழக்கு நாடான கட்டாரிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக் கப்பட்டது. மத்திய கிழக்கு நாடொன்றில் முதல் முறையாக அரங்கேறும் இந்த உலகக் கிண்ணப் போட்டிகள் வழக்க மான மே, ஜூன், ஜூலை மாதங்களில் இல்லாமல் நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

மொஸ்கோவின் லுஸ்னிகி மைதானத்தில் நடைபெற்ற இம்முறை உலகக் கிண்ணத் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னர் 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் பொறுப்பை கட்டாரிடம் ஒப்ப டைக்கும் வைபவம் ரஷ்ய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், கட்டார் நாட்டு அமீர் ஷேக் தமிம் பின் ஹமாத் அல்-தானி, பிஃபா தலைவர் ஜியானி இன்பான்டினோ ஆகியோர் பங்கேற்றனர். இதில் ரஷ்ய ஜனாதிபதி புடின், கட்டாரின் அமீர் ஷேக் தமிம் பின் ஹமாத் அல்-தானியிடம் கால்பந்து ஒன்றை வழங்கி, அடுத்த உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தார்.



திகன – ஹிஜ்ராபுர பாடசாலையின் 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கான RVC (ரமழான் பாடநெறி) பரிசளிப்பு விழா 23.06.2018 அன்று ஹிஜ்ராபுர இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தும்பர மஸ்ஜிதுகள் சம்மேளனத்தின் தலைவர் அல்ஹாஜ் MMM. இஸ்ஹாக் (Bsc) அவர்களும் OMSED நிறுவனத்தின் தலைவர் அஹ்ஸன் ஆரிப் (நளீமி) அவர்களும் விஷேட அதிதியாக பாடசாலையின் அதிபர் M.I.M இல்யாஸ் (Bsc – phy.sc) அவர்களும் வளவாளராக அஷ்ஷெய்க் இஜ்லான் (ரஹ்மானி) அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வை அக்குறனை Ababeel Youth ஊடாக திகன ALBIR ORG மற்றும் OGA (ஹிஜ்ராபுர பாடசாலை உறுப்பினர்கள்) ஏற்பாடுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஆலோசனை மற்றும் நல்லிணக்க பேரவையும் (ஏ.ஆர்.சி) முஸ்லிம் சமய விவகார அமைச்சும் இணைந்து தேசிய மஸ்ஜித் விருது விழா ஒன்றை கடந்த சனிக்கிழமை (14) நடாத்தியது. அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சபாநாயகர் கருஜெயசூரிய கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச். அப்துல் ஹலீம், அமைச்சர்களான மனோ கணேசன், றிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பிரதி அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம். மலிக், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் றிஸ்வி முப்தி, பேராசிரியர் தம்பர அமில தேரர் உள்ளிட்ட பெருந்திரலானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



GIVE2LANKA, ஸம் ஸம் பவுண்டேஷன் நிறுவனங்களின் அனுசரணையுடன் MFCDயினால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கடந்த வெள்ளி (6/7/2018) அன்று புத்தளம் கரைத்தீவு பிரதேசத்தில் உள்ள ஒரு குடும்பத்திற்கு வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் MFCD நிறுவனத்தின் தலைவர் ஹனான் ஹுசைன், GIVE2LANKA நிறுவனத்தின் தலைவர் துலான் டீ சில்வா, ஸம் ஸம் பவுண்டேஷனின் தலைவர் முப்தி யூஸுப் ஹனிபா, MFCD நிறுவன நிகழ்ச்சித் திட்டப் பொறுப்பாளர் எம்.ஐ.எம். ஹஸீம் ஆகியோர் உள்ளிட்டு ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Vajiragnana Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org